# எண்பதுகளில் தமிழ்ப்புனைகதைகளில் பெண்ணியம்

முனைவர் சு. வேங்கடராமன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# எண்பதுகளில் தமிழ்ப்புனைகதைகளில் பெண்ணியம்

சு. வேங்கடராமன்
தலைவர், தற்கால இலக்கியத் துறை
தமிழியற்புலம்
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை-600 113.

முனைவர் மு. வரதராசனார்
அறக்கட்டளைச் சொற்பொழிவு-4
(15, 16-2-93)

Dr. M. Varatharacanar Endowment Lecture No. 4
Endowment Leoture Publication No. 38

---

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Enpathukalil Tamilppunaikathai-kalil Penniyam |
| Author | : | *Dr S.Venkataraman*, Reader&Head, Dept. of Modern Literature, School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai-625021 |
| Publisher & copy right | : | International Institute of Tamil Studies, T.T.T.I. *(Post)*, Taramani, Madras-600 113 |
| Publication No. | : | 172 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | June, 1993 |
| Edition | ; | First |
| Paper used | : | 60 GSM White Creamove TNPL Paper |
| Size | : | 21×14 |
| Printing types | : | 10 Point |
| No. of copies | : | 1200 |
| No. of Pages | : | 12+108 |
| Price | : | Rs. 18/- |
| Printers | : | Pavai Printers Pvt Ltd Madras-14, Phone: 832441. |
| Artist | : | Sathya |
| Subject | : | Feminism in Tamil Fiction of Eighties |


---


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

# பதிப்புரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முதல் மதிப்புறு இயக்குநரும் தமிழறிஞருமான முனைவர் மு. வரதராசனாரைச் சிறப்பிக்குமுகமாகத் தோற்றுவிக்கப்பட்டது, 'முனைவர் மு. வரதராசனார் அறக்கட்டளை'. இதன் நான்காவது சொற்பொழிவு (15, 16-2-93) இந்நூல்.

நிறுவன அழைப்பின் பேரில் இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவினை முனைவர் சு. வேங்கடராமன் நன்முறையில் நிறைவேற்றித் தந்துள்ளார். இன்று பலராலும் பேசப்பட்டு வரும் பெண்ணியச் சிந்தனைகள், தமிழ்ப்புனைகதைகளில் (1980 முதல் 1989 வரை வெளிவந்தவை) எங்ஙனம் அமைந்துள்ளது என்பதனை இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார். மணவாழ்வு, குடும்பச் சிதைவு, கற்புக்கோட்பாடு, பெண்ணுரிமை எனும் நான்கு கோணங்களில் மிகத் தெளிவாகவும் விரிவாகவும் ஆராய்ந்துள்ளார். எண்பதுக்கு முன்னிலையுடன் ஒப்பிட்டு, பெண்ணியச் சிந்தனை வளர்ச்சி பெற்றிருப்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார். இத்துறையில் சிறந்ததொரு நூலை வழங்கியுள்ள நூலாசிரியருக்கு நிறுவனம் நன்றி தெரிவிக்கின்றது.

நிறுவனத்தில் இவ்வறக்கட்டளை நிறுவ உதவிய சான்றோர்; சொற்பொழிவிற்கு அழைப்பு விடுத்து, பொழிவிற்கும் நூலாக்கத்திற்கும் களமமைத்த இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்; சொல்லகராதி தயாரித்தளித்த ஆய்வு மாணாக்கர் ச. ஜெயசீலன்; செவ்வையாக அச்சிட்டுத் தந்துள்ள பாவை அச்சகத்தார் இவர்கள் அனைவருக்கும் நன்றி.

சென்னை—113
17-6-93

அன்புடன்
**ச. சிவகாமி**
அறக்கட்டளைப் பொறுப்பாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

## ஆசிரியர் அறிமுகம்

முனைவர் கூ. வேங்கடராமன் 26.04.1949 அன்று மதுரையில் பிறந்தவர். எம்.ஏ., பிஎச்.டி., பட்டங்களையும் வடமொழி மொழியியல் ஆகியவற்றில் நிறை சான்றிதழ்களையும் (Diploma) பெற்றவர். மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில் தற்கால இலக்கியத்துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

எழுதியுள்ள நூல்கள் : 17

எழுதியுள்ள கட்டுரைகள் : 120

தற்கால இலக்கியத் திறனாய்வு, வைணவம் ஆகியதுறைகளில் ஆழமான ஈடுபாட்டுடன் உழைத்துவருபவர். அண்மைக் காலமாகப் பெண்ணியத் திறனாய்வுக் கோட்பாடுகளில் ஆழங்காற்பட்டு வருகிறார்.

# முன்னுரை

உலகம் எங்கும் சமூக வாழ்க்கையில் ஏற்பட்டுவரும் பெண் விடுதலைச் சிந்தனையின் பகுதியாகப் பெண்ணிய இலக்கியக் கொள்கைகள் படைப்பிலக்கியங்களிலும் வெளிப்படுகின்றன. எண்பதுகளில் வெளியான தமிழ்ப் புனைகதைகளில் பெண்களின் குடும்ப, சமூக வாழ்க்கைச் சிக்கல்கள் எவ்வாறு சித்திரிக்கப் பட்டுள்ளன என்று ஆய்வதை முதன்மை நோக்கமாக இந்த நூல் கொண்டுள்ளது. பெண்விடுதலை இயக்கச் செயற்பாடு களுள் ஒன்று, இலக்கியத்தைப் பெண்ணியத் திறனாய்வில் ஆராய்வதாகும். கேட்மில்லட் என்பார் எழுதிய 'பாலின அரசியல்' நூலில் இத்திறனாய்வைப் பயன்படுத்தியுள்ளார். அந்த அடிப்படையில், எண்பதுகளில் வெளியான தமிழ்ப் புனைகதைகளில் பெண்ணியச் சிந்தனைகளை ஆய்வது இதன் நோக்கமாகும்.

பிரச்சினைகளை எதிர்கொள்வது, அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவது, தனித்து வாழ்வது, விழிப்புணர்வு பெறுவது, சக பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது, பெண் குழந்தைகளைப் பொறுப்புடன் வளர்ப்பது ஆகிய பன்முக வீச்சில் இப்புனைகதைகள் நம்பிக்கைக் குரலை வெளிப்படுத்து கின்றன. முன் எப்பொழுதும் காணாத அளவில், சமய நிறுவனங்களில் காணப்படும் பெண்ணை இழிவுபடுத்தி அடிமைப்படுத்தும் ஆணாதிக்கத்தை, எதிர்க்கும் போக்கு எண்பது களில் மிகுதியாக வெளிப்பட்டு உள்ளது. பெண்ணியமொழி உருவாக்கம் குறித்த முனைப்பான திசையில், எண்பதுகளில் இப்புனைகதையாளர்களின் சிந்தனைகள் வெளிப்பட்டுள்ள பாங்கும் குறிப்பிடத்தக்கதாகும்.

எண்பதுகளில் வெளியான புனைகதைகளில் பெண் வீட்டை விட்டு வெளியேறி (அல்லது வெளியேற்றப்பட்டு), தனித்து நின்று வாழ்வது அழுத்தமாகச் சுட்டப்பட்டுள்ளது. குடும்ப நிறுவனம், ஆணாதிக்கத்திற்கும், மிதமிஞ்சியமையக்குவியலான அதிகாரத்திற்கும் இடம்தந்து பெண்ணை அடிமைப்படுத்தும் போது, பெண் அதைவிடுத்து வெளியே வந்து, அதை எதிர்த்து, மாற்றத்திற்குப் போராடவேண்டும் என்று மீண்டும் மீண்டும் காட்டப்படுகிறது. பெண்விடுதலை என்பது ஆண்களுக்கும் சம்பந்தமான ஒன்று. பெண்ணை அடிமைப்படுத்தி வைத்திருக்கும்

வரை ஆணை மேம்பட்டவன் என்று கருதமுடியாது. சரிநிகர் சமானமாக ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் சமூக மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்று இப்புனைகதைகள் வலியுறுத்துகின்றன. மனித வளமேன்மைக்கும் ஆற்றல் வெளிப்பாட்டிற்கும் பெண்ணடிமைத்தனம் தடையாக இருக்கிறது. எனவே, ஊறு விளைவிக்கும் அத்தடைக்கல்லை அகற்ற வேண்டும் என்ற முயற்சி இப்படைப்பாளர்களிடம் காணப்படுகிறது.

டாக்டர் மு. வரதராசனார் பெயரில் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் அமைந்து உள்ள அறக்கட்டளை சார்பில் 1993 ஆம் ஆண்டு பிப்ரவரி 15, 16 ஆகிய இருநாட்களில் நிகழ்த்திய சொற்பொழிவுகளே இந்த நூலாக வருகின்றன. சொற்பொழிவு ஆற்றும் வாய்ப்பைத் தந்ததுடன் விரைந்து நூலையும் கொண்டுவந்த நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு, அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் ச. சிவகாமி ஆகிய இருவருக்கும் என் மனமார்ந்த நன்றி. பெண்ணியத் திறனாய்வுக் கோட்பாடுகளை எனக்கு அறிமுகப்படுத்தி, அந்நெறியில் என்னை ஆற்றுப்படுத்திய முனைவர் வி.பி. தேவதத்தா (பேராசிரியை, தமிழ்த்துறைத் தலைவர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், சென்னை) அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதில் பெருமை அடைகிறேன். தேவையான நூல்களைப் பெற உதவிய முனைவர் எம்.ஏ. சுசிலா (தமிழ்ப் பேராசிரியை, பாத்திமா கல்லூரி, மதுரை), திருமதி சந்தோஷ்குமாரி (தமிழ்ப் பேராசிரியை, வி.வி.வி. வன்னியப் பெருமாள் நாடார் மகளிர் கல்லூரி, விருதுநகர்) ஆகியோருக்கு என் நன்றி. வேண்டிய நூல்களை உடனுக்குடன் திரட்டி அனுப்பித் தந்ததுடன், இருநாட்களிலும் உடன்வந்து பொழிவுகளைக் கேட்டு உற்சாகப்படுத்திய சகோதரர், அகிலன் கண்ணனுக்கு என் நன்றி. சொற்பொழிவுகளுக்கு வந்து, விவாதங்களை எழுப்பி என் சிந்தனைகளைக் கூர்மைப்படுத்திக் கொள்ள உதவிய பாரதி ஆய்வாளர் திரு பெ.சு. மணி, டாக்டர் அ.அ. மணவாளன் டாக்டர் கு. தாமோதரன் (ஹைடெல்பெர்க் பல்கலைக்கழகம், செர்மனி), டாக்டர் ம. இராசேந்திரன் ஆகியோருக்கும் என் நன்றி.

மதுரை.

**சு. வேங்கடராமன்**

# நூலறிமுகம்

தமிழ்ப் புனைகதைகள் வெறும்பொழுது போக்கு எழுத்துக்களாக விளங்கும் நிலையிலிருந்தும் மாறி, ஆழமான சமூகப் பார்வையை உடையதாகத் தொடக்க காலந்தொட்டு இருந்து வருகிறது. காலங்காலமாக, நம்முடைய சமூக மரபில் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்களைக் குடும்ப, சமூக நிலைகளில் படைப்பாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். சில பிரச்சினைகள் தொடர்ந்து காணப்படுவதும், சில மாறியும், வேறுபட்டும், புதிய பரிமாணங்களைப் பெற்றும் வந்துள்ளன. ஆழமான சமூகப் பிரச்சினைகளை மையமிட்டு எழுதப்படும் புனைகதைகள், சமூகவியலாளருக்கும், சமூக வரலாற்று ஆசிரியர்களுக்கும் உதவும் சமூக ஆவணங்களாக உள்ளன. தமிழ்ச் சமூக வாழ்க்கையை, அதன் சகல விதமான போக்குகளுடனும் காட்டுவதால், புனைகதைகள் ஆவணங்களாகின்றன. வெறும் பொழுதுபோக்கு எழுத்துக்கள், வணிக இதழ்களில் பக்கநிரப்பிகளாக வரும் அச்சுருவங்கள் இத்தகுதியைப் பெறுவதில்லை.

படிக்கும் வாசகர்களிடையே குறிப்பாகப் பெண்களிடையில், தீவிரமான விழிப்புணர்வையும், துணிவையும் ஊட்டக் கூடிய பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள் பற்றிய புனைகதைகள், சமகாலச் சமூக வரலாற்று ஆவணங்களாகவும் விளங்குகின்றன. உலகெங்கிலும் சமூக வாழ்க்கையில் ஏற்பட்டு வரும், பெண் விடுதலைச் சிந்தனையின் பகுதியாகப் பெண்ணிய இலக்கியக் கொள்கைகள் (Feminist Literary Theories) படைப்பிலக்கியங்களிலும் நன்கு வெளிப்படுகின்றன. தமிழ்ப் புனைகதைகளிலும் இப்போக்கு தீவிரமாக வெளிப்பட்டு வருகிறது. இப்புனைகதைகளைக் கற்பதற்கும், புரிந்து கொண்டு சுவைப்பதற்கும் சமூகவியல், வரலாறு, அரசியல், பண்பாடு, உளவியல், மானுடவியல் போன்ற பிற துறைக்கல்வி இன்றியமையாதது. இந்தப் பின்னணியில் ஆழமான, பல்துறைச் சல்விச் சிந்தனைகளுக்கும் உரிய நிலைக்களன்களாகப் புனைகதைகள் விளங்கி வருகின்றன. ஆகவே, புனைகதைகளைப் பெண்ணியத் திறனாய்வு நேர்க்கில் ஆராய்வது அவசியமாகிறது.

## நோக்கம்

எண்பதுகளில் வெளியான தமிழ்ப் புனைகதைகளில் பெண்களின் குடும்ப, சமூக வாழ்க்கைச் சிக்கல்கள் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளன என்று காண்பது இந்த நூலின் மைய நோக்கம். பெண்களின் சிக்கல்கள் என்று பேசப்படும் பொழுது, அவற்றிற்குக் காரணமான சமூக அமைப்பு, குடும்ப நிறுவனம், அதிகார, ஆதிக்க உடைமை மனப்போக்குகள் ஆகிய ஆண் நிலைப்பாடுகள் முதன்மையாகின்றன. காலங்காலமாகப் பெண்ணிற்கு மட்டும் விதிக்கப்பட்டுவரும் கற்பு நெறி, உரிமை மறுப்பு போல்வனவும் தொடர்ந்து சிக்கல்களுக்குக் காரணமாகின்றன. ஆகவே, **எண்பதுகளில் தமிழ்ப் புனைகதைகளில் பெண்ணியம்** என்று இந்த நூலின் நோக்கம் மையப்படுத்தப் பட்டுள்ளது.

## சான்றாதாரங்கள்

எண்பதுகளில் முதற் பதிப்பாகத் தமிழகத்தில் வெளியான நாவல், சிறுகதைகளிலிருந்து பின்வரும் புனைகதைகள் சான்றாதாரங்களாக இந்த ஆய்விற்குக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றைத் தேர்ந்ததற்குச் சில காரணங்கள் உண்டு. படைப்பாளர்களிடம் காணப்படும் பெண்ணியச் சிந்தனை, சமூக பிரச்சினையை நன்கு ஆழமாக, தீவிரத் தன்மையுடன் வெளிப்படுத்தும் பாங்கு, படிப்பவரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கம், வரலாற்றுப் பின்னணியில் பிரச்சினைகளை முன்வைக்கும் நேர்மையான முயற்சி, பெண்ணியச் சிந்தனைகளை மலினப்படுத்திக் கொச்சையாக்கிவிடாத பங்களிப்பு ஆகிய அடிப்படைகளில் இவை தேர்வு செய்யப்பட்டுள்ளன. மாறாக, பொழுதுபோக்கிற்காகவும் பரபரப்பான விற்பனை, உணர்வுத்தூண்டல்களுக்காகவும் படைக்கப்படும் எழுத்துக்கள் கவனமாக நீக்கப்பட்டுள்ளன.

## நாவல்கள்

1. வெந்து தணிந்த காடுகள் — இந்திரா பார்த்தசாரதி
2. மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள் — வாஸந்தி
3. திறக்காத ஜன்னல்கள் — ,,
4. எல்லைகளின் விளிம்பில் — ,,
5. ஒரு சங்கமத்தைத்தேடி — ,,
6. சுருதிபேதங்கள் — ,,
7. சேற்றில் மனிதர்கள் — ராஜம் கிருஷ்ணன்

8. மானுடத்தின் மகரந்தங்கள் — ராஜம் கிருஷ்ணன்
9. மண்ணகத்துப் பூந்துளிகள் — ,,
10. ஓசைகள் அடங்கிய பிறகு — ,,
11. சுழலில் மிதக்கும் தீபங்கள் — ,,
12. ஆண்களோடு பெண்களும் — ,,
13. ஊமை அரண்கள் — ,,
14. புதிய சிறகுகள் — ,,
15. சுந்தரகாண்டம் — ஜெயகாந்தன்
16. பைசா நகரத்துக் கோபுரங்கள் — இந்துமதி
17. சக்தி 81 — ,,
18. இருளில் தொலைந்த உண்மை — லக்ஷ்மி
19. பாலங்கள் — சிவசங்கரி
20. சந்தியா — பிரபஞ்சன்
21. ஆத்துக்குப் போகணும் — காவேரி (லக்ஷ்மி கண்ணன்)
22. மன்மதனைத்தேடி — ஜோதிர்லதா கிரிஜா

**சிறுகதைகள்**

1. களம் — ராஜம் கிருஷ்ணன்
2. வீட்டின் மூலையில் ஒரு சமையலறை — அம்பை
3. ஓசைகள் — லக்ஷ்மி கண்ணன்
4. அம்மா — ஆர். சூடாமணி
5. அரசிகள் அழுவதில்லை — திலகவதி
6. பருவங்கள் மாறும் — எம். ஏ. சுசிலா
7. ஒரு மனுஷி — பிரபஞ்சன்
8. பயணம் — வாஸந்தி
9. ஆதாரசுருதி — கீதா பென்னட்
10. தமயந்தியின் சிறுகதைகள் — தமயந்தி

இப்புனைகதைகள் மட்டும் இந்த ஆய்விற்குச் சான்று ஆதாரங்களாக அமைகின்றன.

**அணுகு முறை**

இப்புனைகதைகள் சான்றுகளாக அமைய, மணவாழ்வு, குடும்பச்சிதைவு, கற்புக்கோட்பாடு, பெண்ணுரிமை என்ற நான்கு இயல்களாக ஆய்வுநூல் அமைந்துள்ளது. பெண்ணிய இலக்கியக் கொள்கைகள் அடிப்படையில், பெண்ணிய அணுகு முறையில் இந்த நூல் அமைகிறது. பெண்விடுதலை இயக்கத்தின் செயல்பாடுகளுள் ஒன்று இலக்கியத்தைப் பெண்ணியத் திறனாய்வைப் பயன்படுத்தி ஆராய்வதாகும். கேட் மில்லட்

என்பார் எழுதிய 'பாலின அரசியல்' என்னும் நூலில் இத் திறனாய்வைப் பயன்படுத்தியுள்ளார். அந்த அடிப்படையில், சமகாலப் புனைகதைகளின் பெண்ணியச் சிந்தனைகளை இந்நூல் ஆய்கிறது. காலந்தோறும் பெண்களுக்கென்று கூறப்படும் சில கட்டுப்பாடுகள் (கற்புக்கோட்பாடு, அடங்கி அடிமையாக இருத்தல், தனக்கென வாழாமை, எச்சூழலிலும் வீட்டைவிட்டு வெளியேறாத நிலை போல்வன), பெண்ணைப் பற்றிய மரபு வழிப் பிம்பங்கள் என்பன உடைக்கப்பட்டு, புதிய போக்குகளை இப்படைப்புக்கள் சித்திரிப்பதை இந்த நூலில் காணலாம். பிரச்சினைகளைக் காட்டுவதுடன், துணிவுடன் அவற்றை எதிர் கொள்வது, அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவது, தனித்து வாழ்வது, விழிப்புணர்வு பெறுவது, சக பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது, பெண் குழந்தைகளைப் பொறுப்புடன் வளர்ப்பது என்று பரிமாணங்கள் வளர்ந்து பன்முக வீச்சில் இப்புனைகதைகள் நம்பிக்கைக் குரலை வெளிப்படுத்துகின்றன.

இவற்றை வெளிப்படுத்தும்போது, சமூகவியல், வரலாற்றுப் பின்னணி இவற்றை அறிந்து பெண்ணியச் சிந்தனைகளை முன் வைக்கும்போது, **சோசலிசப் பெண்ணிய** நிலைப்பாடு, இப் படைப்பாளர்களிடம் காணப்படுகிறது. மார்க்சிய அணுகுமுறையோடு செயல்படுவதாக இது விரிகிறது. பெண்ணை இழிவு படுத்துதல், அடிமையாக்குதல், இரண்டாந்தரக் குடியுரிமையுடைய நிலையில் நடத்துதல் ஆகிய அனைத்தையும் எதிர்த்துப் போராடும் செயற்பாடுகளை இப்படைப்பாளர்கள் ஆழமாக விளக்குகின்றனர். மணவிலக்கு, குடும்ப நீதிமன்றம், தனிக் குடும்பச் சிதைவு என்பவை வரையிலும் புதிய ஆரோக்கியமான போக்குகள் இவற்றில் இடம் பெறுவதும், சமய நிறுவனங்களில் பெண்ணை இழிவுபடுத்தும் ஆணாதிக்கத்தை எதிர்ப்பதும் தமிழ்ப் புனைகதைகளில் முன்னெப்போதும் காணாத வளர்ச்சியாகும். பெண்ணிய மொழி உருவாக்கம் குறித்த முனைப்பான திசையில் இப்புனைகதையாளர்கள் சிந்தனைகள் விரிந்துள்ள பாங்கும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

இந்த நூலில் ஆளப்படும் சான்றுகளாக அமையும் சிறுகதைத் தொகுப்புக்களில் இருந்து ஒன்றோ, பலவோ சிறுகதைகளே எடுத்து ஆளப்பட்டுள்ளன. மேற்கோள்களாக ஆளப்படும் புனைகதைச் சான்றுகளுக்கு ஆங்காங்கே விளக்கம் தரப்படுகின்றது. பெண்ணியத் திறனாய்வுக் கலைச்சொற்கள் இந்த ஆய்வு நூலில் ஆளப்பட்டுள்ளன. அவை, பெரும்பாலும் இன்று நடைமுறைக்கு வந்து விட்டபடியால் தனியே விளக்கம் தரப்படவில்லை.

மணவாழ்வு, குடும்பநிறுவனம், கற்புக்கோட்பாடு, பெண்ணுரிமை என்று இயல் பகுத்திருப்பதற்குக் காரணம், தொடக்க காலந்தொட்டு இவையே தமிழ்ப் புனைகதை வரலாற்றில் இருந்துவரும் சிக்கல்களும் களன்களுமாக அமைவதாகும். எண்பதுகளில் தனித்தன்மையுடையது எதுவென்பதும் ஆய்வு நூல் நெடுகச் சுட்டப்பட்டுள்ளது. குடும்பச்சிதைவு இக்காலக் கட்டத்தில் பரவலாகவும் மிகுதியாகவும் காணப்படுகிறது. தமிழ்ப்புனைகதை வரலாற்றில் **ராஜம் கிருஷ்ணனின் வீடு** நாவலில் (1977) முதன் முதலில், பெண்-மனைவி-வீட்டைவிட்டு வெளியேறுவது சிக்கலாக முன்வைக்கப்பட்டது. ஆயின், அங்கும் வெளியேற்றத்துடன் நாவல் முடிவடைய, எண்பதுகளில் நாவல், சிறுகதைகள் இரண்டிலும் அப்பிரச்சினை நிறைய எழுதப்பட்டுள்ளது. இக்காலப் புனைகதைகள் வெளியேற்றத்திலிருந்து தொடங்கி, தனித்து நின்று வாழ்வதை அழுத்தமாகச் சுட்டுகின்றன. குடும்ப நிறுவனம் ஆணாதிக்கத்திற்கும் மிதமிஞ்சிய மையக்குவியலான அதிகாரத்திற்கும் இடம் தந்து பெண்ணை அடிமைப்படுத்தும்போது, பெண் வெளியேறி வந்து அதை எதிர்த்து, மாற்றிடப் போராட வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் இப்படைப்புக்கள் வலியுறுத்துகின்றன. படிதாண்டுதல் கூடாது என்றும் உக்கிராண அறை-சமையலறை-தாண்டிப் பெண் வெளிவருதல் கூடாது என்றும் விதிக்கப்பட்ட ஆடவர் ஆதிக்க வரையறைகள்-லட்சுமணக் கோடுகள்-இக்காலப் படைப்புக்களில் உடைக்கப்படுகின்றன. இவை சமூக மாற்றத்திற்கு வழி வகுப்பவை ஆகும். புனைகதைகள் ஆழமானதும் பன்முறை வாசிக்கக்கூடியதும் பல்துறை அணுகுமுறை, பிறதுறைக் கல்வி ஆகிய சிந்தனைகளுக்குரியவை என்பதும் இக்காலப் படைப்புக்களால் விளக்கம் பெறுகின்றன. பெண்ணியத் திறனாய்வு, அடிப்படையில் பல்துறைக் கல்வி சார்ந்ததே. அந்த வகையில் இக்காலப் புனைகதைகள் அழுத்தமான சாதனைகளைச் செய்துள்ளன.

# உள்ளே


| | பக்கம் |
|---|---|
| மணவாழ்வு | 1 |
| குடும்பச் சிதைவு | 25 |
| கற்புக்கோட்பாடு | 42 |
| பெண்ணுரிமை | 65 |
| ஆய்வு முடிவுகள் | 98 |
| துணைநூற்பட்டியல் | 103 |
| சிறப்புச் சொல்லகராதி | 107 |

# மணவாழ்வு

## அறிமுகம்

திருமணவாழ்வு எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது என்பதை ஆய்வதாக இவ்வியல் அமைகிறது. திருமணவாழ்வு என்பது அன்பால் இருமனங்கள் ஒன்றி, அன்புப் பயிர் வளர்க்கும் இல்லற மாகும். தனிமனிதன் என்ற நிலைமாறி, குடும்பம் உருவாகி, வளர்ந்து, சமூகத்தின் ஓர் அங்கமாக முழு மலர்ச்சி பெறுவது, ஆண்—பெண் இருவரையும் உருவாக்குவது திருமண வாழ்வின் அடிப்படையாகும். ஆனால், நடை முறையில், திருமணம் வேறு பொருளைப் பெற்று விடுகிறது; பெண்ணை விலைபேசி விற்கவும் வாங்கவுமான பண்டமாற்று வணிகமாக மாறி விட்டது. தமிழ்ப் புனைக் கதைகளில் தொடக்க காலத்தில் குழந்தை மணம், இளமை மணம் என்ற நிலையில் இருந்த போக்கு எண்பதுகளில் மாறிவிட்டது. அதே போன்று தொடக்க காலத்தமிழ்ப் புனைகதை ஆசிரியர்கள் அருகிய வழக்காக எழுதி, கடும் எதிர்ப்புக்குள்ளான விதவை மறுமணம் கூட, எண்பது களில் ஓசையின்றி நிறைய எழுதப்பட்டுள்ளது. மாறாக, அன்று முதல் இன்று வரை, வரதட்சணை என்ற பெயரால், திருமணம் வாணிபமாகச் செயற்படுவதைத் தமிழ்ப் புனைகதைகள் தொடர்ந்து காட்டுகின்றன; தொடக்க காலத்தில் ஒருசில இனத்தாரிடையே மட்டும் காணப்பட்ட வரதட்சணை முறை இன்று நீக்கமற எல்லா இனத்தாரிடையேயும் பரவி உள்ளது. இதற்கு, ஒரு வகையில் நம்முடைய பத்திரிகைகளும், தொடர்பு சாதனங்களும் காரணமாகும்.

திருமணத்தில் வரதட்சணை வழக்கம், பெண்ணுடைய விருப்பத்தை மதியாது, அவள் மீது தங்கள் முடிவைச் சுமத்தும் பெற்றோர் நிலை, அதற்குக் காரணமான சமூக அமைப்பு, படித்து வேலைக்குப் போனாலும் அவள் இன்னும் மிகுதியான

விலைக்குரிய தகுதிகளாகும் நிலை, அதன் தொடர் விளைவுகள் என்ற சுழற்சியில் மணவாழ்வு பொருளற்றுப் போகின்றது. நம்முடைய படைப்பாளர்கள், திருமணவாழ்வை எவ்வாறு படைத்துள்ளனர் என்று கண்டறிவதோடு, சமூக வரலாற்றுப் பார்வையுடன், சோஷலிச பெண்ணிய நிலைப்பாடும், சமூகப் பொறுப்புணர்வும் தொடர்ந்து காணப்படும் போக்கினைக் கண்டறிவதும் இதன் நோக்கங்களாகும். தம்முடைய புனை கதைகளின் மூலம் படிக்கும் வாசகர்களுக்கு, குறிப்பாகப் பெண் களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சமூக மாற்றத்திற்குப் பெண்களை ஆயத்தப் படுத்துவதும் தலையாய நோக்கமாக இருப்பதை இக்காலத்தில் காணமுடிகிறது. இதனால் வெறும் பொழுது போக்கிற்காக எழுத்துக்களை உற்பத்தி செய்யும், எழுத்துச் சந்தை வணிகர்களிடமிருந்து மாறுபட்டு, சமூக வரலாற்றுக்கான ஆவணங்களாகப் புனைகதைகளை இவர்கள் படைத்து வருகிறார்கள் எனவும் அறியலாம். நம்முடைய பண்பாட்டு மரபுகளுக்கேற்ப, குடும்ப வாழ்வில், ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக நடத்தப்பட வேண்டும்; சார்பு நிலையிலன்றி, சமநிலையில் இணைந்து செயற்படவும், தேவைப்படின் தனித்துச் செயற்படவும் கூடிய வலுவினைப் பெண்கள் பெறவேண்டும். நீண்ட காலமாக நடைமுறையி லுள்ள தந்தை வழிச் சமூக அமைப்பு, ஆணுக்கு மட்டும் சொத்துரிமை, ஆணாதிக்கம், பெண்ணுக்கு மட்டுமான கற்பு நெறி போன்ற தளைகளால் பெண் பாதிக்கப்படுவதும், திருமண வாழ்வில் சிக்கல்கள் உருவாவதும் முன் எப்போதையும் விட எண்பதுகளில் ஆகக் கூடுதலாகி உள்ளது என்பதையும், இப்படைப்பாளர்கள் தொடர்ந்து காட்டியுள்ளனர்.

இவ்வியலுக்கு 'வெந்து தணிந்த காடுகள்' (இந்திரா பார்த்தசாரதி), 'சுந்தர காண்டம்' (ஜெயகாந்தன்), 'மானுடத் தின் மகரந்தங்கள்', 'மண்ணகத்துப் பூந்துளிகள்', 'ஓசைகள் அடங்கிய பிறகு', 'சுழலில் மிதக்கும் தீபங்கள்'. 'ஆண்களோடு பெண்களும்', 'ஊமை அரண்கள்' (ராஜம் கிருஷ்ணன்), பைசா நகரத்துக் கோபுரங்கள் (இந்துமதி), 'எல்லைகளின் விளிம்பில்', 'திறக்காத ஜன்னல்கள்' (வாஸந்தி), 'ஆத்துக்குப் போகணும்' (லக்ஷ்மி கண்ணன்), 'பாலங்கள்' (சிவசங்கரி) ஆகிய நாவல் களும், 'களம்' (ராஜம் கிருஷ்ணன்), 'பயணம்' (வாஸந்தி), 'பருவங்கள் மாறும்' (எம். ஏ. சுசிலா), 'ஒரு மனுஷி' (பிரபஞ்சன்), 'அரசிகள் அழுவதில்லை' (திலகவதி) ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களும் சான்றுகளாக அமைகின்றன.

இந்தப் புனைகதைகளில் தலைமை அல்லது துணைக்கதைப் பின்னல்களில் திருமணவாழ்வு, சிக்கலாவது இடம்பெற்றுள்ளது. மணவாழ்வு சிக்கலின்றி, இயல்பாகவோ குறிக்கோள் நெறியிலோ சித்திரிக்கப்படும் புனைகதைகள் ஆய்வுக்கு உட்படுத்தப் பெறவில்லை. மணமாகிய பின்னர்கூட வரதட்சணை, சீர் என்பவை காரணமாகப் பெண் துன்புறுத்தப் படுதல், அவளுடைய பெற்றோர் (அல்லது உறவினர்) பழிக்கப் படுதல், குழந்தைப் பேறு வாய்க்கவில்லை என்று துன்புறுத்தப் படுதல், பெண்ணின் ஆளுமையையும் சுயமரியாதையையும் இழிவுபடுத்துதல் என்பன நிகழ்கின்றன. இவை தொடர் விளைவுகளாகின்றன. இவற்றின் பாதிப்பு, பெண் (மனைவி) இவற்றை எதிர்கொள்ளல், மணவிலக்கு, விலகிவாழுதல், பெண் எரிக்கப்பட்டு மாய்க்கப்படுதல், பெற்றோர் வீட்டிற்கு அனுப்பப் படுதல் என்பவை முடிவாகின்றன. இச்சூழல்களில் எல்லாம் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் எதிர்த்துப் போராடவும், தனித்துவாழவும் கூடிய மனஉறுதியும் ஆளுமைத் துணிவும் பெற்றுவாழ இப்புனைகதைகள் கற்பிக்கின்றன. இந்த அடிப் படையில், மணவாழ்வு இங்கு ஆராயப்படுகிறது.

## பெண்ணின் விருப்பம் மதிக்கப்படாமை

திருமணம் பேசப்படும்போது ஆணின் விருப்பமும், எதிர் பார்ப்புகளும், ஆணைச்சார்ந்த மாப்பிள்ளை வீட்டார் கட்டுப் பாடுகளும் மதிக்கப்பட்டு போற்றப்படுகின்றன. மாறாக, பெண்ணுடைய விருப்பம் கேட்கப்படுவதில்லை. எவ்வளவு தான் படித்து, வேலைபார்த்து, பொருளாதாரச் சுதந்திரம் பெற்றுவிட்ட நிலையிலும்கூட, பெண்ணின் ஆளுமை சிதையு மாறு, மணவாழ்வின் முதற்கட்டமான பெண் பார்த்தல், மணம்பேசல் என்பவை அமைகின்றன. இதற்கு அடிப்படை யாக நம்முடைய சமூக அமைப்பில், பெண், சார்பு நிலையிலும், இரண்டாந்தர நிலையிலும், ஆணின் முடிவுகளை மறுப்பின்றி ஏற்றுச் செயல்படுத்துபவளாகவும் நடத்தப்படுகிறாள். இந்தச் சமூக அமைப்பில் தன்னுடைய மேலாதிக்கத்தை நிறுவுமாறு ஆண், பெண்ணைப் பார்ப்பதும், வியாபாரம் பேசுவதும், பெண் பிடிக்கவில்லை என்று மறுப்பதுமாகச் செயல்படுகிறான். அவ்வாறு செய்வது ஆணின் உரிமை எனச் சமூகமும், குறிப் பாகப் பெண்ணைப் பெற்றோரும் ஏற்குமாறு காலம் காலமாக, மரபு என்பதாகத் திணிக்கப்பட்டு வந்துள்ளது "அந்தப் பிள்ளை டில்லியிலே நாலைஞ்சு இடத்திலே பெண் பார்த்

துட்டாளாம். ஒண்ணும் பிடிக்கல்லியாம். நம்மமாலுவைத்தான் பிடிக்கணும்னு இருக்கோ என்னவோ?'' என்று பெண்பார்க்க வரும் ஆணின் செயலைப் பெருமையாகப் பெண்ணின் தாயே பேசுவது (வாஸந்தி, **எல்லைகளின் விளிம்பில்**, ப. 9) இதனைக் காட்டும், ''கல்யாணம்கிறது ஆம்பிள்ளைகளோட விருப்பு வெறுப்பைப் பொறுத்த விஷயந்தானா?'' என்று விம்மி கூறக் கேட்டதும், அவள் கணவன் அதிர்ந்து போவதை 'வெந்து தணிந்த காடுகள்' காட்டும் (ப. 55).

தன் பெண்ணைப் பார்க்க வரும் ஆணை, பெண்ணின் விருப்பமறிந்து மண முடிப்போம் என்று சொல்லும் தாயிடம் (அழகாயி), ''இது பாரு அழவு. நீ கெனாக்கண்டுகிட்டு எதியானும் அந்தப் புள்ள மனசில போடாத; பய, நல்ல வயசு. சொத்துபத்து இருக்கு. படிச்சும் இருக்கிறான். எதோ நம்ம சத்திக்கு செஞ்சி கட்டி வைக்கிறம். நீ போ உள்ளற...'' என்று பெண்ணின் தந்தை கூறுவது இதனை அரண் செய்யும் (ராஜம் கிருஷ்ணன், **மண்ணகத்துப் பூந்துளிகள்**, ப. 100). மேலே படிக்க வேண்டும் என்று விரும்பிய பெண்ணைப் படிக்கவிடாமல்—படித்தால் அதற்கேற்ப மாப்பிள்ளை தேடுவது கடினமாகும் என்று கூறிப் பெண்ணின் விருப்பமின்றித் திருமணம் நிகழ்ந்தது என்பதை, ''நான் எம். எஸ்ஸி. மாத்ஸ் பண்ணணும்னு எவ்வளவு ஆசைப்பட்டேன்? ஃபாஸ்ட் கிளாஸில் தான் பாஸ் பண்ணியிருந்தேன். ஸீட்கூட சுலபமா கிடைச்சிருக்கும். ஆனா, எங்கம்மா விட்டாளா? குறுக்க விழுந்து தடுத்தா. இவளுக்கு எதுக்கு இதுக்கு மேல படிப்பு. எம். எஸ்ஸிக்கு மேல மாப்பிள்ளை தேட முடியுமா? காலத்தில் கலியாணத்தைக் கட்டி, ஒருத்தன் வீட்டுக்கு அனுப்பனும்னு ஒரு பிடியா அப்பா மனசு இளகிவிடாதபடி செஞ்சா...'' என்று வரும் பெண்ணின் நினைவோட்டம் (ராஜம் கிருஷ்ணன், **ஊமை அரண்கள்**, ப. 18) இதனை வலியுறுத்தும். கல்வி கற்று, மேலே கற்க விரும்பும் பெண்ணின் விருப்பத்தை மதியாது, திருமணம் அவள் மீது தாயின் மூலமே திணிக்கப்படுவது இங்குக் காட்டப்படுகிறது.

திருமணம் பேசப்படும்போது, பெண்ணின் விருப்பம் மதித்துக் கேட்கப்படாததோடு, அதற்கு மாறாகவும் செய்யப் படுகிறது. கல்வி கற்பது ஆணைப் போல பெண்ணுக்கும் அடிப்படை உரிமை என்று ஏற்கவோ, கல்வி கற்பது அவளின் ஆளுமையை வளர்க்கும் என்பதை ஏற்கவோ, மறுக்கின்றனர் பெற்றோர். 'அம்மா இன்னும் ரெண்டே மாசத்தானே, நான்

எம்.ஏ. முடிச்சுடறேன். அதற்குள்ளே ஓரளவு இதைவிட நல்ல வரனா வரலாம்' என்று பெண் கூற, அதற்கு அவள் தாய், 'ஆமா! நீ எம்.ஏ. முடிச்சதும் என்ன பெரிசா நடந்துடப் போகுது!... வீட்டோடு இருந்து நல்லபடியா குடும்பம் பண்ணி, குழந்தை பெத்து வளக்க பட்டமும் கண்றாவியும் என்னத்துக்கு' என்று தாய் கூறி மணவாழ்வை அவள் மீது திணிக்கிறாள் (திலகவதி, **அரங்கன் அழுவதில்லை**, பக். 32-33). மணம் செய்து இல்லறம் நடத்தவே பெண் பிறவி எடுத்தவள் எனவும் கல்வி கற்பது கூட மணவாழ்வு வரும்வரை உள்ள காலத்திற் கான இடைவெளியை இட்டு நிரப்பும் பணி என்பதான கருத்தாக்கம் உடையவர்களாகப் பெண்ணின் பெற்றோர் உள்ளனர் என்பதை இதனால் அறியலாம். தொடக்க காலத்தமிழ்ப் புனைகதை ஆசிரியர்கள் பெண்கல்வியை வற்புறுத்திய நிலை இன்று எண்பதுகளில் மாறியுள்ளது. மணவாழ்வு—குடும்ப உருவாக்கம் என்பனவற்றிற்கும் இடை யூறாக இருப்பனவற்றைத் தடுத்து பெண்கல்வி மூலம் அவளுக்கு விழிப்புணர்வு—சுயமான சிந்தனை—தனித்துவம் வந்துவிட கவனமாகச் செயற்படும் போக்கை இப்படைப்புகள் காட்டு கின்றன. பெண்களுக்கு—குறிப்பாகப் போன தலைமுறை யினரான (பெண்ணின்) தாய், மாமியார் போன்றவர்களுக்கு— விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சி இப் படைப்புக்களில் தொடர்ந்து காணப்படுகிறது. இதனை ராஜம் கிருஷ்ணன் 'களம்' என்ற சிறுகதையில் அழுத்தமாகக் காட்டு கிறார். 'நான் நாளைக்கு உங்க அப்பா, அம்மா, பாப்பு எல்லோரையும் பார்க்கப்போறேன். இது மோசம், அற்பம்னு உணர்த்தப் போறேன்...அந்தப் பெண்ணைக்கூடப் பார்க்கணும். சவரன் மதிப்பிலேயே உன்னை மதிக்கறது வெட்கமாயில்லை யான்னு கேக்கணும்' (ராஜம் கிருஷ்ணன், களம், பக். 16) என்று வரும் ஆனந்தியின் கூற்று வலியுறுத்தும். மேலும் 'நம்மை நாமே உணர்ந்து விழிப்படைய வேண்டும். அதுதான் இப்ப போராட்டம்' (ராஜம் கிருஷ்ணன், களம், ப. 8) என்று வரும் கூற்றும் வலியுறுத்தும்.

நம் சமூக அமைப்பில் மணவாழ்வு, குடும்பம் என்பவை பற்றிய கருத்தாக்கங்கள் மாறாத நிலையில், சமூக அமைப்பு மாற்றம் பெறாதவரையில் பெண் விடுதலை, உரிமை என்ற மறுமலர்ச்சி முழுமையாகக் கிட்டாது என்பதை இப்படைப்புகள் வலியுறுத்துகின்றன. அதனால்தான், எத்தவிதமான கட்டுப்பாடு களையும் சட்டதிட்டங்களையும் மரபு என்ற போர்வையில்

ஆணும் அவனைச் சார்ந்தோரும் விதிக்கலாம். விதிக்க முடியும் என்பதையும் அவற்றிற்கு அடிபணிந்து, தம் தனித்தன்மைகளை இழந்து, மணமானால் போதும் எனப் பெண்வீட்டார் முன்வந்து பெண்ணையும் அதற்கு அடிபணியச் செய்து—மணமுடித்து வைக்கின்றனர். 'கலியாணமாகல வேலை...கலியாணமான பிறகு அதைப்பத்தி எண்ணவே சந்தர்ப்பம் இல்லே' எனவும் 'வயசு முப்பதாகிறதே! தாலி கழுத்தில் விழலியே' என்று அம்மா மாய்ந்து போனாள்' எனவும் வரும் சிந்தனைகளுடன்; 'அந்தச் சூழலில் அந்தப் பராமரிப்பில், அந்த நம்பிக்கை போஷாக்கில் பெண்ணுக்கு அறிவுபூர்வமான சிந்தனை எப்படி வரும்' எனவும் 'அவள் அந்த அரண்களை மீறி எப்படிச் சிந்தித்திருக்க முடியும்' எனவும் வருமிடங்கள் (ராஜம்கிருஷ்ணன், *சுழலில் மிதக்கும் தீபங்கள்*, பக். 38-39) இங்குச் சிந்திக்கத்தக்கவை.

திருமணத்துக்கு முன்னர் தன் மணவாழ்வு பற்றி, வரப்போகும் கணவன் பற்றிச் சிந்தித்து வைக்கவோ அதனடிப்படையில் தன் கருத்தைக் கூறவோ பெண் அனுமதிக்கப்படுவதில்லை. அப்படி வரையறை கூறினால், மணமாவது தள்ளும்; மணமே நடக்காது என்று திரும்பத் திரும்பச் சொல்லியே அவளை இசைய வைக்கின்றனர். 'திருமணத்துக்கு முன்னர் பார்க்கவி தன் பெற்றோரிடம் எத்துணை வீறாப்பாகப் பேசியிருக்கிறாள்.. யதார்த்தம்-பிரத்யட்ச நிலை, அவளுடைய அந்த உறுதிப் பேச்சுக்களை, மனத்துணிவை விழுங்கி விட்டது' (ராஜம்கிருஷ்ணன், *களம்*, பக். 131) என வருமிடம் வலியுறுத்தும். 'இவ போடற கண்டிஷனுக்கெல்லாம் எந்தப் பிள்ளைவீட்டுக்காரன் காத்திண்டிருக்கான்? சம்பிரதாயம்னு ஏற்பட்டுப் போனப்புறம் இந்த லேவாதேவி விஷயத்துக்காக ஒரு நல்ல வரனை விட்டுடறதா? வரனை நழுவ விட்டா கிடைக்கக்கூடிய நல்ல வாழ்க்கையே நழுவிவிட்ட மாதிரி' என்று பெண்ணின் தந்தை கூறுவது நம் சமூக அமைப்பை வெளிப்படுத்தும் (வாஸந்தி, *எல்லைகளின் விளிம்பில்*, பக். 16). எனவே மணம் பற்றிய முன்பேச்சு, பெண் பார்த்தல், மணம் உறுதி செய்தல் ஆகிய நிலைகளில் பெண்ணின் விருப்பம் மதிக்கப்படாமை, அவளுக்குத்தன் கருத்துக் கூற வாய்ப்பு தரப்படாமை என்ற நிலைகளே இன்றும் காணப்படுகின்றன. ஆண் முதன்மையானவன்; பெண் அவனைச் சார்ந்தியங்குபவள் என்ற முறையில் குடும்ப நிறுவனம் நம் மரபில் இருப்பது இதன் காரணம் என்பதைப் படைப்பாளிகள் தெளிவுபட உணர்த்தியுள்ளனர். இந்த அமைப்பு மாற்றம் பெறாத வரையில்-அடிப்படை மாற்றம்

நிகழாதவரையில்—மேற்பூச்சான பிற உரிமைகள் பெண்களை இன்னமும் துயர்களுக்குள்ளாகுகின்றன.

**வரதட்சணைச் சிக்கல்**

ஆணாதிக்கச் சமுதாய அமைப்பில், மணம் பேசப்படும் போது வரதட்சணை என்ற பெயரில் பெண் வீட்டாரிடமிருந்து பொருளாகவும் பணமாகவும் வாங்கப்படுகிறது; நகை, அணி கலன்கள் என்று வரிசைகள் பெறப்படுகின்றன. இவ்வழக்கம் இன மத வேறுபாடின்றி. கிராம, நகர வேறுபாடின்றி எங்கும் பரவி யுள்ளது. ஆணுக்குச் சிறு வயது முதலே உடைமை மனோ பாவமும் (Possessive Nature) ஆண் சொத்துக்குரியவன்; மேலானவன் என்ற ஆதிக்க உணர்வும் போதிக்கப்பட்டு ஆளுமையில் பதிகிறது. பெண்ணை சார்ந்து வாழும் ! இரண்டாந் தர நிலையில் நடத்தும் சூழல் அவனுக்குக் கற்றுத் தருகிறது. இவற்றின் விளைவு, பெண்ணை மனைவியாக வருபவளை சகமனுஷியாக, உற்றதுணையாக, சரிநிகர் சமானமாக மதிக்க-நடத்த-முற்படாமல், அவளும் தன்னுடைமை என்ற எண்ணத்தை வளர்க்கிறது. அடிப்படையில் இந்த மனநிலையும் சமூக அமைப்பும் ஆணாதிக்கப் போக்கும் மாறாத நிலையில் மணவாழ்வில் சிக்கல் உருவாவதை அதற்கு வரதட்சணை துணை யாவதை இப்புனைகதையாளர்கள் அழுத்தமாகக் காட்டு கின்றனர்.

''எம் பயலுக்கு நூறுசவரன் போட்டு, காரு வாங்கிக் கொடுத்து பொண்ணு கட்டறதுக்கு இருக்கையில்'' (ராஜம் கிருஷ்ணன் **ஆண்களோடு பெண்களும்**, பக். 8) என்று பையனின் தந்தை கறாராகப் பேரம் பேசுகிறான். ''இங்கெல்லாம், இந்த பத்து இருபது வருசங்கள்ள, இந்த வரதட்சணைப் பிரச்சனை ரொம்ப பெரிசா பூதமா வளர்ந்துட்டுது. பொண்ணைக் கட்டாம வச்சிருக்கவும் கூடாது. அவனுக்குக் கல்யாணம் கட்டறப்ப, பதினெட்டு வயசு கூட இல்லை. பொண்ணு வயசுக்கு வந்து உடனே கட்டிட்டா, அதுக்குப் பதிமூணு பதிநாலு இருக்கும். அப்ப, பாத்திரம் பண்டம், சாமான், சீலை, வேட்டி, பீட்டுத் தட்டாஞ்சிரு இதெல்லாம் பெரிசு'' (மேலது, பக். 115) என்று வருமிடம் கிராமங்களிலும் வரதட்சணை வாங்கும் பழக்கம் பரவி விட்டதைக் காட்டும். ''ஒரு சம்சாரி வேலை செய்யற குடிகாரப்பய, கூலி வாங்குறவ மொதக் கொண்டு பத்து பவுன் போடு, பதினைந்து பவுன் கொடுன்றான்'' (ராஜம் கிருஷ்ணன், **மண்ணகத்துப் பூந்துளிகள்**, பக். 209) என்ற கிராமத்தில் உழைத்துப் பிழைக்கும் தாயின் மனக்குமுறல் வரதட்சணை

வாங்கும் பழக்கம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளதை விளக்கு கிறது.

சில உயர் மத்தியதரக் குடும்பங்களில் மட்டும் வரதட்சணை என்று எதுவும் வேண்டாம் என்ற நிலை காட்டப்படினும் ''கையில் காலில் என்று கேட்கவில்லை. 'போடுவதைப் போட்டு ஸிம்பிள் மாரிய்யஜ்' பண்ணுங்கள்'' என்பதாகப் பேசப்படினும் (ராஜம் கிருஷ்ணன், **சுழலில் மிதக்கும் தீபங்கள்**, பக். 38) மண வாழ்வில் பெண்ணை மிகக் கொடுமையாகச் சிதைக்கின்றனர் புகுந்த வீட்டார். மாறாகச் சில உயர் மத்தியதரக் குடும்பங் களில், வரதட்சணை என்று ரொக்கமாக இன்றி வேறு வழிகளில் கறக்கும் பழக்கமுள்ளதை 'நாங்க வரதட்சணை வாங்கற வழக்கமே கிடையாது. கல்யாணத்தை டீசண்டா செஞ்சுடுங்கோ. மேரேஜ் எக்ஸ்பென்ஸுக்காகப் பத்தாயிரம் கொடுத்தா போறும் பிள்ளை டிரஸ்ஸிற்காக இரண்டாயிரம் இருக்கவே இருக்கு எல்லாரும் கொடுக்கிற மாமூல் வழக்கம்' (வாஸந்தி **எல்லைகளின் விளிம்பில்** பக். 12) என்று வேறு வழிகளில் வியாபாரக் கொள்ளை நடப்பதைக் காட்டுகின்றனர். இதனை எதிர்த்து நிற்கும் துணிவும், பண்பாடு, சம்பிரதாயம், குடும்பப் பெருமை என்று பேசி இதற்கு அடிமையாகிப் போவதை விட்டு ஒதுக்கி வெளி வரும் விழிப்புணர்வும் பெண்களுக்கு வர வேண்டும் என்பதை எண்பதுகளில் மீண்டும் மீண்டும் காட்டியுள்ளனர்.

தாய், மாமியார் என்ற உறவுகளில் உள்ள பெண்களுக்கு-மூத்த தலைமுறையினருக்கு மட்டுமின்றி, ஓரகத்தி, நாத்தனார், மணமாகிப் போன பெண் என்ற அனைத்து நிலை பெண் களுக்கும்-விழிப்புணர்வும் துணிவும் வர வேண்டும் என்று காட்டு கின்றனர். வரதட்சணை விவகாரம் பேசும் பிள்ளையின் தந்தை யிடம் 'உங்க பிள்ளையைக் கல்யாணம் செய்துக்க எனக்கு இஷ்டமில்லே உங்க மருமகளா வர எனக்கு இஷ்டமில்லை.' (வாஸந்தி, **எல்லைகளின் விளிம்பில்**, பக். 13) எனவும், 'இப்பவே சொல்லிட்டேன். பணத்தை எந்த வகையிலாவது கறக்கப் பாக்கறவாளை இந்த வாசற்படி ஏறவிட வேண்டாம்' என்று தன் பெற்றோரிடமும் (மேலது, பக். 16) துணிவாக எதிர்க்கும் மாலு போலப் பெண்கள் விழிப்புணர்வு பெற வேண்டும். நாவலின் இறுதியில் வரும் மாலுவின் தாயின் கூற்று 'உன்னுடைய பிரண்ட்ஸ் எல்லாரும் இருக்காளோல்லியோ, அவா மனசை மாத்தப்பாரு. சக்தி இருந்தாலும் வரதட்சணை கொடுக்கக் கூடாதுன்னு சொல்லு'... (மேலது, பக். 100)

இதனை வலியுறுத்தும். வரதட்சணை வாங்கும் ஆண்களின் உடைமை மனநிலை, தன்முனைப்பு, பெண்ணை இரண்டாந்தர நிலையில் மதிக்கும் ஆணவம் இவைகளையும், ஆணின் தாயாக (மாமியாராக) இருந்து, வந்த மருமகளை நிந்தனை செய்யும் பெண்ணையும் மனமாற்றம் செய்திட, இந்த எதிர்ப்புணர்வும் விழிப்புணர்வும் மட்டுமே இனி பயன்படும் என்று இதனால் அறியலாம்.

## பின் விளைவு

வரதட்சணை பேசியபடி கொடுக்கப்படவில்லை என்று மனைவியை அடித்து, துன்புறுத்தி இழிவாகப் பேசுகின்றனர், புகுந்த வீட்டார். இதில் கணவன், மாமியார், அவன் உடன் பிறந்தவர்கள் முக்கிய பங்கு வகிக்க, மனைவி தனியாளாகப் போராடுகிறாள். இவர்களின் ஏச்சுக்களால் பெண்வீட்டார் தரக் குறைவாக விமர்சிக்கப்படும் போதும் பெண் எதிர்த்துப் பேச, தன் வீட்டார் பற்றிய நியாயங்களை விளக்க அனுமதிக்கப்படு வதில்லை. இவற்றால் பெண்ணின் ஆளுமையும் சுயமரியாதையும் சிதைக்கப்படுகின்றன. தன் பெற்றோர்—உடன்பிறந்தோரிடம் கொண்டுள்ள பாச உணர்வைக் கூட வெளிப்படுத்திடக் கூடாது. என்று இங்கு அடக்கி ஒடுக்கப்படுகிறாள். இத்தகு சூழலில், பெண் இவற்றை எதிர்க்கத் துணிவதும், எதிர்த்துப் பேசுவதும் அதன் பின்விளைவுகளும் புனைகதைகளில் காட்டப்படுகின்றன. “வரதட்சணைப் பணம் பாக்கி இரண்டாயிரத்தை ஆடிச் சீரோட கொடுத்திடறோம்னா.. அடுத்த ஆடியும் வந்தாச்சி... தகப்பனார் காலமாயிட்டார்னா என்ன, பேசின பணத்தை இரண்டு மாசத்திலே கொடுத்திடறேன்னான் இவ அண்ணா...’’ என்று கணவன் சாட, ‘அந்த வழக்கந்தான் (சொன்ன சொல்லை காப்பாத்தற பழக்கம்) அவா வம்சத்திலே யாருக்கும் இடை யாதே’’ என்று மாமியாரும் ஏசுகின்றார் (எம். ஏ. சுசீலா, பருவங்கள் மாறும், பக். 86) என்று வருவது இதனைக் காட்டும். நகர வாழ்வில் மத்தியதர உயர்சாதி முன்னேறிய வகுப்பின ரிடையில் மட்டுமில்லை இப்பிரச்சினை; கிராம வாழ்விலும் உழைப்பாளிகளிடமும் பரவி வருகிறது என்பதை ராஜம் கிருஷ்ணன் அழுத்தமாகக் காட்டுகிறார். “ஜெட்டமா பேசினீரு. வெபாரம் புடிச்சதும் பத்துப்பவுனு பொங்கச்சீரா போட்டுடறேன்னு...சொன்ன பேச்சு செய்யணும்னு மருவாதி யில்லே? தைப்பொங்கலுக்கு இல்லேன்னாலும் சித்திரைப் பிறப்புக்குன்னாலும் செய்யிறது இல்லே’’ என்று ‘மண்ணகத்துப்

பூந்துளிகள்' நாவலில் (ப. 114) வரும் மாமியார்க்காரியின் ஏச்சு இதனை அரண் செய்யும்.

இவ்வாறு வரதட்சணை வாங்கும் ஆண் மகன், மணவாழ்வில், சொன்னபடி பணம், பொருள் கொடுக்காது காலந்தாழ்த்திய போது, தன் மனைவியின் முன்னிலையிலே அவள் பிறந்த வீட்டாரை ஏசுவதுடன், அவளைவிட ஆகக்கூடுதலாகப் பணம் கொடுக்கச் சிலர் முன்வந்ததாகவும் அவர்களையெல்லாம் விட்டு விட்டு, இவளைத் தேர்ந்ததாகவும் ஒப்பீடு செய்து பேசுகிறான். கணவன், அவன் தாய், அவன் உடன்பிறப்புக்கள் இந்தப் பேச்சில் பங்கு கொள்கின்றனர். அவன் பேச, அல்லது அவர்கள் பேச இந்த விவாதம் நடப்பதாகப் புனைகதையாளர் காட்டுகின்றனர். இந்த மாதிரியான பேச்சுக்கள், பெண்ணின் சுயமரியாதையைப் பாதிப்பதுடன், அவளுடைய ஆளுமையைச் சிதைக்கின்றன. தன்னுடைய பெற்றோர், உடன்பிறந்தோரைப் பழிக்கும் போது அவள் மௌனமாயிருக்க வேண்டும் என்று நம் மரபு சார்ந்த கட்டுப்பாடுகள் விதிக்கின்றன. மீறி, அவள் தன்னை வெளிப் படுத்திக் கொண்டால் தன் பிறந்த வீட்டு மனிதர்கள் பக்கத்து நியாயத்திற்காகக் குரல் கொடுத்தால் பழிக்கப்பட்டு, வன்முறை களுக்கு ஆளாக்கப்பட்டு, வாழாவெட்டியாக்கப்படுகிறாள்.

இந்த நிலையை எதிர்த்துப் பெண் அமைதி காப்பதை விடவும், தன் ஆட்சேபக் குரலை எழுப்பவோ, போராடவோ அதன் விளைவுகளைச் சிந்திக்கவோ தயங்கக் கூடாது என்பதை இக்காலப் புனைகதையாளர்கள் அழுத்தமாகக் கூறுகின்றனர். பெண்ணுக்கு விழிப்புணர்வும் தீமையை எதிர்க்கும் பண்பும் வளர வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துகின்றனர். "இப்பக்கூட காலம் கடந்திடலே எங்கர்த்திலேகொடுத்த வரதட்சணை பணம் ஆறாயிரத்தை என்ரணி வைச்சிடுங்கோ! அப்புறம் எந்த ஊர் மகாராணி...லட்சமோ, கோடியோ வச்சிண்டு கூப்பிடறாளோ, அவா கிட்டப்போய் உங்களைத் தாராளமாய் ஏலம் போட்டுக் கோங்கோ!...எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை..." என்று வரும் ஒரு பெண்ணின் கூற்று (எம். ஏ. சுசிலா, பருவங்கள் மாறும். ப. 89) இதனை அரண் செய்யும். திருமணம் அப்பட்டமான வியாபாரம்—லேவாதேவி—ஆகிவிட்டதையும், அதிக விலைக்குத் தன்னை விற்றுவிட ஆண்கள் தயாராவதையும் இந்த நிலையைப் புரையோடிப்போன்ற பெண்களும் ஆதரிப்பதையும் இவை காட்டுகின்றன. எனவே, இச்சூழலில் எதிர்க்கும் திறன் பெண்

களுக்கு அவசியம் என்று எண்பதுகளின் புனைகதையாளர் தொடர்ந்து காட்டுகின்றனர்.

திருமண வியாபாரத்தில் பின்னடைவு, தோல்வி ஏற்பட்டால் (மனைவியின் இறப்பு—தானே இறந்தாலும் ஆணால் இறப்பிற்கு ஆளானாலும், தள்ளி வைக்கப்பட்டு வாழாவெட்டியாக்கப்படும் நிலை போன்ற சூழல்கள் இங்குப் பின்னடைவு, தோல்வி என்று சொல்லப்படுகின்றன) வாங்கிய வரதட்சணைப் பணம், பொருள் இவற்றை ஆண் திரும்பக் கொடுப்பதில்லை. அவ்வாறு கொடுப்பது தன் சுயகெளரவத்திற்கு இழுக்கு என்புதாக ஆண் நினைப்பதாகவும் படைப்பாளர்கள் காட்டுகின்றனர். (ராஜம் கிருஷ்ணனின் 'ஆண்களோடு பெண்களும்', எம். ஏ. சுசிலாவின் 'பருவங்கள் மாறும்' (ஓர் உயிர்விலை போகிறது, 'சிலுவைகள்' முதலிய கதைகள்), திலகவதியின் 'அரசிகள் அழுவதில்லை' ('மாதிரிக்கு ஒரு மாதவி'), வாஸந்தியின் 'பயணம்' ('எச்சுமி',) ராஜம் கிருஷ்ணனின் ('மானுடத்தின் மகரந்தங்கள்'). இந்தப் படைப்புக்களில் காட்டப்படும் ஆண்களின் இத்தகைய மனநிலை அடிப்படையில் அவனிடம் உள்ள உடைமை மனப்பாங்கைக் காட்டுகிறது.

ஆண் சொத்துக்குரிய வாரிசு, அவன் உடைமையாளன், பெண்—மனைவி உள்பட யாவும் அவனுக்குரிய உடைமைப் பொருட்கள், அவன் தன் ஆதிக்க உணர்வில் இவற்றைப் பாது காப்பவன்; ஆதிக்க உணர்விற்குப் பங்கம்வரின் எந்தநிலைக்கும் போவான் என்ற நம் சமூக அமைப்பில் உள்ள நிலைகளை இப் படைப்பாளர் அற்புதமாகக் காட்டுகின்றனர். அந்த மனநிலையை மதித்து, ஏற்று, அதுசரி என்று வாதிடும் நிலையில் ஆணின் தாய் போன்ற பெண்கள் உள்ள நம் சமூக அமைப்பையும் இக்கதை யாசிரியர்கள் காட்டுகின்றனர். வாதட்சணைப் பழக்கம் ஒழிக்கப்படுவதற்குச் சமூகமாற்றம், வாங்கும் ஆண் அவனைச் சார்ந்தோர் இடையே ஏற்பட வேண்டிய மனமாற்றம் மட்டுமே தீர்வாக அமையும் என்பதும் இக்காலப் படைப்புக்களில் காட்டப் படுகின்றன. அதைத் தவிர சட்டம், காதல் திருமணம், கலப்பு மணம் போல்வன கூட இச்சிக்கலைத் தீர்க்கத் துணை செய்யா என்றும் காட்டுகின்றனர். பொருந்தாமணம் நிகழ்வதும், மண வாழ்வு துயர்தருவதும் கூட இப்பிரச்சினையால் விளைகிறது என்றும் காட்டுகின்றனர். வரதட்சணை காரணமாகப் பின்விளை வாகப் பெண்ணின் சுய மரியாதைக்கு இழுக்கு, ஆளுமைச் சிதைவு ஏற்படுமாறு, புகுந்த வீட்டில் பேசும்போது, பெண் (மனைவி)

எதிர்த்துக் குரல் கொடுப்பது இக்காலப் புனைகதைகளில் பரவலாகவும் மிகுதியாகவும் உள்ளது. இது பெண்ணியச் சிந்தனை வளர்ந்து வருவதைக் காட்டுகிறது. மேலும், இத்தகைய சூழல் சூழலில் இவ்வாறு செயல்பட எதிர்த்துப் போராட—இதன் வழி பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

## மணவாழ்வு—பெண்ணுக்கு ஏற்படும் சிக்கல்கள்

### குழந்தைப்பேறு

திருமணத்திற்குப் பிறகு கணவனுடன் வாழ்கின்ற இல்வாழ்க்கையில், கூட்டுக் குடும்பமாயினும் தனிக்குடும்பமாயினும் நகரப் பின்னணி, கிராம வாழ்க்கை, முன்னேறிய இனம்/பின்தங்கிய இனம், படித்து அலுவல்புரியும் பெண்/வீட்டில் இருக்கும் மனைவி என்ற பல்வேறு நிலைகளிலும் வெவ்வேறு விதமான சிக்கல்கள் பெண்ணுக்கு (மனைவிக்கு) ஏற்படுகின்றன. இச்சிக்கல்களை இப்புனைகதையாளர்கள் வெவ்வேறு நிலைகளில் காட்டியுள்ளனர். அடிப்படையில் நம்முடைய ஆணாதிக்கச் சமூக அமைப்பு பெண்ணை உடைமைப் பொருளாகக் கருதும் ஆணின் மனநிலை, தந்தை வழிச் சமுதாய அமைப்பு என்பவை காரணங்களாகக் காட்டப்படுகின்றன. கற்புக் கோட்பாடு அடிப்படையில் தவறு தன்னிடமில்லாதபோதும் பெண் பழி வாங்கப் படுகிறாள். மகப்பேறு தள்ளிப் போனாலும், ஆண்குழந்தை பிறக்காமல் பெண் குழந்தை பிறந்தாலும் பெண் பழிக்கப்படு கிறாள். பெண் இழித்துப் பேசப்படுவதுடன் இரண்டாம் திருமணம் பேசப்படுவதற்கும் முதல் மனைவியைத் தள்ளி வைக்கவுமான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன், தான் தாயாகப் போவதை உணர்ந்து, குழந்தைப் பேற்றைச் சில காலம் தள்ளிப்போட எண்ணும் உரிமையும் மனைவிக்குக் கிடையாது என்று கணவன் கூறுவது ராஜம்கிருஷ்ணனின் 'ஓசைகள் அடங்கியபிறகு' நாவலில் இடம் பெறுகிறது. குழந்தைப் பேறின்மை காரணமாக மறுமணம் செய்து வைப்பது வாஸந்தியின் 'திறக்காத ஜன்னல்கள்' நாவலில் இடம் பெறுகிறது.

பெண் குழந்தை பிறப்பது அல்லது குழந்தைப்பேறின்மை ஆணாலும் அவனைச் சார்ந்தோராலும் பழிக்கப்படுவதற்குக் காரணம் ஆணாதிக்கச் சமூக அமைப்புதான். ஆண்குழந்தை முதன்மை பற்றிய மரபுரீதியான கருத்தாக்கமே இதற்குக் காரணம். 'ஓசைகள் அடங்கியபிறகு' நாவலில் மகப்பேற்றைச் சில காலம் தள்ளிப்போட தாய்—மனைவி—விரும்பும் போது,

கணவன் எதிர்ப்பது, முடிவெடுக்கும் உரிமை தனக்கு மட்டுமே (ஆணுக்கு மட்டுமே) உரியது என்னும் ஆணாதிக்க வெளிப்பாடாகும், தன்னிடம் குறையிருக்கலாம்; அதனால் பிள்ளைப் பேறு கிட்டவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளவே ஆண் தயங்குகிறான். இங்கும், ஆணின் உடைமை மனநிலையும் தன் ஆளுமை—முதன்மை—பங்கப்படக்கூடாது என்ற விழிப்புணர்வும் காரணங்களாகின்றன

### பெண்ணின் பிறந்த வீட்டுத் தொடர்பு துண்டிப்பு

மணமான பின்னர் பெண் தன் பிறந்தவீட்டுக்கு அடிக்கடி போகவோ பெற்றோர்க்கு உதவிடவோ கூடாது என்று கணவனால் (கணவன் வீட்டாரால்) தடுக்கப்படுவது இப்புனைகதைகளில் காட்டப்படுகிறது. இச்செயல் பெண்ணின் ஆளுமையைச் சிதைக்கிறது. அலுவல் பார்க்கும் பெண், மணமான பின்னர் தன் ஊதியத்தைப் பிறந்தவீட்டிற்குக் கொடுத்துவிடக் கூடாது என்பதில் கணவனும் கணவன் வீட்டாரும் மிகக் கவனமாக உள்ளனர். இது, அப்பெண்ணின் சுயமரியாதையை இழிவுபடுத்துகிறது. இதனை எம்.ஏ. சுசிலாவின் 'கப்பம்' என்னும் சிறு கதையில் வரும், ''மூணுமாசச் சம்பளத்தை மொத்தமா வாங்கறாளே. அப்படியே அவாத்துக்குப் போய் அதுகளுக்கெல்லாம் வாரியிறைச்சிட்டு வந்திடப்போறாளேன்னு கவலைப்பட்டிருந்தேன். நல்லவேளை நீ ஆபிசிலே போய்ப் பிடிச்சுட்டே'' எனத் (எம்.ஏ.சுசிலா, '**பருவங்கள் மாறும்**'. பக்.20—21) தாய் மகனிடம் கூறும் உரையாடலால் அறியலாம். மணமாகி வந்த பின்னர் பெண் மட்டுமின்றி அவளுடைய சம்பளமும் கூடத் தனக்கே தன்மகனுக்கே உரியது என்று பார்க்கும் உடைமை மனநிலை இங்கு அடிப்படைக் காரணமாகிறது.

வீட்டிலும் உழைத்து, அலுவலகத்திலும் உழைத்து, இரட்டைச் சுரண்டலுக்கு ஆளாகிற பெண் (மனைவி) தன் குழந்தையைக் கூடச் சரிவரப் பேணாது தன் கணவனின் தாய் (மாமியார்) இருப்பதைப் பார்க்கிறாள். அப்போது அவள் தன் குழந்தையைத் தன் தாயின் வீட்டில் வளர்க்கவிடப் போவதாக முடிவு செய்து அதனைத் தன் கணவனிடம் கூறுகிறாள்: ''குழந்தையை அங்கே கொண்டுவிடப் போகிறேன். மாசாமாசம் பணம் அனுப்புவேன். பாஸ் புக்கை எடுத்து வைத்துக் கொண்டு விட்டேன். என் அப்பா அம்மாவுக்கு நான் கடமை ஆற்ற உரிமை இருக்கிறது. கல்யாணம் என்பது ஒரு பெண்ணை ஒரு வீட்டுக்கு அடிமையாக்குவதல்ல. ஒரு பெண் மணமாகும்

அந்தஸ்தைப் பெறணும். மனைவியாக வாழவேண்டும் என்பதற்காக அவ மரக்கட்டையாக வாழணுமா?'' (ராஜம் கிருஷ்ணன், 'ஊசி', ப.141) என்று ராஜம்கிருஷ்ணன் 'டென்ஷன்' என்னும் சிறுகதையில் கூறுவது இதனை வலியுறுத்தும். திருமண வாழ்வில் தன்னுடைய உணர்வுகள் மதிக்கப்படாமல், கணவனாலேயே தன் ஆளுமை சிதைக்கப்படும் போது, மனைவி எதிர்க்கிறாள். தானே முடிவு எடுப்பவளாகவும் கொடுமையை எதிர்ப்பவளாகவும் பெண் செயற்பட வேண்டும்; அவ்வாறு செயல்பட்டால் ஆணின்—கணவனின் ஆதிக்க உணர்வு மாறும் என்பதை இது காட்டுகிறது. ஓர் அவசரத்திற்குக் கூடத் தன் பெற்றோரை பார்க்க, மகள் என்ற முறையில் அவர்களுக்குக் கடமையாற்றக் கூட உரிமையின்றிப் பெண் இருக்கிறாள்.

மணவாழ்க்கை என்ற தகுதியைப் பெற அவள் தன்னுடைய உரிமைகளை இழந்து, சார்புநிலையில் அடிமையாகுமாறு நமது சமூக அமைப்பு உள்ளது. ராஜம் கிருஷ்ணனின் 'ஊமை அரண்கள்' நாவலில் தன் தந்தை காணாமல் போய் தாய் மட்டும் தனித்திருக்கும் வேளையில், அவர்களைக் காணச் செல்ல வேண்டும் என்று கேட்கும் மனைவியிடம். 'நாளைக்குப் பண்டிகை வருது உன் பிறந்த வீட்டு அவமானச் சேற்றில் போய் விழறேங்கிறியே? உன் அப்பா செத்திட்டாருன்னாக்கூடச் சொல்லிட்டு உன்னை அனுப்பலாம். இப்ப நீ எங்களை முறிச்சிட்டுப் போனா, எங்க மானம் மரியாதை என்ன ஆகிறது?'' (ஊமை அரண்கள், ப.77) என்று கணவன் கூறுகிறான். தன் மனைவியின் உணர்வையும் மகள் என்ற முறையில், அவள் தன் பெற்றோரிடம் கொண்டுள்ள பாசத்தையும் கடமையாற்றும் பண்பையும் கணவன் பழித்துப் பேசுகிறான். இதிலும், மனைவியின் ஆளுமையைச் சிதைக்கும் ஆணின் ஆதிக்க உணர்வையும் உடைமை மனப்பான்மையையும் காண்கிறோம்.

பெண்ணின் பிறந்த வீட்டிலிருந்து தொடர்ந்து பொருளாகவும் பணமாகவும் வரிசை மட்டும் வரவேண்டுமேயல்லாது, பெண்ணுக்கு அந்த வீட்டுடன் எந்தவிதத் தொடர்பும்-போக்கும் வரவும்—இருக்கக்கூடாது என்று கணவனும் அவனைச் சார்ந்தவர்களும் எதிர்பார்க்கின்றனர். கணவன் வீட்டாரின் எதிர்பார்ப்பிற்கேற்ப வரிசை வராதபோது, ''ஒரு பண்ட பாத்திரம், ஒரு பொங்கச்சீரு வைக்கலே'' (மண்ணகத்துப் பூந்துளிகள், ப.118) என்று வரும் மாமியாரின் கூற்று வலியுறுத்தும். முன்னேறிய இனம், நகரவாழ்வு என்பதிலிருந்து கிராமத்து உழைப்பாளி

களான பிற்பட்ட இனம் வரையிலும் இந்தச் சீர்வரிசை எதிர் பார்ப்பும் வராதபோது பெண்ணைக் கொடுமைக்குஉள்ளாக்கும் போக்கும் வேரோடிப் போயிருப்பதையும் இப்புனைகதை யாளர்கள் காட்டுகின்றனர். 'பிறந்த வீட்டிலிருந்து பெண்மை வரிசைகள் கொண்டு வருவதையும் அறிவு இருந்தும் குருடாக அடிமைப் புத்தியில் தாழ்வதையும் முறை, பண்பாடு என்று நினைக்கும் வழக்கத்தையும் எப்போது தள்ளி மிதிக்கப் போகிறோம்' (ராஜம் கிருஷ்ணன், களம், ப. 85) என்று வரும் சிந்தனை இவ்வழக்கங்களை மாற்றவேண்டும் என்னும் உரத்த குரலை முன்வைக்கிறது.

## மணவிலக்கு

மணவாழ்வில் கணவன் மனைவியரிடையே ஒத்துப்போகாத போது. முடிந்த வரையிலும் இசைந்து, அனுசரித்துப் பார்த்து, போராடிவிட்டு இறுதியில் மணவிலக்குப் பெற்று பிரிந்து வாழ் வதைச் சில புனைகதைகள் இக்காலக்கட்டத்தில் காட்டுகின்றன. **பாலங்கள், திறக்காத ஜன்னல்கள், மனிதர்கள் பாதி நேரம் தூங்கு கிறார்கள்** ஆகிய நாவல்களிலும் **ஒரு வித்யாவின் கதை, மாதிரிக்கு ஒரு மாதவி** ஆகிய சிறுகதைகளிலும் மணவிலக்கு சிக்கலாக இடம் பெறுகிறது மணவிலக்கிற்கான காரணங்கள் பல்வேறாக காட்டப்பட்ட போதிலும் மையமான நிலைக்களனாகக் கணவனின் கொடுமையே உள்ளது. மணவிலக்கு நீதிமன்றத்தில் வழக்கு மூலம் கிடைப்பதாக அனைத்துப் படைப்புக்களிலும் காட்டப்பட்டுள்ளது.'மாதிரிக்கு ஒரு மாதவி' சிறுகதையில் மட்டும் ஊர்ப்பஞ்சாயத்தில் பேசி, விலகி வாழ்வதாக இடம்பெறுகிறது. (அச்சிறுகதை மட்டும் கிராமப் பின்னணியில் படைக்கப்பட்டு இருப்பது காரணமாகும்) இப்புனை கதைகளில் மணவிலக்கு பெறுவதைத் தவிர வேறுவழியேயில்லை என்று சொல்லும் படி யான கணவனின் கொடுமைகளும் அதற்கு ஆளான மனைவியின் இன்னல்களும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன. மணவிலக்கு பெற்ற பிறகு துணிவுடன் தம் கல்வியைக் கொண்டு அலுவல் பார்த்தும் மேற்கொண்டு கல்வியைத் தொடர்ந்தும் தமக்கென வாழும் அவசியத்தை உணர்ந்தவர்களாக இப்பெண்கள் படைக்கப்பட்டுள்ளனர். வாழ்க்கையை அதன் பிரச்சினை களுடன் ஏற்று, தீமைகள்—தமக்கு எதிரான கொடுமைகள் ஆகியவற்றை எதிர்த்துப் போராடி, உரமுடன் தனித்து நிற்கும் திரமிக்க நெஞ்சம் உடையவர்களாக இப்பெண்கள் படைக்கப் பட்டுள்ளனர். 'மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்'

நாவலின் மீண்டும் அதன் தலைவி ஆனந்தி தன் கணவனிடமிருந்து விலக்குப் பெற்றுப்பின் ஸ்ரீதரனை மறுமணம் செய்து வாழ்வ தாகக் காட்டப்பட்டுள்ளது.

'பாலங்கள்' நாவலிலும் 'மாதிரிக்கு ஒரு மாதவி' சிறுகதை யிலும் குழந்தை ஒன்றுடன் தாயாக உள்ள பெண்கள் முறை யாக மணவிலக்குப் பெற்று, தனித்து வாழ்ந்து (பெற்றோர்—உறவினர் உதவியுடன்) தம் பிள்ளைகளை ஆளாக்குகின்ற தாயின் பங்குநிலை கடமை காட்டப்படுகிறது. ஏனைய இரு படைப்புக்களிலும் வித்யாவும் (ஒரு வித்யாவின் கதை) அருணாவும் (திறக்காத ஜன்னல்கள்) அலுவல் பார்ப்பதாகக் காட்டப்பட்டுள்ளனர். பெண்கள் நிலையில் இருந்து இப்படைப் புக்களில் மணவிலக்குப் பிரச்சினை மையப்படுத்தப்பட்டு அணுகப் பட்டுள்ளது. பெண்ணின் பெற்றோரும் பிற உறவினர்களும் இப்பிரச்சினையை எதிர்கொள்வதும் இப்படைப்புக்களில் விரி வாகக் காட்டப்பட்டுள்ளது. மணவிலக்கு பெறுவது குடும்ப கௌரவத்திற்கு இழுக்கு என்று எண்ணும் பழைய மரபு சார்ந்த மூத்த தலைமுறையினரின் கண்ணோட்டமும் அதை எதிர்த்து விவாதித்து, அதன் பின்னுள்ள சமூக அமைப்பு ஆணாதிக்கக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை விளக்கும் நிலையை இப்படைப்புக் களில் காண்கிறோம். பெண்ணியச் சிந்தைகளின் வெளிப்பாடாக இவை காணப்படுவது தமிழ்ப்புனைகதை வரலாற்றில் முன்னைப் போரதையும்விட அழுத்தமாகவும் முழுவீச்சுடனும் காணப்படும் வலுவான போக்காகும்.

"நீங்களும் அம்மாவும் இப்ப துக்கப்படறதுக்குக் காரணம் குடும்ப கௌரவம் போயிடுச்சேன்னு. ஆண்பிள்ளை என்ன அக்கிரமம் செஞ்சாலும் பெண் ஜாதி வாயை மூடிக்கிட்டு இருக் கிற பரம்பரை உங்களுடையது" (வாஸந்தி, *திறக்காத ஜன்னல்கள்* ப.7) என்று வரும் கூற்று இதனை வலியுறுத்தும்.

பெண்ணின் விழிப்புணர்வும் துணிவும் தீரமும் எடுத்துக் காட்டப்படுவது இப்புனைகதைகளின் தனிப் பண்புகளாகும். அதன் அடிப்படைக் காரணம் உலகெங்கிலும் ஏற்பட்டுவரும் பெண்ணின் எழுச்சியாகும். பெண்ணின் ஆளுமைச் சிதைவுறாமல் அவளுடைய தனித்தன்மை மேலெழுந்து செயற்படவும் வாழ்ந்து தலைநிமிர்ந்து நிற்கவும் உதவுமாறு இப்படைப்புக்கள் சித்திரிக் கின்றன. மணவிலக்குப் பெற்ற பெண்ணை அனுதாபம் காட்டு வதாகக் கூறி அவள் ஆளுமையை யாரும் சிதைத்துவிடக் கூடாது என்பதும் இப்படைப்பாளர்களால் மிகக் கவனமாக எடுத்துக்

காட்டப்பட்டுள்ளன. ''பாருங்கம்மா! மாதவியைச் சந்தோஷமா வாழவிடாம அவங்க மாமியார் வீட்ல பண்ணது தப்புன்னா, இப்ப நீங்க அவ மேல காட்டற அனுதாபமும், அவ வாழ்க்கையே கெட்டு, அழிஞ்சு முடிஞ்சே போயிடிச்சின்னு நீங்க படற துக்கமும், மகளுக்காக மட்டுமே அவங்க வாழணும்கற மாதிரி ஒரு நிர்ப்பந்தத் தியாகத்தை திணிக்கறதும் கூட தப்புத்தான்'' (அரசிகள் அழுவதில்லை, பக்.191) என்று வரும் கூற்று, மண விலக்குப் பெற்றுப் பெற்றோர் வீட்டிற்கு வந்த பெண்ணிற்கு அனுதாபம் காட்டி, அவளைச் சிதைத்து விடாமல், அவள் தனக் கென வாழ உதவ வேண்டும் என்பதை வலியுறுத்தும்.

**மணவிலக்கிற்கான காரணங்கள்**

கணவனின் வக்கிரமான பாலுணர்வு வெறியும், மனைவியைத் துன்புறுத்தித் தான் இன்பம் காண முயலும் குரூரமான நடவடிக் கைகளும், மனைவிக்கு அவனிடத்தில் வெறுப்பை ஏற்படுத்து கின்றன. தொடர்ந்து பொறுமையுடன் இருந்தும் அவன் திருந்தாததுடன், தன் உடல் நலம் கருதி, அவள் உறவு கொள்வதை மறுத்தபோது, வீட்டிற்கு விலைமகள் ஒருத்தியை அழைத்துக் கொண்டு வரும் அளவிற்கு அவன் செல்லுகிறான். இத்தகைய சூழலில், வேறுவழி இல்லாமல் தன் பெற்றோர் வீட்டிற்குத் திரும்பி வரும் அவள், வழக்கு தொடுத்து முறையாக மணவிலக்குப் பெறுகிறாள் என்று 'பாலங்கள்' நாவல் காட்டுகிறது. 'திறக்காத ஜன்னல்கள்' நாவலில் இதே போல கணவனின் ஒழுக்கக்கேடான நடவடிக்கை களும், தொடர்ந்து மனைவிக்கு அவன் செய்யும் கொடுமை களும், அனைத்திற்கும் மேலாக, மனைவியின் நடத்தையைக் குறித்து ஐயுறும் மனப்பண்பும் காரணமாக, மணவிலக்கு நிகழ் கிறது. இதனை ''என்னாலே தாங்கிக்க முடியல்லே. எத்தனைப் பணிஞ்சாலும் அவருடைய திமிர்த்தனம் ஏறுது; தன்மானம்னு ஒண்ணு இருக்கில்ல? கண்ட பொம்பளங்களுடைய சிநேகிதம் அந்த ஆளுக்கு! இந்த அழகிலே என் மேல சந்தேகம். யாரோட பேசினே, எங்கே போனேன்னு...'' (**திறக்காத ஜன்னல்கள், ப. 34**) என்று நாவல் தலைவலி அருணாவின் கூற்றால் உணரலாம்.

மனைவியை அடித்து இம்சைப்படுத்தி துன்புறுத்தியதுடன், முரடர்களைக் கொண்டு அவளை வன்முறைக்கு ஆளாக்க

முயன்றபோது, அவனிடமிருந்து தப்பித்து ஓடிவந்து, பிறகு முறையாக விவாகரத்து பெறுவதை 'மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்' நாவல் காட்டுகிறது. இயற்கையாகவே கணவனிடம் உள்ள உடல் குறை, மனக்குறையாக மாறித் தன் மனைவியைத் துன்புறுத்தச் சொல்லுகிறது. 'அவன் அவளை குரூரமாகப் பார்த்தபடியே சொன்னான். உனக்குக் குழந்தை பிறந்தால்தான் நான் ஆண் மகன் என்று உலகம் நம்பும். ஆனால் என்னால உனக்குக் குழந்தை வராது. அதற்கு நான் என்ன செய்யப்போகிறேன் தெரியுமா? நாளை இரவு நான்கு குண்டர்களை அழைத்து வரப்போகிறேன், உன்னை ரேப் செய்ய'' (**மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்**. பக். 158) என்று வரும் பகுதி இதனை வலியுறுத்தும்.

மனைவியின் நடத்தையைக் குறித்து கணவன் கொள்ளும் ஐயம்—தான் தவறே செய்யாமல் இருந்த போதிலும் கணவன் தன் மீது ஐயம் கொள்வதை ஏற்காத மனைவி முறையாக மணவிலக்குப் பெறுவதை 'ஒரு வித்யாவின் கதை' காட்டுகிறது. புகுந்தவீட்டில் கூட்டுக் குடும்பத்தில் மாமியார்—நாத்தனார் ஆகிய பெண்களின் கொடுமைக்கு ஆளாவதுடன், மைத்துனரின் இச்சைக்கு ஆட்படுமாறு நிர்பந்திக்கப் பட்டபோது, வேறுவழி இல்லாமல் மாதவி, ஊர்ப்பஞ்சாயத்து மூலம் மணவிலக்குப் பெறுகிறாள். இதனை 'மாதிரிக்கு ஒரு மாதவி' சிறுகதை காட்டும்.

இப்புனைகதைகளில், இப்பெண்கள் பல காலம் பொறுமையாக இருந்து, கணவனின் போக்கை மாற்றலாம் என்று போராடிப் பார்த்து வேறுவழியின்றி இந்த முடிவுக்கு வருகிறார்கள். கணவனிடம் தான்பட்ட கொடுமைகளைப் பெற்றோரிடம் கூறுவதற்குக் கூட மிகவும் தயங்கி, இறுதியில் தான் அரையும் குறையுமாகச் சொல்லுகிறார்கள். அத்துடன் நீதிமன்றங்களில் பலர் அறிய, தன் வழக்கு நடப்பதை விரும்பாதவர்களாகவே பெண்கள் உள்ளனர். இப்புனைகதைகளில், மணவிலக்கு வழக்குகள், குடும்ப நீதிமன்றம் என்ற பெயரில் நீதிபதியின் அறையில் குறைவான—இன்றியமையாத—மனிதர்களின் மத்தியில்தான் நடைபெறுவதாகக் காட்டப் படுகின்றது. இதனை ''வெளிப்பேர் எதிரிலெல்லாம் கேட்பார்களா அப்பா—இல்லையம்மா. பயப்படாதே. வக்கீல் நமக்குத் தெரிந்தவர்தான். அவரிடம் சொல்லியிருக்கிறேன். நாலைந்து பேர்கள்தான் இருப்பார்கள். ஒரு தனி

அறையிலேயே விசாரணை நடக்கும்.'' (**மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்**, ப. 69) என்ற பகுதி வலியுறுத்தும். எவ்வளவுதான் புறத்தே மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், தன்னுடைய துயரங்களை வெளிக்காட்டிக் கொள்ளாத பண்பையும், பலர் அறிய மணவிலக்கு வழக்கு நடைபெறுவது, குடும்பப் பெருமைக்கு இழுக்காகும் என்ற எண்ணமும் உடைய மரபு வழிப்பட்ட சிந்தனையாளர்களாகவே இப்பெண்களைப் படைத்துள்ளனர்.

**விளைவைப் பெண் எதிர்கொள்ளல்**

மணவிலக்குப் பெற்ற நிலையில், அதைத் துணிவுடன் எதிர் கொள்ளுவதாகவும், மேற்கொண்டு கல்விகற்கவும், பணிபுரியவும் கூடிய நிலைப்பாட்டை மகிழ்வுடன் மேற்கொள்ளுகின்றனர். தங்களிடம் தவறு இல்லாத நிலையில், கணவனின் தொடர்ந்த அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடி, பின்னர் வழக்கின் மூலமாக விலக்கு பெறுவதால், முடிவை ஏற்பதில் துணிவுடன் உள்ளனர். அத்துடன், தங்கள் பெற்றோரை அல்லது பிற உறவினர்களை இந்த முடிவைத் திறந்த மனத்துடன் ஏற்பதற்கும் பக்குவப்படுத்துகின்றனர். ''என் கேஸ் ஜெயிக்காம, எனக்கு விவாகரத்துக் கிடைக்காமப் போயிருந்தாத்தான் நீங்க வருத் தப்படணும். இந்த சம்பந்தம் முறிஞ்சாத்தான் எனக்கு விடிவு காலம்னு ஒரு வருஷமா உங்களுக்குத் தெரியும். அதுக்கு முயற்சியும் பண்ணீங்க. விவாகரத்துன்னா குடும்ப கௌரவம் போயிடுச்சுன்னு நினைக்கிறீங்க. ஏதோ தலைகுனிவுன்னு நினைக்கிறீங்க. அந்தப் போக்கிரி செஞ்ச அக்கிரமத்தை யெல்லாம் நா வாயை மூடிக்கிட்டுத் தாங்கிக் கிட்டிருந்தேன்னா உங்களுக்கு சௌகர்யமா இருந்திருக்கும்'' (**திறக்காத ஜன்னல்கள்** பக் 6, 7) என்று வரும் பகுதி, மணவிலக்குப் பெற்ற அன்று, அருணா தன் பெற்றோர்களைத் தேற்றும் மனப் பாங்கைக் காட்டும்.

மணவிலக்கிற்குப் பிறகு, தங்களுடைய பணியிலும், கல்வியிலும் ஆர்வமாக உழைத்து முன்னேறுகின்றனர். தன்னைச் சுற்றியுள்ள பிற மனிதர்களின் பேச்சுக்களைப் பற்றிக் கவலைப் படாமல் துணிவுடன் செயற்படுகின்றனர். தன்னுடைய பெற்றோரே ஆயினும், ஒரு நிலை வரை அவர்களைப் பக்குவப் படுத்த முயன்று, முடியாத போது, அம்முயற்சியை விட்டு விடுகின்றனர். ஆனால் தன் அளவில் துணிவும் வீரமும் கொண்டு செயற்படுகின்றனர். தன்னுடைய ஆளுமையைச்

சிதைய விடாமல், தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையின் போக்கை எதிர்த்துப் போராடும் பெண்ணின் துணிச்சலான நிலையை எடுத்துக்காட்டுவது இப்படைப்பாளர்களின் நோக்கமாகும். தமிழ்ப் புனைகதை வரலாற்றில், மணவிலக்குப் பெற்ற பெண், துணிந்து நின்று, உறுதியுடன் தனித்து வாழ்கின்ற ஆரோக்கிய மான சிந்தனை, எண்பதுகளில் அழுத்தமாகவும், முன் எப்போதையும் விடத் தீவிரமாகவும் காட்டப்பட்டுள்ளது. மூத்த தலைமுறை சார்ந்த தெளிவும் தனித்துவமும் மிக்க, பாட்டி சரோஜினி, காலமாற்றம், சமூக, வாழ்க்கை மதிப்பு மாற்றம் இவற்றைப் புரிந்துகொண்டு தன் பேத்தியின் மண விலக்கு முடிவை வரவேற்கிறாள். இதனை ''என்னாலே செய்ய முடியாததை நீ செஞ்சது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு'' என்று வரும் பாட்டியின் கூற்றால் அறியலாம். **(திறக்காத ஜன்னல்கள் பக்.9)**

மிகவும் கடுமையான நிலையில் கணவனின் கொடுமை களுக்கு ஆளாகி,தப்பித்து வெளியேறி வரும் ஆனந்தி(மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்) மட்டும், அதன் காரணமாக மன நிலை பாதிக்கப்பட்டவளாக உள்ளாள் என்பதாகக் காட்டப்படு கிறது. நடப்பியல் நெறியில் இது சித்திரிக்கப்படுகிறது. வழக்கு விசாரணையின்போது தன் கணவனைப் பார்த்த போது, இதனால்தான் அவள் மயக்கம் அடைந்ததாக நாவல் காட்டு கிறது. ஆனந்தி மட்டுமே, விலக்குப் பெற்றதன் பின்னர், மறுமணம் செய்து கொள்ளுவதாகக் காட்டப்படுகிறது. மண விலக்கு முறையாகப் பெற்ற பின்னர், தன்னுடைய உடைமைப் பொருள் என்ற நிலையில் மனைவியை மிரட்டிப் பார்க்கும் கணவனின் பண்பைப் 'பாலங்கள்', 'மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்' இரு நாவல்களும் காட்டுகின்றன. டெல்லியில் பணிபுரியும் 'பாலங்கள்' நாவல் தலைவி, தானே அவனைச் சமாளித்து, காவல்துறை உதவியை நாடி அவனைத் தண்டிக்க வேண்டியிருக்கும் என்று காட்டுகிறது. இது அப்பெண்ணின் துணிச்சலையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலையும் காட்டுகிறது. 'மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்' நாவலில், விலக்குப் பெற்ற பின் கணவன் வந்து ஆனந்தியிடம் தொந்தரவு செய்யும் நிகழ்ச்சி, அவளுடைய மறுமணத்திற்கு அவள் பெற்றோரை இசையச் செய்யும் மனமாற்றத்திற்கு உதவுகிறது. அது வரையிலும் மறுமணத்திற்கு முழு மனத்துடன் இசைவு தராமல் இருந்த அவள் தந்தை, இதன் காரணமாக இசைவது, தன் பெண்ணுக்கு ஓர் ஆண் துணை

வேண்டும் என்ற அளவில் உடன்படுவது போலக் காட்டப் படுகிறது. ஆணின் பார்வை இன்னமும் பெண்ணை இரண்டாந் தரக் குடியுரிமை நிலையிலே பார்ப்பதை—பெண் பலமற்றவள்; அவளுக்கு ஆணின் பாதுகாப்புத் தேவை என எண்ணுவதை— இந்நிகழ்ச்சி சித்திரிக்கிறது. ஆனால், ஆனந்தி இந்த நிகழ்ச்சி காரணமாக, அதிர்ந்துபோய் இருப்பதையும் நாவலாசிரியை காட்டுகிறார். அவள் மறுமணம் செய்யவிருக்கும் ஸ்ரீதரின் பாட்டி மட்டும் துணிவாக இதை ஏற்பதை நாவல் காட்டுகிறது. ''மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள். அவர்கள் விழித்துக்கொள்ள ஏதாவது அதிர்ச்சி வேண்டும்'' (**மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்**, பக். 296) என்று கூறும் பாட்டியின் கூற்று இதனைக் காட்டும். முழுவதும் உளவியல் பார்வையிலே இப்பிரச்சினையை வாஸந்தி அணுகியிருப்பது இதற்குக் காரணமாகும்.

**மணவிலக்கைப் பெண்ணைச் சார்ந்தோர் எதிர்கொள்ளல்**

பெண்ணைச் சார்ந்த நெருங்கிய உறவினர்களே— பெற்றோர், பாட்டி, தமக்கை ஆகியோர் மணவிலக்கு முடிவை ஏற்கத் தயக்கம் காட்டுவதை இப்புனை கதைகள் சித்திரிக் கின்றன. தயக்கம் கொள்ளக் காரணம் மரபு வழியான சமூகப் பார்வை, தம்முடைய சமூகத்தகுதிக்கு இழுக்கு வருமோ என்ற அச்சம், ஆகியனவாகும். இவற்றின் அடிப்படையில், பெண்ணைக் குறித்த மரபு ரீதியான பிம்பமும், ஆணாதிக்கச் சமூகக் கட்டுப் பாடுகளும் காரணங்கள் ஆகும். பெண் இரண்டாந்தர நிலையில் ஆணைச் சார்ந்து இயங்குபவள், என்ற கருத்தாக்கமே இப்பார்வையைக் காலங்காலமாக ஏற்படுத்தியுள்ளது. 'மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்' நாவலில் ஆனந்தியின் தாயும், 'திறக்காத ஜன்னல்கள்' நாவலில் அருணாவின் தாய் நளினியும், 'மாதிரிக்கு ஒரு மாதவி' சிறுகதையில் மாதவியின் சகோதரியும் இவ்வாறு தயக்கம் காட்டுகின்றனர். இந்த நாவல் களில் வரும் தந்தை, பாட்டி, அத்தை ஆகியோர் இந்த முடிவை முழுவதுமாக ஆதரிக்கின்றனர். பாலங்கள்' நாவலில் தந்தையும் அத்தையும் ஆதரிக்கின்றனர் என்பதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே, இவர்களை மனங்கொள்ளச் செய்வதான பொறுப்பை யும் தலைவியர்—அல்லது பிறர்—ஏற்க வேண்டியுள்ளது. மிகவும் முரண்டுபிடித்து ஏற்க மறுப்போரை ஓரளவிற்கு மேல், அவர்கள் போக்கில் விட்டுவிடுவது 'திறக்காத ஜன்னல்கள்' நாவலில் இடம் பெறுகிறது. அவர்களாக மனம் மாறி இதனை ஏற்க

வேண்டும் என்றும் கூறப்படுகிறது. மனைவியின் அடிப்படை உரிமைகளைச் சிதைத்து, அவளைத் தொடர்ந்து கொடுமை செய்யும் ஆணிடமிருந்து அவள் விலகுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை இயல்பான முடிவாகவும் நடப்பியல் நெறி சார்ந்ததாகவும் இந்தப்படைப்பாளர்கள் காட்டியுள்ளனர். பெண்களிடம் இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற முனைப்பு, படைப்பாளர்களிடம் காணப்படுகிறது.

## முடிவுரை

ஆண் முதன்மையாளனாக உள்ள நம் சமூக அமைப்பில், முடிவுகளெடுப்பவனாகக் கணவன் உள்ளான். பொருளீட்டி, அலுவல் பார்த்துப் படித்துப் பட்டம் பெற்றவளாக இருப்பினும் மனைவியின் நிலை, அவனெடுக்கும் முடிவை மறுபேச்சின்றி அப்படியே செயற்படுத்துபவளாகவே உள்ளது. மனைவி, குடும்பம் என்ற தகுதிகள் காரணமாக இவ்வாறு அவள் அடிமை யாகிறாள். மணம் பேசப்படுவதிலிருந்து அவளுடைய விருப்பம் புறக்கணிக்கப்படுவதும், பிறர் முடிவுகளுக்குக் கட்டுப்படவும் அவள் பழக்கப்படுகிறாள். பெண் கொண்டுவரும் வரிசைப் பொருட்கள் போல, அவளும் கணவனின் உடைமைப் பொரு ளாகவே மதிக்கப்படுகிறாள். வேலைபார்க்கும் பெண், மணத் திற்குப்பின் வேலையை விட்டுவிடுமாறு சில உயர்தரக் குடும்பங் களில் நிர்ப்பந்திக்கப்படுகிறாள். வேலைக்குப் போய்வர அனுமதிக்கப்படும் மத்தியதரக் குடும்பங்களில் அவளுடைய வருமானம் மறந்து கூட அவள் பெற்றோர் வீட்டிற்குப் போய் விடாமல் கண்காணிக்கப்பட்டு, கப்பமாக அவள் கணவன் வீட்டாரால் வசூலிக்கப்படுகிறது; இந்த மணவாழ்வு தன் பிறந்த வீட்டுத் தொடர்பைத் துண்டிக்க—மறக்க—வலியுறுத்துகிறது.

இச்சமூக அமைப்பில், குழந்தைப்பேறு இல்லையென்றால், உடன் மறுமணஞ் செய்து கொள்ள (அவனிடம் குறையிருந்தால் கூட) கணவன் அனுமதிக்கப்படுகிறான். ஆண் குழந்தை பிறந்தால், தந்தை நரகம் போகமாட்டான் என்ற மரபு சார்ந்த நம்பிக்கையும் கொடிய வரதட்சணைப் பழக்கமும் பெண் குழந்தை பிறப்பதை இழிவாகக் கருதச் செய்கிறது. தனக்குக் குழந்தை பிறப்பதைச் சிலகாலம் தள்ளிப்போடவோ, கருவை கலைப்பதற்கோ நினைக்கவும் முடிவெடுக்கவும் கூடிய உரிமை தாய்க்கு—பெண்ணுக்கு—மறுக்கப்படுகிறது. மணவாழ்வு இவ் வாறு சிக்கல்கள் மிகுந்த நிலையில் காட்டப்படுகிறது. கணவன்

என்ற பங்கு நிலையில், ஆண் தன் மனைவியை மனுஷியாக மதித்து இணையாக நடத்தாமல், அடிமைப்படுத்தி அவள் ஆளுமையைச் சிதைக்கிறான். சமூக அமைப்பிலுள்ள ஆணாதிக்க மனநிலை, தன் உடைமைப் பொருளாகவே பெண்ணைக் கருதும் ஆணின் மனநிலை, பெண்ணைப் பற்றியும் அவள் கடமைகள் பற்றியும் ஆண் கொள்ளும் மரபு வழியான கருத்தாக்கங்களும் இதற்குக் காரணங்களாகும். இவற்றை எதிர்த்துப் போராடவும், சமூக அமைப்பை மாற்றவும் வேண்டும் என்பதை எண்பதுகளில் வெளியான புனைகதைகள் அழுத்தமாகக் காட்டுகின்றன.

வரலாற்றுப் பூர்வமாகவும், சமூகவியல் அடிப்படையிலும் சரிவரப் புரிந்து கொண்டு நிகழக் கூடிய சமூக மாற்றமும், ஆணின் (தனி மனித) மன மாற்றமுமே இப்பிரச்சினைகளை மாற்றும் என்று இப்படைப்பாளர்கள் தீவிரமாகக் காட்டு கின்றார்கள். பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், சமூக மாற்றத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதும், இப்புனை கதைகள் தரும் செய்திகளாக (Message) உள்ளன. கல்வி கற்று, பண்பாடு அடைந்த ஆண்கள், பெண்களைத் தமக்கு இணையாக, அறிவு சார்ந்த மனிதர் என நடத்த வேண்டும் மாறாக, உடைமை மனநிலையும், ஆதிக்கப் போக்கும் கொண்டு அடிமைப் படுத்த முயன்றால், பெண்கள், எதிர்த்துப் போராடுவார்கள் என்று இப்படைப்புக்கள் காட்டுகின்றன. நம்பிக்கையையும், துணிவையும், விழிப்புணர்வையும் ஊட்டுவதுடன், தளைகளி லிருந்து சிறை மீட்சி உண்டு என்று அழுத்தமாகக் காட்டுவதும் இப்புனைகதைகளின் தனித் தன்மைகளாகும்.

கணவனின் இன்னல்களுக்கு ஆளான பெண்கள், நீதிமன்றம் மூலம் மணவிலக்குப் பெறுவதையும், தனித்து வாழ்வதையும், மறுமணம் செய்து கொள்வதையும் இப்புனைகதைகள் காட்டு கின்றன. மணவிலக்குப் பெறுவது, குடும்ப கௌரவத்திற்கு இழுக்கு என்று எண்ணும் மரபு சார்ந்த மூத்த தலைமுறை யினரின் கண்ணோட்டமும் அதன் பின்னுள்ள சமூக அமைப்பு, ஆணாதிக்கப் போக்கு ஆகியவை வரலாற்றுப் பூர்வமாக இளைய தலைமுறையினரால்-குறிப்பாகப் பெண்களால்—தீவிரமாக எடுத் துரைக்கப்படுகின்றன. பெண்ணிய இலக்கியக் கோட்பாடுகளின் வெளிப்பாடாக இவை காணப்படுவது, தமிழ்ப்புனைகதை வரலாற்றில் முந்தைய காலத்தைவிடவும், வலுவானதாக எண்பதுகளில் உள்ளது. மணவிலக்குப் பெற்ற பெண்ணிடம் அனுதாபம் காட்டுவதாகக் கூறி அவள் ஆளுமையை யாரும்

சிதைத்துவிடக் கூடாது என்பதும் இப்படைப்பாளர்களால் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் காட்டப்படுகிறது. மணவிலக்கு வழக்குகள் குடும்ப நீதிமன்றங்களில்—நீதிபதியின் அறையில், மிகவும் இன்றியமையாத மனிதர்களின் முன்னிலையில் நடைபெறுவதாகக் காட்டப்படுகிறது. மிகுந்த மன உறுதியுடன், மணவிலக்கை ஏற்பதும், தம்மைச் சார்ந்தோரை அம்முடிவை ஏற்பதற்குப் பக்குவப்படுத்துவதும் தனக்கென வாழ வேண்டும் என்ற நம்பிக்கை தரும் வாழ்க்கைச் சிந்தனையும் உடையவர்களாக—உரம் மிக்கவர்களாக—பெண்கள் படைக்கப்பட்டுள்ளனர். மணவிலக்கு இயல்பாகவும் நடப்பியல் நெறி சார்ந்ததாகவும் காட்டப்படுவதுடன் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு உதவுமாறு பன்முகத்தன்மையில், இப்புனைகதைகளில் காட்டப்பட்டுள்ளது.

# குடும்பச் சிதைவு

## முன்னுரை

குடும்பம் என்ற நிறுவனம் ஆணும் பெண்ணும்—கணவனும் மனைவியும் கூடிவாழ்வதாகும். முன்னர் கூட்டுக் குடும்பங்களாக இருந்தவை. இப்போது பெரும்பாலும் தனிக்குடும்பங்களாக மாறியுள்ளன. கூட்டுக் குடும்பமாயினும் தனிக்குடும்பமாயினும், கணவன்—மனைவி இருவரும் அன்பு செலுத்தி, ஒருவருக்கு ஒருவர் அன்பாகவும் அனுசரணையாகவும் இருப்பின் பிரச்சினை எழாது. ஆண் தன்னுடைய மேலாதிக்கத்தைக் காட்டுவதாகவும் பெண்ணை அடிமைப்படுத்தித் துன்புறுத்தியும் இழிவுபடுத்தியும் நடத்தினால் சிக்கல் எழும் இந்த நிலையில் குடும்பம் சிதையும் சிதைவின் விளைவாகப் பெண் வீட்டைவிட்டு வெளியேறுவாள். அல்லது வெளியேற்றப்படுவாள். எண்பதுகளில் வெளியான தமிழ்ப் புனைகதைகளில் முன்னெப்போதையும்விட மிகுதி யாகவும் ஆழமாகவும் குடும்பச் சிதைவு சித்திரிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலமாக, சமூக அமைப்பில் ஏற்பட்டுவரும் பெண் களின் எழுச்சியும், உலகம் முழுவதிலும் சமூக வாழ்க்கையில் ஏற் பட்டுள்ள, பெண்ணிய இலக்கியக் கோட்பாடுகளும் இதற்கு அடிப்படைக் காரணங்களாகும். எண்பதுகளில் வெளியான புனைகதைகளில், குடும்பச்சிதைவு என்பதை ஆய்வதாக இவ் வியல் அமைகிறது. தனிக்குடும்பத்தின் சிதைவே இங்குப் பேசப் படுகிறது. ஒரு சில நாவல்களில் மட்டும், மாமியார் அல்லது நாத்தனார் கூட இருக்கும் கூட்டுக் குடும்பம் சித்திரிக்கப் பட்டுள்ளது. சிதைவு என்ற சொல், உயர்ந்த நிலையிலிருந்தும் தாழ்வுற்று நொறுங்கிப் போதல் ஆகும். நாவல்களில் தலைமை அல்லது துணைக் கதைப் பின்னல்களில் குடும்பக் சிதைவு சிக்கலாக இடம் பெறுகிறது.

காலங்காலமாக இருந்துவரும் நம் சமூக அமைப்பில் ஆணா திக்கமும் ஆண் முதன்மைத் தன்மையும் இதன் அடிப்படைக்

காரணங்களாகும். பெண்ணை அடிமைப் படுத்துவதுடன் பெண்ணைத் தன் உடைமைப் பொருளாகப் பார்க்கும் ஆணின் மனநிலை இதற்குக் காரணமாகும். கல்வி கற்று அலுவல் புரிந்து, பொருளுற்பத்தியில் ஈடுபட்டு உள்ள பெண்ணைக் குடும்ப நிறுவனத்தில் தன் உடைமையாக எண்ணி அடிமையாக நடத்தும் கணவன் அவளுடைய தனித்துவத்தை ஏற்காமலும் மனைவியைத் தனக்கு இணையாக நடத்தாமலும் இருக்கிறான். மனைவியின் ஆளுமையைச் சிதைக்குமாறு கற்புக்கோட்பாடு. ஆதிக்கப்போக்கு இவைகளால் தளைப்படுத்துகிறான். இதனால், சிக்கல் ஏற்பட்டுச் சிதைவு நிகழ்வதையும், வெளியேறிய—வெளியேற்றப்பட்ட— மனைவி, தனித்திருந்து வாழ்ந்து காட்டுவதையும் இப்புனை கதைகள் சித்திரிக்கின்றன.

இவ்வியலில், சான்றுகளாக **வெந்து தணிந்த காடுகள், சுந்தர காண்டம், பைசா நகரத்துக் கோபுரங்கள், மனிதர்கள் பாதி நேரம் தூங்குகிறார்கள், ஓசைகள் அடங்கியபிறகு, பாலங்கள், மானுடத்தின் மகரந்தங்கள், எல்லைகளின் விளிம்பில், திறக்காத ஜன்னல்கள், சுழலில் மிதக்கும் தீபங்கள், ஆண்களோடு பெண் களும், ஊமை அரண்கள்** ஆகிய நாவல்களும், 'மாதிரிக்கு ஒரு மாதவி', 'ஆதார சுருதி', 'ஒரு வித்யாவின் கதை'.'சிலுவைகள்' ஆகிய சிறுகதைகளும் அமைகின்றன. மத்தியதர, உயர்மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த குடும்பம் நகரப் பின்னணியில் சிதைவதை இந்தப் புனைகதைகள் காட்டுகின்றன. பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள, பிற்படுத்தப்பட்ட உழைத்துப் பிழைக்கும் கிராமப்புற எளிய மக்களிடையில் இச்சிக்கல் இருப்பதாக இப் படைப்புக்கள் எதுவும் காட்டவில்லை. உழைப்பை மையமிட்டு, அவரவர் வயிற்றுப்பாட்டிற்கு அவரவர்—ஆணும் பெண்ணும்— உழைக்கும் சமூக அமைப்பில், மையக்குவியலாக அதிகாரம் இல்லாத நிலையில் சிதைவுக்கு இடமுல்லை. மனமொத்து இணைந்து வாழ்வதும், பிடிக்காதபோது, தீர்த்துக் கொள்வது மாக அந்த வாழ்க்கைப்பாடு உள்ளது. நகர நாகரிகம் ஆணாதிக்கம், கற்புக்கோட்பாடு போன்றவை அங்கு அதிகம் காணப்படாமை குறிக்கத்தக்கது. சிதைவிற்கான காரணங்கள், விளைவுகள், பெண் அவற்றை எதிர்கொள்ளல் என்று இவ்வியல் பகுக்கப்பட்டுள்ளது. சிதைவிற்குப் பின் பெண் தனித்து, துணிவுடன் வாழ்வதையும், சில படைப்புக்களில் மட்டும் மீண்டும் குடும்ப வட்டத்திற்குள் இணைவதையும் படைப்பாளர் கள் காட்டியுள்ளனர். முந்தைய காலத்தை விடவும் தனிக்

குடும்பச் சிதைவு மிகவும் அதிகமாக இக்காலக்கட்டத்தில் படைப்பாளர்களால் காட்டப்படுகிறது.

**சிதைவிற்கான காரணங்கள்**

குடும்பச் சிதைவு நிகழ்வதற்குப் பல செயல்களும், நிகழ்ச்சிகளும், விவாதங்களும் இட்டுச் சென்று, இறுதியில், வேறுவழி இதைத் தவிர இல்லை என்ற நிலையில், இம்முடிவு ஏற்படுவதாக இப்படைப்பாளர்கள் காட்டியுள்ளனர். ஆணாதிக்கச் சமூக அமைப்பில் காணப்படும் ஆணின் உடைமை மனநிலை, கற்புக் கோட்பாடு, பெண்ணின் தனித்துவத்தை ஏற்காத மனநிலை, வரதட்சணை/சீர், ஆணின் குறைபாடு, பெண்ணைத் துன்புறுத்தி அதில் இன்பங்காணும் கொடூர மனநிலை, பிறந்த வீட்டு உறவை மனைவி துண்டித்துக் கொள்ள வேண்டும் என்ற கணவனின் கட்டுப்பாடு ஆகியன சிதைவிற்கான காரணங்களாக அமைகின்றன. இப்படைப்புக்களின் கதைத் தலைவியர் படித்த பெண்களாக, அலுவல் பார்க்கின்ற (அல்லது மணத்திற்கு முன் பணி புரிந்து பின்னர் அதை விட்டு விட்ட)வர்களாக உள்ளனர். எனவே, கல்வியறிவும், அலுவல் புரிவதும் தனித்து நிற்கும் துணிவையும், தீமை, அடக்குமுறை இவற்றை எதிர்த்துப் போராடும் உரம், வலு, விழிப்புணர்வு ஆகியவற்றை நல்குவதாகவும் காட்டப்பட்டுள்ளன.

தன் மனைவியைச் சரிசமமாக, ஒரு மனுஷியாக நடத்தாமல், அவளுடைய தனித் தன்மைகளை—அவளுக்கென்று தனிமுகம் இருப்பதை—விரும்பாமல், அவள் அடிமையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறான், கணவன். தான் அலுவலகப்பணி காரணமாக வெளியில் குடிக்கவும் பிற பெண்களுடன் பழகுவது என்பவை உயர்மத்தியதர வர்க்கத்து அலுவலக அதிகாரியின் சமூகத்தகுதி என்று வாதிடும் கணவன் அருண், தன் மனைவி விம்மி, அவளுக்கு ஈடுபாடுள்ள ஓவியக்கலை ஆர்வம் காரணமாக ஓவியன் தாமோதரன் வீட்டிற்குச் சென்று, இரவு நேரங் கழித்து வந்ததை ஒளிவு மறைவின்றிச் சொன்ன பிறகு, அவள் ஒழுக்கத்தை ஐயுற்றுப் பேசுவதாக 'வெந்து தணிந்த காடுகள்' நாவல் காட்டுகிறது தனக்கொருவிதமாகவும், தன் மனைவிக்கொருவிதமாகவும், பிற பெண்களுக்கு ஒருவிதமாகவும் அவன் ஒழுக்க அளவுகோல்கள் வைத்திருப்பதை மனைவி சுட்டிக் காட்டுவதை அவனால் ஏற்க முடியவில்லை. இதன் விளைவாக, குடும்பச் சிதைவு ஏற்படுகிறது. விம்மி தன் கணவனுக்குத் தகவல் கொடுத்து விட்டு வீட்டை விட்டு வெளியேறி, ஓவியன்

தாமோதரன் வீட்டுக்குச் சென்று அங்கு வாழ்கிறாள். தன் கணவனிடம் அவள் ஒளிவு மறைவின்றித் தாமோதரன் வீட்டிற்குப் போனதையும் அங்கே 'விஸ்கி' குடித்ததையும் கூறுகிறாள். அவனோ, ''அந்த 'பாஸ்டர்ட்' வீட்டுக்குப் போனது தப்புக் காரியம் இல்லே. அங்கே 'விஸ்கி' குடிச்சது தப்புக் காரியம் இல்லே... அப்புறம் அங்கே என்ன நடந்ததோ?, யாருக்குத் தெரியும்...'' (**வெந்து தணிந்த காடுகள்**, பக். 103) என்று கூறுவதில், அவளுடைய கற்பை அவன் சந்தேகிப்பது வெளிப்படுகிறது. அவள், இந்த ஐயத்தை—கணவனின் மாறுபட்ட அணுகுமுறைகளை ஏற்க மறுக்கிறாள். மனைவியைத் தன் உடைமைப் பொருளாகவும், தன் போகப் பொருளாகவும் கருதும் கணவனின் ஆதிக்க மனநிலை இங்குச் சிதைவிற்கு அடிப்படைக் காரணமாகிறது. தவறு செய்யாத இடத்திலும், தன்னிலையை வெளிப்படையாக விளக்கிய பின்னும், மனைவி பக்க நியாயத்தைப் பற்றிக் கவலைப்படாமல், சுலபமாக அவள் நடத்தையை ஐயுறுகிறான். காலங்காலமாக இருந்துவரும் கற்புக் கோட்பாட்டைக் கொண்டு தன் மனைவியின் மீது சுலபமாக அவன் சேற்றை வீசுகிறான். ஆணின் ஆதிக்க உணர்வு, பெண்ணின் தனித்துவத்தை திறமையை ஏற்காத மனநிலை, மனைவியைத் தன் உடைமைப் பொருளாகப் பார்க்கும் தன் முனைப்பு, பெண்ணுக்கு மட்டுமான கற்புக் கோட்பாடு என்பவை காரணங்களாக இந்த நாவலில் சிதைவு நிகழ்கிறது.

'ஓசைகள் அடங்கிய பிறகு' நாவலில் மாறுபட்ட சூழல் காட்டப்படுகிறது. தன் மனைவி மீனா, தங்களுக்குத் திருமணமாகிய சில மாதங்களுக்குள் கருவுற்ற நிலையில், தான் பணி செய்யும் பள்ளியில் பணி நிரந்தரமாவதற்கு முன்பாக மகப்பேறு விடுப்பு எடுக்க அனுமதி கிட்டாது என்பதால், தன் கணவன் சாரங்கனிடம் கூறாமல், தானே முடிவெடுத்து, மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெற்றுத் தன் கருவைக் கலைத்து விடுகிறாள். இதனை அறிந்த கணவன் அவளை ஏசி, துன்புறுத்தி, அவள் ஒழுக்கத்தை இழிவாகப் பேசி அவளை வீட்டை விட்டு வெளியே தள்ளுகிறான். ''நாமே இன்னும் சரியாக ஊனாத நிலையில் ஒரு அதிகப்படி பொறுப்பு வேணுங்களா'' என்று தன் பக்கத்து நியாயம் கூறும் மீனாவிடம், ''உனக்கு மனசாட்சி உறுத்திருக்கு. எவனுக்கோ உண்டானதை எம்புள்ளேன்னு சொல்ல கூசியிருக்கு... நீயே எனக்குத் தெரியாம டாக்டரிடம் ஏதோ வாடிக்கையாகப் போகிறது போல் போயி...'' என்று கணவன் அவளை நடத்தை கெட்டவள் என்று

கூறி ஏசுகிறான். (ராஜம் கிருஷ்ணன், **ஓசைகள் அடங்கிய பிறகு** பக். 239, 241). இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, அவளை வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது என்று கூறிட, அவள் மீறிப் போனதற்காக வீட்டை விட்டு வெளியேற்றுகிறான். அப்போதும் அவள் நெறிதவறியவள் என்று ஏசுகிறான். ''சேரியிலிருந்து மேலே ஏத்திவைச்சா அந்தப் புத்தி எங்கே போகும்? ரெட்லைட் ஏரியாவில் இருக்க வேண்டியதுங்களைப் போயி நடுவீட்டிலே கொண்டு வச்சிருக்க முடியுமா'' (மேலது, பக். 271) என்று கூறு கிறான். இந்த நாவலில் தன் மனைவியைத் தன் உடைமைப் பொருளாக மதிக்கும் ஆணின் ஆதிக்க மனநிலையும், பிள்ளைப் பேற்றைத் தள்ளிப் போடவோ, கருவைக் கலைக்கவோ தாயாகும் மனைவிக்கு உரிமை கிடையாது என்ற ஆணின் ஆதிக்க முனைப்பும், மீறிச் செயல்பட்ட தன் மனைவியைக் கற்பு தவறியவள் என்று பழிக்கும் பெண்ணுக்கு மட்டுமான கற்புக் கோட்பாடும் சிதைவிற்குக் காரணங்களாகின்றன. 'ஒரு பெண்ணுக்குக் குழந்தையைப் பெத்துக்கிறதுக்கும் பெறாம தள்ளிப் போடுறதுக்கும் சுதந்தரம் உரிமை இல்லையா?' என்று மீனாவின் கூற்றிலும் (பக். 241), 'ஒரு பொண்ணு தனக்கு இப்ப குழந்தை வேணுமா, வேண்டாமா என்று நினைக்கவே சுதந்திரம் இல்லே' என்று (பக். 234) அவள் தோழியின் கூற்றிலும், பெண்ணின் உரிமையற்ற நிலை இந்த நாவலில் விளக்கப்படு கிறது. படித்து, கல்வி கற்றுப் பள்ளியில் பணிபுரியும் பெண்ணான போதிலும் செயலில் முடிவெடுக்கும்உரிமை மனைவிக்கு இல்லை; தான் எடுத்த முடிவைச் செயற்படுத்துவது மட்டுமே மனைவி யின் கடமை என எண்ணும் கணவனின் ஆதிக்க உணர்வு வெளிப்படுகிறது.

சில படைப்புக்களில் கற்புக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒழுக்க நெறி குறித்த பழைய மதிப்புக்களை அளவுகோல் களாகக் கொண்டு, மனைவி தவறு செய்யாத போதிலும் அவள் ஒழுக்கங் குறித்த கணவனின் ஐயமும், ஏச்சும், அவற்றின் அடிப் படையிலான முடிவுகளும் சிதைவிற்குக் காரணங்களாகின்றன. கணவனுடன் கடைத் தெருவிற்குச் சென்று விட்டு, வரும் வழியில், இரவில் முரடன் ஒருவனால் பாலுறவு வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட மனைவி சௌதாமினியைக் கணவன், மாமியார் ஆகியோரும், பின் அவள் பெற்றோரும் வீட்டை விட்டு வெளி யேற்றுகின்றனர் என்று 'பைசா நகரத்துக் கோபுரங்கள்' நாவல் காட்டுகிறது. தன் பொறுப்பில் தன்னுடன் வந்த சமயம், தன் மனைவிக்கு ஏற்பட்ட விபத்தை அறிந்தும் கூட, கணவன்

பழைய காலக் கற்புக் கோட்பாட்டை வைத்து அவளை மனைவி என்று ஏற்கவோ, வீட்டில் வைத்திருக்கவோ மறுக்கிறான். ஆணாதிக்கச் சமூக அமைப்பில், பெண்ணை இன்பநுகர்வு பொருளாக மட்டும் பார்க்கும் கணவனின் மனநிலையில் அவளைத் தன் உடைமையாக நினைக்கும் முனைப்பும், பெண்ணைத் தன் கட்டிற்குள் வைத்திருப்பதன் வழி அடிமைப்படுத்தும் கற்புக்கோட்பாடும் இங்கு அடிப்படைக் காரணங்களாகிச் சிதைவு நிகழ்கிறது. ''இதுக்கொல்லாம் நீ காரணமில்லை என்றாலும் உன் கிட்ட பழைய மாதிரி ஏன் நெருங்கிப் பழகலை, மனைவியா ஏத்துக்கலைன்னு கேட்டால், அதுக்கு என் மனசு இடம் கொடுக்கல்லே. அந்த அளவிற்குப் பரந்த மனப்பான்மை எங்கிட்ட இல்லே. பரந்த மனப்பான்மையை வளர்த்துக்கவும் முடியலை. ஏன்னா நான் வளர்ந்த சூழ்நிலை அப்படி...'' என்று கூறும் கணவனின் கூற்றில், (இந்துமதி **பைசா கோபுரங்கள்**, பக். 105-106) அவனிடமுள்ள பழமையான எண்ணப்போக்கும், மரபு வழிப்பட்ட பார்வையும் வெளிப்படுகின்றன. தன் மனைவியை உடைமைப் பொருளாகக் கருதும் கணவன், அந்த உடைமைப் பொருள் அதன் விருப்பமின்றி மற்றொரு ஆணின் நுகர்விற்கு ஆளானதைத் தாங்க முடியாமல் துடிப்பதும் உடன் தன் பொறுப்பைத் தட்டிக்கழித்து, அதிலிருந்து தான் தப்பிக்க முயலும் அவசரமும் ஒருங்கு வெளிப்படுகின்றன. பெண்ணின் தந்தை. ''என் வீட்டுல என் பாதுகாப்பிலே இருந்த போது இந்த மாதிரி நடந்திருந்தா அதற்கு நான் பொறுப்பு ஏத்துக்கலாம்... ஆனா அவ உங்க பொறுப்பல உங்க கூடவே வந்தபோது தான் இப்படி நடந்திருக்கு. அதனாலே இதன் மொத்தப் பொறுப்பும் உங்களுடைது...மாப்பிள்ளே.'' (மேலது, ப. 78) என்று தன் மகளைப் பற்றிக் கூறிவதில், பெண்ணைச் சார்புநிலையில், இரண்டாந்தரக் குடியுரிமையுடையவளாகக் கருதும்—நடத்தும்—ஆணின் ஆதிக்க உணர்வு வெளிப்படுகிறது. கற்புக்கோட்பாட்டு அடிப்படையில் சிதைவு நிகழ்வதும், பெண்ணை அதனால் துயருக்குள்ளாக்கும் ஆண்களின் மனப்போக்கும் இந்த நாவலில் வெளிப்படுகின்றன.

தன் கணவனின் ஒழுக்கச் சிதைவு, அதன் பின்னுள்ள பெண்ணை இன்ப நுகர்ச்சிக்கு மட்டும் பயன்படுத்திவிட்டு அவளுக்கு மனைவிஎன்ற சமூகத் தகுதியைக்கூடத் தராமல் (மணந்தால் அது இரண்டாவது மணமாகி, அதன்வழி ஏற்படும் நீதிமன்றச் சட்டச் சிக்கல், தன் சமூகத்தகுதிக்கு ஏற்படும் சரிவு என்பவை காரணமாக) அடிமைப்படுத்தும் ஆணாதிக்க உணர்வு என்ப

வற்றை அறிந்து, அவனை மாற்ற முடியாது என்று அறிகிறாள் சுந்தரகாண்டம் நாவல் சீதா. ஆகவே, அவனை விட்டு விலகித் தனியே வாழ்கிறாள். தான் செய்யும் செயலைச் சுட்டிக்காட்டி, வீட்டில் பணி செய்யும் விதவையான தாதி மீனாவை மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தன் கணவன் சுகுமாரனிடம் சீதா கேட்கிறாள்: ''அவளே (மீனாவே) அதையெல்லாம் கேட்கிறது. சரியில்லேன்னு, இருக்கிற வாழ்க்கையிலே திருப்தியா யிருக்கும் போது நீ ஏன்...உனக்குச் சம்பந்தமில்லாத விவகாரத் திலே தலையிடறே'' என்று (ஜெயகாந்தன், **சுந்தரகாண்டம்**, பக். 350-351) சுகுமாரன் பதில் கூறுவதில், ஆண் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; அவனை மனைவி கேட்க முடியாது; ஒழுக்கக் கட்டுப்பாடுகள் பெண்ணுக்கு மட்டும்தான் என்ற ஆணாதிக்கச் சட்டங்கள் வெளிப்படுகின்றன. பெண்ணின் உரிமை பறிக்கப்பட்டு அவள் அடிமைப்பட்டுப் போவதை எதிர்த்து, சீதா தன் குடும்பத்தைவிட்டு வெளியேறி, தன் பெற்றோர் வீட்டில் இருந்து தனியே வாழ்கிறாள்.

திருமணம் ஆவதற்கு முன், எம்.ஏ. படித்து, ஆசிரியைப் பயிற்சி பெற்று பள்ளியில் பணிபுரிந்து அதை முழு ஈடுபாட்டுடன் செய்து பாராட்டும்படி சாதனைகள் செய்து இருந்தவள் கிரிஜா. மணமாகி, குடும்பத் தலைவியாகி, மூன்று குழந்தைகளுக்குத் தாயான அவளை வெறும் எந்திரம் போல நடத்துகிறான் கணவன். 'சுழலில் மிதக்கும் தீபங்கள்' நாவல் இதனைச் சித்திரிக் கிறது. தனக்குத் தெரியாமல் கணவன் மறைத்து வைத்திருப்ப தைப் பற்றிக்கேட்க, சினந்து, ஏசி, உணவுத்தட்டை மனைவியின் முகத்தில் வீசியெறிந்து செல்கிறான். மனைவியின் தனித் துவத்தை மதிக்காமல் அவளை அடிமைபோல நடத்திய கணவன்—மாமியாரிடம் கூறாமல், மூன்று நாட்கள் ஹரித்துவார் சென்று வருகிறாள் கிரிஜா. அவ்வாறு போய் வந்தவளை வீட்டிற்குள் அனுமதிக்க மறுத்து, அவள் நெறி தவறியவள் என்று கணவனும் மாமியாரும் ஏசுகின்றனர். இதனால் அவள் வீட்டை விட்டு வெளியேறி, பணிபுரியும் மகளிர் விடுதியில் இருந்து, தனியே வாழ்ந்து தன் மகளை-பெண் குழந்தையை-நன்கு பொறுப்புடன் வளர்க்க விரும்புகிறாள். ஆணின் ஆதிக்க உணர்வு, பெண்ணின் தனித்துவத்தை மதிக்காமல், அடிமையாக நடத்தி, கற்புக் கோட்பாட்டின் அடிப்படையில் அவளை மாசுற்றவளாக ஏசுவது என்பவை சிதைவிற்குக் காரணமாகின்றன. 'ஓடிப்போயிட்டு' இந்த வீட்டில நுழைய, என்ன துணிச்சல் இருக்கணும்?... ஓடிப் போயி எங்கே சீரழிஞ்சுட்டு எனக்கு வெளியில் தலைகாட்ட

முடியல...'' என்று கணவனும், ''பால் சிந்தியாச்சு, அவ சாமான் துணிமணி எடுத்துண்டு போறா தானா போகட்டும்...வாயி லிருந்து கிழ விழுந்துடுத்து. எத்தனை நல்ல பண்டமான்னாலும் திருப்பி எடுத்து முழுங்க முடிகிறதா?'' என்று மாமியாரும் மனைவியின் நடத்தை குறித்து ஏசுகின்றனர். (ராஜம்கிருஷ்ணன், **சுழலில் மிதக்கும் தீபங்கள்**, பக். 96-97) இதனால் சிதைவு ஏற்படுகிறது. 'நாற்பத்தாறு வயசு. மூன்று குழந்தைகளுக்குத் தாய். இவள் குடும்பத்தைவிட்டுப் போனால், உடல் பாரமான மாசுகளை வீசுவதுதான் நியாயமா? அந்த மாசு ஆணுக்குக் கிடையாது இல்லை? ஒரு மனிதப்பிறவியான பெண்ணை இயந்திரத்தையும் விட மோசமாக நடத்த ஓர் ஆணுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் உரிமை வழங்கும் ஓர் அமைப்புதான் குடும்பம். இந்த மையமான அதிகார உரிமைக்குவியலை மாற்றமாட்டோம் என்றால், அவள் வெளியேறித்தான் அதைச் சீராகக் முயல வேண்டும். (மேலது, பக். 102-103) என்று வரும் கிரிஜாவின் சிந்தனை ஓட்டத்தில், சிதைவு ஏற்பட்டு அவள் வெளியிலிருந்து மைய அதிகாரக் குவியலை எதிர்த்துப் போராட விழைவதையும் காட்டும். நெறி தவறாதபோது—தன்னிடம் தவறு இல்லாதபோது—ஏசப்படுவதையும் தண்டிக்கப்படுவதையும் எதிர்க்கும் மனைவி, தன்னை ஆளுமைச் சிதைவிலிருந்து காப்பாற்றிக் கொள்கிறாள்.

மனைவி என்ற சமூகத் தகுதியைப் பெற்ற பின்னர், பெண் தனித்தன்மை ஏதுமின்றி, அடிமையாக இருக்க வேண்டும் என்று சமூகம் கட்டுப்படுத்துகிறது. மணமாவதற்கு முன், இளமையிலே இருந்து பழக்கம் உள்ள மனைவியின் ஆண் நண்பன், வீட்டிற்கு வந்துபோவதை அறிந்து, மனைவியின் நடத்தைகுறித்து, ஐயுற்றுப் பேசுகிறான் கணவன் என்றும் அது வளர்ந்து, மணவிலக்கு வரையிலும் போய்க் குடும்பம் சிதைவிற்குள்ளாவதை 'ஒரு வித்யாவின் கதை' என்ற சிறுகதை காட்டுகிறது. 'தாலி கட்டியவன் கூடக் கேட்டான், யார் இந்த ரவி? சாயங்காலம் ஆனால், இழுத்துக் கொண்டு வந்துவிடுகிறாயே?' என்று கேட்க, 'சிநேகிதன்' என்று பதில் கூறிய மனைவியுடம், 'வெறும் சிநேகிதன் மட்டும்தானா' என்று அடுத்துக் கேட்டான், கணவன். (பிரபஞ்சன், **ஒரு மனுஷி** ('ஒரு வித்யாவின் கதை'), பக். 176) இக்கதையிலும் பெண்ணுக்கு ஆண் நண்பன் இருப்பது முடியாது என்று அவளின் தனித்துவத்தை ஏற்காத ஆணின் ஆதிக்க உணர்வு, மனைவியைத் தன் உடைமைப் பொருளாகப் பார்க்கும் போக்கு, கற்புக் கோட்பாட்டின் அடிப்படையில் மனைவியை ஐயுறும் பழமை

யான் சிந்தனை காரணமாகச் சிதைவு நிகழ்கிறது. 'ஆபீஸ் விட்டு வர்ற போதே எவனையாவது வீட்டுக்கு இழுத்துக்கிட்டு வர்றவ சார் அவ' (மேலது, ப. 147) என்று தன் நண்பனிடமும் மண விலக்கு ஆன அன்று கணவன் பெண்ணை அவள் நெறி தவறியவளாகவே கூறுவதில், இக்கருத்து வெளிப்படுகிறது.

மனைவியைத் துன்புறுத்தி அதனால் தான் இன்பமடையும் ஆணின் (கணவனின்) கொடூரமான போக்கு, பாலுறவில் மனைவியைத் துன்பஞ் செய்வதாக முடிய அதனால் சிதைவு ஏற்படுகிறது. கணவனை விட்டுப் பிரிந்து நீதிமன்றம் வழிமுறையாக மணவிலக்கு பெறுவதைப் பாலங்கள். மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள். திறக்காத ஜன்னல்கள் நாவல்கள் காட்டுகின்றன. கணவனின் இத்தகைய கொடூரமான நிலையையும் அவருடன் உறவு கொள்வதையும் இப்பெண்கள் வெறுக்கின்றனர். இப்படைப்புக்களில் ஆண் தன் மனைவியைத் தன் இன்பத்திற்கு மட்டுமே உரியவள் என்பதாகவும் அவளின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்களைப் பற்றிக் கவலைப்படாத மிருகமாகவும் உள்ள போக்கு காட்டப்படுகிறது. மனைவியைத் தன் அடிமையாகக் கருதும் கணவனின் ஆதிக்கப்போக்கு, பெண்ணைத் தன் உடைமைப் பொருளாகக் கருதும் முனைப்பு, கொடூரமான மன உணர்வு ஆகியன காரணமாகச் சிதைவு நிகழ்கிறது.

'பாலங்கள்' நாவலில் கணவன் வக்கிரமான பாலுணர்வு வெறியனாகவும் மனைவியைத் துன்புறுத்தி—அவள் உடலைத் துன்புறுத்தி—இன்பந்தேடுபவனாகவும் அறையெங்கும் உள்ள மிருக இச்சையைத் தூண்டும் படங்கள், ஓவியங்கள் போன்ற புறத்தூண்டுதல்களால் பெண்ணைக் கொச்சைப்படுத்துபவனாகவும் இருக்கிறான். அவை எல்லாவற்றையும்விட, மனைவியின் விருப்பத்திற்கு மாறாக அவளை உறவு கொள்ள வற்புறுத்துவதும் அவள் மறுத்ததற்காக (வயிற்றிலுள்ள குழந்தை நலனுக்காக மருத்துவரின் அறிவுரைப்படி மறுத்ததற்காக) அவள் கண் முன், வேசி ஒருத்தியை அழைத்துவந்து தன் ஆதிக்கப்போக்கை வெளிபடுத்துவதும் சிதைவிற்குக் காரணமாகின்றன. (சாரு) மனைவி வீட்டை விட்டு வெளியேறுகிறாள். 'திறக்காத ஜன்னல்கள்' நாவலில் தன் கணவனின் செயல்களை மிகுந்த பொறுமையுடன் சகித்துக் கொண்டு பொறுமையுடன் இருக்கும் மனைவி அருணா, அவனுடைய மிதமிஞ்சிய ஒழுக்கக் கேடான செயல்களால் வெறுப்புற்று வேறுவழியின்றிப் பிரிந்து வருகிறாள்.

''என்னால தாங்கிக்க முடியலே. எத்தனை பணிஞ்சாலும் அவருடைய திமிர்த்தனம் ஏறுது; தன்மானம்னு ஒண்ணு இருக்கில்ல? கண்ட பொம்பளைங்களுடைய சினேகிதம் அந்த ஆளுக்கு. இந்த அழகிலே, என் மேலே சந்தேகம். யாரோடே பேசினே, எங்கே போனேன்னு ..'' (வாஸந்தி, **திறக்காத ஜன்னல்கள்**, பக்.34) என்ற அருணாவின் கூற்று இதனை விளக்கும்.

ஆணின் ஆதிக்க உணர்வு, ஒழுக்கக் கேடான செயல்கள் புரிந்துவரினும் அதை நியாயப்படுத்தும் போக்கு, பெண்ணை அடிமைப்படுத்திக் கற்புக் கோட்பாட்டை முன் வைத்து அவளை மட்டும் ஒடுக்குவது என்பன காரணங்களாகிச் சிதைவு நிகழ்கிறது. கணவனை விட்டுப் பிரிந்து, பெற்றோர் வீட்டிற்கு வந்து நீதிமன்றம் மூலம் முறையாக மணவிலக்குப் பெறுகிறாள். 'மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்' நாவலில் கணவன் ரகு இயற்கையிலே உள்ள தன் உடற்குறை காரணமாகத் தன் மனைவியைக் கொடூரமாக இம்சித்து, தன் ஆதிக்கத்தைக் காட்டுகிறான். ஒருநாள் அவன் அடாத செயல் செய்யவிருப்பதாக ''உனக்குக் குழந்தை பிறந்தால்தான் நான் ஆண்மகன் என்று உலகம் நம்பும். ஆனால் என்னால் உனக்குக் குழந்தை வராது. அதற்கு நான் என்ன செய்யப்போகிறேன் தெரியுமா? நாளை இரவு நாலு குண்டர்களை அழைத்து வரப்போகிறேன், உன்னை 'ரேப்' செய்ய' என்று தன் மனைவியை மிரட்டுகிறான். (வாஸந்தி, **மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்**, பக். 158) அவனுடைய உடற்குறை அவனை மனநோயாளியாக-தாழ்வு மனப்பான்மை உடையவனாக—மாற்றி, வெறியனாக ஆக்குகிறது. மனைவியின் பொறுமையும் அடங்கிப் போகும் பண்பும் மேலும் அவனைத் தீவிரப்படுத்துகிறது. இதனால், அவள் அவனறியாமல் தப்பித்து வந்து பெற்றோர் உதவியுடன் முறையாக நீதிமன்றம் வழி மணவிலக்குப் பெறுகிறாள். வழக்கின் போது கூட, தன் மனைவியை நெறி கெட்டவள் என்று அவன் வாதிடுவது—''அவளுக்கு என்னுடைய உறவு திருப்தியளிக்கவில்லை... வேறு ஆணோடு அவளுக்குத் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. அதனாலேயே பிரிந்து போகப் பார்க்கிறாள்'' (மேலது, பக். 223) என்று கூறுவது—தன் உடைமைப் பொருளாகப் பார்க்கும் முனைப்பையும் கற்புக் கோட்பாட்டை வைத்துப் பெண்ணை அடிமைப்படுத்தும் ஆதிக்க உணர்வையும் காட்டும்.

மானுடத்தின் மகரந்தங்கள் நாவலில் தன் கணவன் ஒழுக்க நெறி ஏதுமின்றி, வேறு ஒரு பெண்ணை வீட்டில் வைத்துக்

கொண்டு, மறைத்து, ஏமாற்றித் தன்னை மணந்தான் என அறிந்த ருக்மணி, முன்பு தன் மூத்த சகோதரியை அவனுக்கு மணஞ் செய்து கொடுத்த சமயம் போட்ட நகை, கொடுத்த சீர் என அனைத்தையும் அவன் அறியாதவாறு திரட்டி, அவனை விட்டு விலகித் தன் தாய் வீட்டிற்கு வந்து விடுகிறாள். இங்கு, ஆணின் ஆதிக்க உணர்வு, பெண்ணை அடிமைப்படுத்தும் முனைப்பு, ஒழுக்கக்கேடான செயல் என்பன காரணமாகச் சிதைவு நிகழ்கிறது. ''வீட்டிலேயே குடிப்பதும் கூத்தாடுவதும் கேலி செய்வதும். எவளோ இருக்கறப்ப என்னை ஏமாத்திக் கல்யாணம் பண்ணிண்டான்னு சந்தி சிரிக்க வைப்பேன்... இந்த மனுஷன் மகாமோசம்...கிரி இதனாலேயே உயிரைவிட்டிருப்பா... நான் அன்னிக்கே முடிவு பண்ணிட்டேன், குடுத்ததை வசூல் பண்ணத்தான் நாம கழுத்தக் குடுத்திருக்கிறோம்னு...'' (ராஜம் கிருஷ்ணன், **மானுடத்தின் மகரந்தங்கள்**, பக். 312, 311) என்று வரும் ருக்குவின் கூற்று இதனை வலியுறுத்தும். ''நானும் அவனும் ஒருவரை ஒருவர் மதிச்சு, பலம் பலஹீனம் புரிஞ்சு ஒத்து வாழணுங்கற லட்சியம் முதலா இருக்கறதுண்ணாலும் அந்தத் தாலிக்கயிறுக்கு அர்த்தமில்லே... வேரே அழுகின பிறகு எதுக்கு இதை வைச்சுக்கணும்?'' (மேலது பக். 312) என்று வரும் ருக்குவின் கூற்றில், கணவன்—மனைவி இருவரும் ஒத்துப் போகாமல், வேர் அழுகினால் சிதைவு ஏற்படும் என்ற சிந்தனை வெளிப்படுகிறது. பெண்ணை அடிமைப்படுத்தும் ஆண், நெறி யற்றவனாக—ஏமாற்றுக்காரனாக—இருப்பின், மனைவி அவனை விட்டு வெளியேறுவது சிறந்தது என்று காட்டப்படுகிறது.

மனைவியின் தனித்துவத்தை மதிக்காததுடன் தன் செயல் களில் குறுக்கிட்டு அறிவுரை—ஆலோசனை—கூறும் சம உரிமை எடுத்துக் கொண்டதற்காக அவளை வீட்டை விட்டு வெளியேறச் சொல்கிறான் கணவன் விசுவநாதன். 'ஆதாரசுருதி' சிறுகதையில் ''என்னோட நீ குடித்தனம் பண்ணணும்னா நான் என்ன செஞ்சாலும் எதிர்த்துப் பேசக் கூடாது. பொண்டாட்டியா லட்சணமா சமையல் உள்ளே கிட... நான் ஆம்பிளைடி குடிப்பேன். நாலு பெண்ணை வைச்சுப்பேன்... அதுக்குச் சரின்னா உள்ளே இரு. இல்லே உன் சூட்கேஸை எடுத்துக்கிட்டு வெளியே போ! திரும்பி வராதே'' (கீதா பென்னட், **ஆதார சுருதி**, பக். 120) என்று விசு கூறுவதில் ஆணின் ஆதிக்க உணர்வு, பெண்ணை அடிமைப்படுத்தும் பாங்கு, இரண்டாந் தரக் குடியுரிமை உடையவளாக மனைவியை நடத்தும் ஆணின் முனைப்பு ஆகியன வெளிப்படுகின்றன. இவற்றை வெறுத்து,

அவன் போக்கை விரும்பாவிடினும் கூடத் தன் மகளை வளர்த்து மணஞ்செய்து கொடுக்கும் கடமை முடியும் வரை உடன் வாழ்கிறாள் மனைவி. அது முடிந்ததும் (அதற்குள், மனைவி கல்யாணி அஞ்சல்வழிக் கல்வியில் எம். ஏ. படித்துப் பள்ளி ஆசிரியை வேலையும் பெறுகிறாள்), ''இந்த இருபது வருஷமா என் வாழ்க்கையிலே சந்தோஷம் இல்லே.. இனிமேலாவது நான் சந்தோஷமா இருக்க விரும்புகிறேன்... நீங்க ஆம்பிளைகள், எங்களைச் சமமா மதிப்பீங்கன்னு காலம் காலமா காத்திட்டிருந்தோம். நீங்க மாறலை. ஆனா நாங்கள் மாற வேண்டிய காலம் வந்தாச்சு. உங்க கையிலே எங்க சந்தோஷம் இல்லே... இந்த வீட்டிலே என்னால ஒரு நிமிஷம் கூட உங்க மனைவியா வாழ முடியாது...'' (மேலது, பக். 125, 126) என்று கூறுமிடத்தில்,ஆணின் ஆதிக்கப்போக்கை எதிர்த்து, வெளியேறி, தனித்து வாழும் மனைவியைக் காண்கிறோம். பெண்ணின் தனித்துவத்தை மதிக்காததுடன் அடக்குமுறையும் ஆதிக்க உணர்வும் கொண்டு செயல்பட்ட ஆணின் போக்கால் இக் கதையில் சிதைவு நிகழ்கிறது. படித்து, பணிபுரிவதால், தனித்து வாழும் துணிவும் உரமும் பெண்ணிடம் ஏற்பட்டுள்ளது எனவும் அறிகிறோம்.

திருமணம் என்ற லேவாதேவி வணிகத்தில் வரதட்சணை, சீர் ஆகியவை கேட்டபடி கொடுக்கப்படவில்லை என்று காரணங் காட்டிப் பெண்ணை, அவள் பிறந்த வீட்டாரை இழித்துப் பேசி, பெண்ணைத் துன்புறுத்தி, இம்சிக்கின்றனர் கணவன் வீட்டார். இதைத் தாளாத பெண், வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். பெண்ணையே சிதைத்து விட முயற்சி—கொல்லும் முயற்சி—மேற்கொள்ளும் போக்கை 'எல்லைகளின் விளிம்பில்' நாவல் 'சிலுவைகள்' சிறுகதை ஆகியவை காட்டுகின்றன. 'எல்லைகளின் விளிம்பில்' நாவலில் மண்ணெண்ணெய் ஊற்றி மனைவி கலாவை எரித்துக் கொன்று விட்டு, அது தற்கொலை என்று கணவன் வீட்டார் கூறுகின்றனர். இயற்கையாக நடந்தது போன்ற ஒரு கொலை முயற்சியைத் திட்டமிட, அதிலிருந்து மனைவி தப்பித்துப் பெற்றோர் வீட்டிற்கு ஓடிவந்து விடுவதைச் 'சிலுவைகள்' கதை காட்டுகிறது. (எம். ஏ. சுசிலா, **பருவங்கள் மாறும்** (சிலுவைகள்), பக். 90. 91). ஆணின் பண ஆசை, பெண்ணை உடைமைப் பொருளாகப் பார்க்கும் போக்கு, ஆதிக்க உணர்வு என்பவை காரணமாகச் சிதைவு ஏற்படுகிறது. கணவன் இல்லாத போது, கணவனின் தந்தை மருமகளிடம் சீர், வரதட்சணை இன்றித் திருமணம் நடந்ததைப் பலருக்கு முன்

இழித்துப் பேசுவதும் அதனால் தன் ஆளுமைச் சிதைவு—தன்மானத்திற்கு இழுக்கு—ஏற்பட்டதை உணர்ந்த மனைவி சாரு, கணவனிடம் சொல்லி விட்டு வீட்டை விட்டு வெளியேறுகிறாள். நான் கதிரவனுடைய அப்பன்... என் பயலுக்கு நூறு சவரன் போட்டு, காரு வாங்கிக் கொடுத்து பொண்ணு கட்டறதுக்கு இருக்கையிலே.. இப்படி வளைச்சுப் போட்டுட்டே...'' என்று கூறி'' நீ இந்த ஊரை விட்டு, அவனை விட்டுப் பொறப்பட்டுப் போயிடணும்'' என்று மிரட்டுகிறான். (ராஜம் கிருஷ்ணன், **ஆண்களோடு பெண்களும்**, பக், 8, 9) பல குடித்தனங்களுக்கிடையில் பெண்ணை—மனைவியை—ஏசியதைச் சொன்ன பின்னரும் கணவனிடம் இருந்து அதற்கு ஆதரவான மாமனாரின் செயலுக்கு—எதிரான—பதில் கிட்டாததால், தன் குழந்தைகளுடன் வீட்டைவிட்டு சாரு வெளியேறுகிறாள். மாமனாரின் பொருள் ஆசையும், கணவனின் வாய்மூடி மௌனம் சாதிக்கும் நிலையும், அவள் தன்மானத்திற்கு ஏற்பட்ட இழுக்கும் சிதைவிற்குக் காரணங்களாகின்றன.

## சிதைவின் விளைவுகள்

குடும்பச் சிதைவின் விளைவுகளை இப்படைப்புக்கள் விரிவாகக் காட்டுகின்றன. வீட்டைவிட்டு வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்ட மனைவி, தனித்து இருந்து அலுவல் புரிந்து, பொருளீட்டி வாழ்ந்து தன்னை நிலைப்படுத்திக் கொள்கிறாள். கணவனிடமிருந்து அவனுடைய நெறி தவறிய செயல்களுக்காக முறையாக மணவிலக்குப் பெற்ற மனைவி தனித்துப்பணி செய்து வாழ்வதைப் 'பாலங்கள்', 'திறக்காத ஜன்னல்கள்', 'மாதிரிக்கு ஒரு மாதவி' ஆகிய படைப்புக்கள் காட்டுகின்றன. 'மனிதர்கள் பாதி நேரம் தூங்குகிறார்கள்' நாவல் தலைவி மட்டும் மணவிலக்குப் பெற்றபின் மறுமணம் செய்து கொண்டு வாழ்கிறாள். 'ஓசைகள்' அடங்கிய பிறகு' நாவலில் மட்டும், தன் குழந்தைக்கு வேண்டிய பாதுகாப்பு கிட்டும் வரை—சமூக அமைப்பு மாறும் வரை—கணவனைச் சார்ந்து வாழ வேண்டிய தேவையை மீனா உணருவதையும் கணவன் சாரங்கனும் தன் தவற்றை உணர்ந்து திருந்தி வருவதையும் காட்டி, சமூகப் பாதுகாப்பு, தகுதி ஆகிய காரணங்களுக்காக மீண்டும் இருவரும் இணைந்து குடும்பமாக வாழ்வதைக் காண்கிறோம். ''தான் வெறும் ஆளல்ல என்ற நிலைமை நிச்சயமானதும் அவளைச் சமூகபயம் பிடித்துக் கொண்டு விட்டது. இந்தத் துண்டுபட்ட கூறுகளையும் பொருளற்ற மரபுகளையும் நிலைநிறுத்தி வரும் ஒரு அமைப்பில்

அவள் தனித்து நின்று தன் மகவை ஒரு நல்ல பிரஜையாக்கிவிட முடியாது என்று தனது வாழ்க்கை அனுபவங்களினின்றே உணர்ந்து அச்சம் கொண்டு ஓடி வந்திருக்கிறாள். அவள் குழந்தைக்குக் குடும்பம் என்ற பாதுகாவல் தேவை'' (ராஜம் கிருஷ்ணன், **ஓசைகள் அடங்கிய பிறகு**, பக். 300) என்பதால் இதனை அறியலாம். 'வெந்து தணிந்த காடுகள்' நாவலில் மித மிஞ்சிய குடியில் ஓவியன் தாமோதரன் இறக்க (ஓவியனும் முதல் நாள் இரவில் அவளைப் பாலுறவு வன்முறைக்கு ஆட்படுத்த முயல, அவள் அவனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள் கிறாள்) மீண்டும் விம்மி, தன் கணவனுடன் குடும்ப வட்டத்தில் இணைகிறாள். இந்த இரு நாவல்கள் தவிர ஏனைய படைப்புக் களில் பெண் தனித்து நின்று வாழ்வதும், பொறுப்பான தாயாகத் தங்கள் பிள்ளைகளை—குறிப்பாகப் பெண் பிள்ளைகளை—நன்கு வளர்க்க வேண்டும் என்ற சிந்தனையுடன் செயல்படுகின்றனர்.

'ஊமை அரண்கள்' நாவலில், தன் பிறந்தவீட்டு உறவையே ஒரு பெண் முழுவதுமாகத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று கூறும் கணவனின் கூற்றை ஏற்க முடியாத மனைவி வசு, தன் தந்தை வீட்டை விட்டுத் திடீரென்று காணாமல் போக, தனித்து இருக்கும் தாய்க்கு உதவிடச் செல்கிறாள். ஒரு நெருக் கடியான சூழலில் கூடத் தன் பிறந்த வீட்டிற்குச் செல்வது கூடாது என்று கூறும் கணவன் வாதத்தை மீறி அவள் செல்ல முடிவு செய்கிறாள். 'இது கண்ணியமான குடும்பம். கண்ணிய மெல்லாம் வேண்டாம்னு சொல்லிட்டு உன் பிறந்தவீட்டு அவமானச் சேற்றிலே போய் விழுறேங்கிறியே? உன் அப்பா செத்திட்டாருன்னாக்கூடச் சொல்லிட்டு உன்னை அனுப்பலாம். இப்ப நீ எங்களை முறிச்சிட்டுப்போனா, எங்க மானம் மரியாதை என்ன ஆகிறது?...இங்கேருந்து உன் நகை நட்டு எதுவும் கொண்டு போகக்கூடாது. போனியானா அதன் பின் பலனை நீதான் அனுபவிக்கணும்'' (ராஜம்கிருஷ்ணன், **ஊமை அரண்கள்**, பக். 77). என்று கணவன் கூறுவது அவளை மிகவும் பாதிக்கிறது. தன்மானத்தைப் பாதிக்கும் இந்த ஏச்சை அவள் எதிர்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். மண உறவும் குடும்ப அமைப்பும் ஆணை ஆதிக்கமுடையவனாக, உடைமை யாளனாக, மனைவியின் தன்மானத்தைச்-ஆளுமையைச்-சிதைப் பவனாக, மாற்றிவிடும் என்றால், மையக்குவியலான ஏகபோக அதிகாரமிக்க குடும்ப அமைப்பை விட்டு மனைவி வெளியேறு வாள் என்று இந்த நாவல் தலைவி நிறுவுகிறாள்.

**பெண் எதிர்கொள்ளல்**

குடும்ப அமைப்பைவிட்டு வெளியேறி அல்லது வெளியேற்றப் பட்டு தனித்து வாழும் பெண், தன் பெற்றோர் வீட்டிலிருந்தோ தனித்து அலுவல் மகளிர் விடுதியிலிருந்தோ பணி செய்து பொருளீட்டி, நிமிர்ந்து நின்று வாழ்வதாக இப்படைப்புக்கள் காட்டுகின்றன. 'மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்' தலைவி ஆனந்தி மட்டும் மேற்கொண்டு எம். ஏ. படிப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. குடும்பச் சிதைவு ஏற்பட்டு, வீட்டைவிட்டு வெளிவந்து தனித்து வாழும் நிலையில், தன்மானத்தை விட்டுக் கொடுக்காமல், துணிவுடன் வாழ்ந்து, போராடுகின்ற செயல் திறமிக்கவர்களாக இப்பெண்கள் உள்ளனர். தான் கற்ற கல்வி, தம்முடைய ஆளுமையை வளர்த்துக் கொள்ளவும், விழிப்புணர்வு பெறவும், எதிர்த்து நின்று போராடவும் தன்னம்பிக்கை, துணிவு, வீரம் இவற்றைத் தந்ததை உணர்கின்றனர். அலுவல் புரிந்து, பொருளீட்டுவது சார்பின்றித் தனித்தியங்க உதவுவதை அனுபவப்பூர்வமாக உணருகின்றனர். பெற்றோர் அல்லது உறவினருடன் வாழ்க்கையில், தம் நிலைப்பாட்டை அவர்களுக்கு உணர்த்தி, ஆணாதிக்கச் சமூக அமைப்பு, கொடுமை செய்யும் ஆணின் மனப்போக்கு மாறவேண்டும்-மாற்றப்பட வேண்டும்- என்பதை எடுத்துரைத்து அவர்களை மனங்கொள்ளச் செய்கின் றனர். மூத்த தலைமுறையினருக்கும் தம்மொடு ஒத்த வயதின ருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த முனைகின்றனர். பழமைப் பிடிப்பிலிருந்து மாறாமல், தன்னலத்துடன் செயற்படும் உற வினர் பற்றிக் கவலைப்படாமல் தம் நிலைப்பாட்டில் தெளிவாக வும் உறுதியாகவும் நிற்கின்றனர்.

பெண் குழந்தைகளைப் பொறுப்புடனும் விழிப்புணர்வுட னும், ஆணாதிக்கச் சமூக அமைப்பின் கொடுமைகளை எதிர் கொள்ளும் தீரத்துடனும் கூடிய குடிமக்களாக வளர்க்க வேண்டிய தம் தாய்ப்பங்கை உணர்ந்து செயற்படும் பொறுப் புள்ளவர்களாக இவர்களைப் படைத்துள்ளனர். வாழ்வு குறித்த நம்பிக்கையையும் ஆக்கபூர்வமான சிந்தனையையும் இது எடுத்துக்காட்டும். ''கவியையும் சாருவையும் நினைச்சா சங்கட மாயிருக்கு. என் தொடர்பு அவங்களுக்கு வேணும். அவங்க சுதந்திரமா, நல்ல அறிவோடு வளரணும். நான் குடும்பத்தி லிருந்து விலக்கப்பட்டாலும், அவங்க, அவங்களை விட முடி யாது''(ராஜம் கிருஷ்ணன், சுழலில் மிதக்கும் தீபங்கள், பக்.124) என்று வரும் கூற்று இதனை வலியுறுத்தும். குடும்ப அமைப்பு.

அதன் மைய அதிகாரம், ஆணின் ஆதிக்கம், உடைமை முனை நிலை இவற்றை மாற்றவும் எதிர்த்துப் போராடவும் வேண்டும் என்ற உறுதியும் துணிவுமிக்கவர்களாக இப்பெண்கள் உள்ளனர். ''ஒரு மனிதப் பிறவியான பெண்ணை, இயந்திரத்தையும்விட மிக மோசமாக நடத்த ஓர் ஆணுக்கும் அவனைச் சார்ந்தோருக் கும் உரிமை வழங்கும் ஓர் அமைப்புத்தான் குடும்பம். இந்த மையுமான அதிகார உரிமைக் குவியலை மாற்றமாட்டோம் என்றால்...அதைச் சீராக்க முனைய வேண்டும். நம் போராட் டம் இனிமேல்தான் ஆரம்பம்'' (மேலது, பக். 103இ 124) என்று வரும் பகுதி இதனை வலியுறுத்தும்.

மணவிலக்குப்பெற்று, தனித்து வாழும் பெண்ணிடம் பழைய உரிமையைக் கூறிக்கொண்டு வரும் முன்னாள் கணவனை மிகுந்த துணிவுடன் வெளியேறச் சொல்வதையும், மிரட்டலுக்குப் பயந் திடாமல் உதவிக்குக் காவலதிகாரிகளைக் கூப்பிட்டுப் பாதுகாப்பு கோருவதையும் முறையே. 'பாலங்கள்' 'மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்' நாவல்கள் காட்டுகின்றன. இந்தப் போக்கு பெண்ணின் துணிவைக் காட்டுவதுடன், பெண்ணை இன்ப நுகர் வுப் பொருளாகப் பார்க்கும் ஆணின் இழிநிலையையும் காட்டும். தன் குழந்தைகள் நலன், குடும்பநலன் கருதி, தன் தவற்றிற்கு வருந்தி மனைவியை மீண்டும் அழைத்துக் கொள்ள முயன்றால் கூட அவனுடன் போவதைப் பற்றி எண்ணிப் பார்க்கலாம்; மாறாக, ஆண் உயர்ந்தவன் என்ற செருக்கில், இத்தனை நாள் தன்னுடன் வாழ்ந்ததற்காக முறைப்படி பணம் தர முற்பட்ட போது தன்மானமுள்ள மனைவி அதைத்திருப்பி வீசி எறிகிறாள். ''என் குழந்தைகளை உத்தேசித்து, நான் ஒரு வேளை மனம் இறங்கிப் போயிருப்பேன். ஆனால், அவன் (கணவன்) செருக்கு, அம்மாவிடம் (மாமியாரிடம்) பெண்ணாகப் பிறந்தவள் என்ற என் நிலையை உறுதியாக்க, நான் பண்ணினது மன்னிக்க முடியாத தப்புன்னு சொல்லி, பெரிய மனிதத் தன்மையாக ஒரு பத்தாயிரம் ரூபாய் 'செக்' கையும் கொடுத்து அனுப்பியிருந் தான். நான் 'செக்' கை வீசி எறிஞ்சேன்'' (மேலது, பக். 122) என்று வரும் கூற்று இதனை வலியுறுத்தும். தன்மானமும் துணி வும் கொண்டவர்களாக, ஆணாதிக்கப் போக்கை எதிர்ப்பவர் களாக இவர்கள் உள்ளனர். தனித்து வாழும் பெண்கள் எண்ணிக்கை பெருகும்போது, சமூக அமைப்பு, குடும்ப நிறு வனம், ஆணாதிக்கப்போக்கு மாறும் என்று இவற்றால் வலி யுறுத்தப்படுகிறது.

## முடிவுரை

சரிநிகர் சமானமாக, சக மனுஷியா மனைவியை நடத்தாமல், எந்திரமாக அடிமையாக நடத்தும் கணவனின் ஆணாதிக்கப்போக்கு, உடைமை மனநிலை, பெண்ணின் தனித்தன்மையை மதிக்காமல், இம்சிப்பதான நிலை, கற்புக் கோட்பாட்டைக் கூறிப் பெண்ணை ஒடுக்குவது, வரதட்சணை-சீர் மிகுதியாகக் கேட்டுத் துன்புறுத்தல் என்பன காரணங்களாகக் குடும்பச் சிதைவு ஏற்படுகிறது. ஆணின் வக்கிரமான பாலுணர்வு வெறி, இன்பநுகர்வுப் பொருளாக எண்ணி மனைவியைத் துன்புறுத்தல் தன்னுடைய உடற்குறையை மறைக்கப் பெண்ணின் உடலையும் ஆளுமையையும் சிதைத்தல் காரணமாகச் சிதைவு ஏற்பட்டுப் பெண் வீட்டைவிட்டு வெளியேறி. நீதிமன்றம் வழி முறையாக மணவிலக்குப் பெறுகிறாள். தனிக்குடும்பச் சிதைவே இப் படைப்புக்களில் பெரிதும் பேசப்படுகிறது. பெண்ணின் ஒழுக்க நெறி குறித்து மாசுகளை அள்ளி வீசும் ஆண். மணவிலக்குப் பெற்றபின் கூட, தன் முன்னாள் உரிமையுடன்கூட நெருங்கித் துன்புறுத்தப் முற்படுவதும் காவலாளரிடம் அதற்காகத் தண்டனை பெறுவதும் பெண்ணைப் போகப் பொருளாகவே பார்த்து இழிவை ஏற்கத் தயங்காத பண்பைக் காட்டும்.

சிதைவிற்கு ஆளாகித் தனித்து நின்று துணிவுடன்-மன உறுதியுடன்-வாழும் பெண்கள். கல்வியின் காரணமாக அலுவல் பார்த்துப் பொருளீட்டித் தனித்து நிற்பதுடன், செருக்குடன் கணவன் அனுப்பும் தண்டத்தொகையான பணத்தை மறுத்து வீசி எறிகின்றனர். ஆளுமை சிதையாமல், உரமுடன் நிமிர்ந்து நின்று தமக்கென வாழ்கின்றனர். பெண் குழந்தைகளைப் பொறுப்பும் துணிவு மிக்க குடிமக்களாக, ஆணாதிக்கச் சமூக அமைப்பை எதிர்த்து நிற்கும் பெண்களாக வளர்க்க விழைகின்றனர். குடும்ப நிறுவனம், சமூக அமைப்பு இவற்றில் காணப்படும் ஆணாதிக்கம், மையக்குவியலான அதிகாரம் இவற்றை எதிர்த்துப் போராட முனைந்துள்ளவர்களாக இப்பெண்கள் உள்ளனர். மூத்த தலைமுறை, சம வயதுள்ளோர், இளைய குழந்தைகள் என அனைத்துத் தரப்புப் பெண்களுக்கும் விழிப் புணர்ச்சி ஏற்படுத்துவதையும் வாழ்க்கை பற்றிய நம்பிக்கை தருவதையும் இப்படைப்பாளர்கள் செய்துள்ளனர்.

# கற்புக் கோட்பாடு

## முன்னுரை

தமிழ்ச் சமூகத்தில் காலங்காலமாகப் பெண்ணுக்குரியதாகப் பேசப்பட்டு வருவது கற்புநெறியாகும். ஆணாதிக்க, ஆண் முதன்மைச் சமுதாய அமைப்பில், ஒழுக்கம் என்ற பெயரால் பெண் மட்டுமே இதில் உட்படுத்தப்படுவது அவளுடைய உடல் அமைப்பு ரீதியாக உள்ள இயற்கை சார்ந்த தாய்மைப் பேறு அடையும் தன்மையில் ஆனதாகும். வரலாற்று முறையில் பார்த்தால், தாய் வழிச் சமூகம் மாறி, தந்தை வழிச் சமூகமாக மாறிய பின்னர், ஆணுக்கு மட்டும் சொத்துரிமை என்று ஆன பின்னர், ஆண் ஆதிக்கஞ்செலுத்துபவனாக, முதன்மையாளனாக, குடும்பத் தலைமை ஏற்பவனாக ஆனபோது, பெண்ணை ஒடுக்கி, தன் கட்டுக்குள் வைக்க அவன் இதனை ஏற்படுத்தினான். கற்புக்கோட்பாட்டைப் பெண்ணுக்கு மட்டும் உரியதாக்கி, அவளை அடிபணிய வைக்க இதை வலியுறுத்தினான். ஆண் தன் இச்சைக்காகப் பெண்ணை இன்பநுகர்வுப்பொருளாக ஆக்கி, பாலுறவு வன்முறைக்கு ஆளாக்கிய போதிலும் கற்பு நெறியைக் கூறிப் பெண்ணைத் துன்புறுத்தினான். குழந்தைப் பேறு, வாரிசு என்பதை அடிப்படையாகக் கொண்டு,பெண்ணின் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்காக, ஒருதாரமணம் பெண்ணுக்கு மட்டுமே உரியது என்று நிறுவ இக்கற்புக்கோட்பாடு ஏற்பட்டது என்பார் எங்கல்ஸ். இந்த வரலாற்று அடிப்படையில் கற்பு என்பது சமூக மதிப்பானது. கற்பு மணமாகும் முன் உடலாலும் மனத்தாலும் தூய்மை உடையவளாக இருத்தல், மணமான்பின் கணவன் ஒருவனுக்கே தன் மனம், உடல் உரியவை என வாழ்தல், கணவன் பலதாரமணக் கோட்பாட்டிற்கு ஏற்ப நடந்து எவ்வளவு ஒழுக்கக்கேடனாக இருந்தாலும் மனைவி அவன் செயல்களைப் பொறுத்து, மனம்-உடல் தூயவளாக அவனுக்காக வாழ்தல் என்பதாகக் கற்புக் கோட்பாடு உள்ளது. இந்த விளக்கம்-வரையறை கூட ஆணாதிக்கச்

சமூகத்தின் வரையறைகள்தான்-இந்தக் கற்புநெறி பெண்ணுக்கு மட்டுமே வற்புறுத்தப்பட்டு, பெண்ணடிமைத்தனத்திற்கு வழி கோலுகிறது. படித்து, பட்டம் பெற்று, அலுவல் புரியும் பெண், பொருளாதாரச் சுதந்திரம் பெற்றாலும் திருமணம்-குடும்பம் மனைவி என்ற தகுதிகளைப் பெற்று வாழ ஆணுடன் இணை கையில் கற்புநெறி வலியுறுத்தப்படுகிறது.

எண்பதுகளில் வெளியான ஆய்வுக்குரிய புனை கதைகளில் கற்புக்கோட்பாடு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது என்று இவ் வியலில் காண்போம். கற்புக்கு நேரும் பழி, பெண்ணின் மறு மணமும் கற்பும், பாலுறவு வன்முறையும் கற்புக்கோட்பாடும் (மணத்திற்கு முன் பெண் பாலுறவு வன்முறைக்கு ஆளாக்கப் படுதல், மணத்திற்குப்பின் பாலுறவு வன்முறைக்கு ஆளாக்கப் படுதல் என்ற இரு நிலைகளும் உள்ளன.) உழைக்கும் பெண்கள் நிலையும் கற்புநெறியும், அலுவல் மகளிர் நிலையும் கற்பும், ஆணின் எதிர்பார்ப்பு, பெண்கள் கற்புநெறி சிக்கல்களை எதிர் கொள்ளல், வன்முறைக்கு ஆளான பெண்ணுக்கு ஏற்படும் சிக்கல் (விளைவு)கள் என்று இவ்வியல் அமைகிறது. இவ்வாய்விற்கு ஆதாரமாக, **வெந்து தணிந்த காடுகள், சுந்தரகாண்டம், சேற்றில் மனிதர்கள், சுழலில் மிதக்கும் தீபங்கள், ஆண்களோடு பெண் களும், ஓசைகள் அடங்கிய பிறகு, மண்ணகத்துப் பூந்துளிகள் எல்லைகளின் விளிம்பில, மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள், ஒரு சங்கமத்தைத்தேடி, இருளில் தொலைந்த உண்மை, பைசா நகரத்துக் கோபுரங்கள், சக்தி 81, மன்மதனைத்தேடி** ஆகிய நாவல்களும் **களம், அரசிகள அழுவதில்லை, ஒருமனுஷி, ஓசைகள்** ஆகிய சிறுகதைத் தொகுப்புகளும் அமைகின்றன.

**கற்புக்குப் பழி நேரல்.**

மணமாகும் முன் அல்லது மணமான பின்னர் பெண்(மனைவி) மிகச் சுலபமாகக் கற்புநெறியை மீறியவளாக ஆணாலோ கணவ னாலோ அவனைச் சார்ந்தவர்களாலோ பழிக்ககப்படுகிறாள். மணமாவதற்கு முன் என்றால், அத்தகு பழி அவளுடைய திருமணத்தகுதியைப் பாதிக்கிறது; மணமானபின் என்றால் குடும்ப வாழ்வின் அமைதி குலைந்து சிதைவிற்கு ஆளாகிறாள். இவ்வாறான பழி பெண்ணை ஆளுமைச் சிதைவிற்கு உள்ளாக்கு கிறது. மணமாகிக் குடும்பத் தலைவியான பெண்ணைக்கணவன் தனக்கு அடிபணிய வைக்கும் அஸ்திரமாக அவளதுஒழுக்கத்தைப் பற்றிக் குறைத்துப் பேசுவதைப் பயன்படுத்துகிறான். குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட கணவன், தன்

மனைவி கருவுற்றதை அறிந்து பின்னர் வேறு சந்தர்ப்பத்தில் அதை இடித்துக் காட்டுகிறான். ''ஆபரேசன் பண்ணிட்டு அஞ்சு வருசம் கழிச்சி, நீ ஒரு புள்ளியப் பெத்து, அது உசிரில்லாமபோச்சி கேட்டனா. கேட்டனாடி'! (ராஜம் கிருஷ்ணன், மண்ணகத்துப் பூந்துளிகள், பக். 66) என்று வரும் கூற்றில் ஆண் தன் மேல் ஆதிக்க நிலையை இதன்மூலம் நிறுவுகிறான். இதனால்ஆளுமை சிதையும் மனைவி, பழியை ஏற்று, குடும்பத்தை நடத்திச் செல் வதற்காக வாளாவிருக்கிறாள்..

குழந்தை பிறந்தால் தன்னுடைய வேலை நிரந்தரமாவது தள்ளிப்போகுமே என்று அச்சத்தில், கணவனின் அமைதியின்றித் (அனுமதி கேட்டால் அவன் தர மறுப்பான் என்பதால்) தானாகக் கருவைக் கலைத்துவிட்டு வந்த மனைவியிடம், அவள் மீது பழி தூற்றி அவள் கற்புநெறியைக் குறைத்துப் பேசுகிறான் கணவன் என்பதை 'ஓசைகள் அடங்கிய பிறகு' நாவல் காட்டு கிறது. ''நாமே இன்னும் சரியாக ஊனாத நிலையில் ஒரு அதிகப் படியான பொறுப்பு வேணுங்களா என்று மனைவி மீனா கூறிய வுடன், பேசாதே உனக்கு மனசாட்சி உறுத்திருக்கு எவனுக்கோ உண்டானதை எம்புள்ளேன்னு சொல்ல உனக்கே கூசியிருக்கு'' (ராஜம் கிருஷ்ணன் ஓசைகள் அடங்கிய பிறகு பக். 239) என்று கணவன் சாரங்கன் பதிலளிப்பதில் அவளை நெறிகெட்டவளாக ஏசுகிறான். இங்கு ஆணாதிக்க மனநிலையும், முடிவெடுத்துச் செயற்படுபவளாகப் பெண் இருக்கக் கூடாது என்ற ஆணின் ஆதிக்க உணர்வும் தன்முனைப்பும் வெளிப்படுகின்றன.

தன்னுடைய ஓவியக்கலை ஆர்வத்தின் காரணமாக ஓவியன் தாமோதரனின் வீட்டிற்குச் சென்று வந்த விவரத்தைக் கூறும் மனைவியின் ஒழுக்கத்தைக் குறித்து ஏசுகிறான் கணவன். கணவன் நடத்தை கெட்டவனாக இருந்தும் கூட, தன் மனைவி தவறு செய்யாத போதும் அவளை ஏசுகிறான். அவளின் கற்பு நெறி தவறியதாகப் பழி சொல்கிறான். ''அந்த பாஸ்டர்ட்' வீட்டுக்குப் போனது தப்புக்காரியம் இல்லே...அப்புறம் அங்கே என்ன நடந்ததோ யாருக்குத் தெரியும்'' (இந்திரா பார்த்த சாரதி வெந்து தணிந்த காடுகள் பக். 103) என்று இந்திரா பார்த்தசாரதியின் நாவலில் வருகிறது. இதன் காரணமாகக் குடும்பம் சிதைகிறது. இங்கும் ஆணாதிக்க மனநிலையும் ஆணின் தன்முனைப்பும் காரணமாகின்றன. கணவன் பங்கு நிலையில் ஆண் எதுவும் பேசலாம் என்பதான உடைமை மன நிலையும் மிகவும் எளிதாகப் பெண்ணுடைய ஒழுக்கத்தை அவன்

தன் பக்க நியாயம் கூறினும் அதைக் கேட்காமல்-பழித்துக் கூறும் தான ஆணின் அவசரப்பட்டு முடிவெடுக்கும் பண்பும் இதில் வெளிப்படுகின்றன.

கணவன் தன்னிடம் சில உண்மைகளை மறைத்தபோது அவற்றைக் குடைந்து குடைந்து கேட்கும் தன்னிடம் மறைத்து, சினந்து, முகத்தில் சோற்றை வீசிவிட்டுச் செல்கிறான். இந்தச் சூழலில் இருநாட்கள் யாரிடமும் சொல்லாமல், (கணவனிடமோ மாமியாரிடமோ அனுமதி பெறாமல்) வெளியே-ஹரித்துவார்- சென்றுவிட்டு வருகிறாள்,கிரிஜா (மனைவி). வெளியே தங்கிவிட்டு வந்த மனைவியின் கற்பைக் குறித்து ஐயுற்று அவளை வீட்டை விட்டுத் துரத்துகிறான் கணவன். 'ஓடிப்போயி எங்கோ சீரழிஞ்சு வந்துட்டு? எனக்கு வெளியில தலைநீட்ட முடியல' என்று கணவனும், 'வாயிலிருந்து கீழே விழுந்துடுத்து, எத்தன நல்ல பண்டமானாலும் திருப்பி எடுத்து முழுங்க முடியறதா?' என்று மாமியாரும் ஏசுகின்றனர். (ராஜம் கிருஷ்ணன், **சுழலில் மிதக்கும் தீபங்கள்**, பக்.96-97) இச்செயல் காரணமாக, பெண் (மனைவி) வீட்டை, குடும்பத்தைவிட்டு வெளியேற்றப்படுகிறாள், ஒழுக்கஞ் சிதைந்தவளாகப் பழிக்கப்படுகிறாள். நாற்பத்தாறு வயசு.மூன்று குழந்தைகளுக்குத் தாய். இவள் குடும்பத்தைவிட்டுப் போனால் உடல் பரமான மாசுகளை வீசுவதுதான் நியாயமா? அந்த மாசு ஆணுக்குக் கிடையாதா? என்று அப்பெண்ணின் எண்ண ஓட்டமாக ராஜம் கிருஷ்ணன் காட்டுவது (**சுழலில் மிதக்கும் தீபங்கள்** பக். 102) நம் சமூக அமைப்பை அதிகாரமும் ஆதிக்கமும் தன்னிடமே மையக்குவியலாக வைத்திருக்கும் ஆணின் உடைமை மனோபாவத்தை அழுத்தந் திருத்தமாகக் காட்டுகிறது.

பிரபஞ்சனின் 'ஒரு வித்யாவின் கதை' என்னும் சிறு கதையில், தன் மனைவி அவளுடைய ஒரு நண்பனை (மணமாவதற்கு முன்பிருந்தே அவளுக்கு நண்பனாக இருந்தவனை) வீட்டுக்கு அழைத்து வந்து அறிமுகஞ் செய்து வைத்ததும் கணவன் அவளிடம் 'வெறும் சிநேகதன் மட்டுந்தானா?'என்று வினவினான்(**ஒருமனுஷி** பக்.176). தன் நண்பனிடம் இதுகுறித்து பேசும் போது, "ஆபீஸ் விட்டு வர்ற போதே எவனையாவது இழுத்துக்கிட்டு வீட்டுக்கு வர்றவ சார் அவ" (பிரபஞ்சன், **ஒரு மனுஷி** பக். 147) என்று அவள் கற்புநெறியை ஐயுற்றுப் பேசுகிறான். இதனால், அவளுடைய தன்மானம், சுயமரியாதை குலைக்கப்படுவதுடன் அவளுடைய ஆளுமை சிதைக்கவும்படுகிறது. இக்கதையில், பெண்ணுக்கு ஆண் நண்பன் இருக்கக்

கூடாது என்பதான மரபு வழியான ஆணாதிக்கப் பார்வையும் இருப்பானேயானால் தன் மனைவி ஒழுக்கமற்றவளாகத்தான் இருப்பாள் என்ற முடிவும் ஆணிடம் உள்ளதாகக் காணப் படுகின்றன. ஆணின் ஆதிக்க உணர்வும் பெண்ணைத் தன் உடைமையாகப் பார்க்கும் மனப்பான்மையும் வெளிப்படு கின்றன. இதன் விளைவாக மணவாழ்வு சிதைவதும் அது மணவிலக்கு வரை போவதும் நிகழ்கின்றன. இக்கதையில், மனைவி வித்யா, தன் பக்கத்து நியாயத்தை எடுத்துப் பேசுவதுடன் நிமிர்ந்து, எதிர்த்து நிற்கிறாள். ஆதிக்கத்திற்கு அடிபணியாமல், எதிர்க்கவேண்டும்; பெண்கள் விழிப்புணர்வு பெற வேண்டும் என்று அழுத்தமாகப் பிரபஞ்சன் காட்டு கிறார். தவறு எதுவும் செய்யாமல், பெண்ணுக்குப் பழிச்சொல் வரும்போது, அதனை எதிர் நிற்கவும், போராடவும் வேண்டும் என்று இப்படைப்பாளர்கள் காட்டுகின்றனர்.

### பாலுறவு வன்முறை

திருமணத்திற்கு முன்னர் ஒரு பெண், அவள் விருப்பத்திற்கு மாறாகப் பாலுறவு வன்முறைக்கு ஆளாக்கப்பட்டால், அவள் மணத்தகுதி அதனால் பாதிக்கப்படுகிறது. திருமணத்திற்குப் பின் அந்நிகழ்ச்சி நடந்தது என்றால் அது அவளுடைய குடும்ப வாழ்வைச் சிதைக்கிறது. அவள் இழிவாகப் பேசப் படுகிறாள். மரபு சார்ந்த சமூகக் கண்ணோட்டம் இதற்குக் காரணம் எனினும் அடிப்படையில், ஆணாதிக்கச் சமூக அமைப்பும் பெண்ணை அவளுடைய உடற்கூறு, தாயாகும் பண்பு இவற்றைக் கொண்டு துன்புறுத்தி அடிமைப்படுத்தும் ஆணின் மேலாதிக்கமும் காரணமாகின்றன. கால மாறுதல் களுக்கு ஏற்பக் கற்புக்கோட்பாடு மாற்றம் பெற்று வருகிறது என்பதை இப்படைப்பாளர்கள் காட்டுகின்றனர். அத்துடன், பாதிக்கப்பட்ட பெண்கள்—பழிக்கு ஆளான நிலையில் நிலை குலைந்து, தம் ஆளுமையை இழந்துவிடாமல், எதிர்த்து நிற்பதையும் இதிலிருந்து மீட்சி—விடுதலை—உண்டு என உணர்ந்து திடமாக நம்புவதையும் இப்படைப்புகள் காட்டு கின்றன. இந்துமதியின் **பைசா நகரத்துக் கோபுரங்கள்** நாவலில் மூட்டும், திருமணத்திற்குப்பின் நடக்கும் பாலுறவு வன்முறையால் பாதிக்கப்பட்டு, அச்செய்தி, பத்திரிகைகளில் எல்லாம் வெளி வந்து, அவளுடைய குடும்பவாழ்க்கை சிதைகிறது; அத்துடன் பழிச்சொற்களைத் தாங்கமாட்டாமல் நிலைகுலையும் பெண், தன் கணவன் வீட்டாராலும் பெற்றோராலும் புறக்கணிக்கப்

படும் நிலையில் தன்னை மாய்த்துக்கொள்ள தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதை ஆசிரியை காட்டுகிறார். எண்பதுகளில் வெளியான புனை கதைகளில், நம்பிக்கையும், எதிர்த்து நின்று, போராடி வாழ்ந்து காட்டும் உரமும் மிக்கவர்களாகப் பெண்களைப் படைத்துள்ளனர். இது, பெண்களின் விழிப் புணர்வையும், பழியை எதிர்த்துப் போராடும் பண்பையும் காட்டுவதுடன், படிப்பவர்களிடம்—குறிப்பாகப் பெண் வாசகர்களிடம்—விழிப்புணர்வை ஏற்படுத்தும் போக்கில் நம்பிக்கையுடன் எழுதும் பாங்கையும் காட்டுகின்றது.

**மணத்திற்கு முன்**

திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில், லாவண்யா என்ற பெண் பாலுறவு வன்முறைக்கு ஆளாக்கப்படுவதை 'இருளில் தொலைந்த உண்மை' என்ற நாவல் சித்திரிக்கிறது. இச்சிக் கலுக்கு உள்ளான பெண், தன்னை அதனால் குறையுடைய வளாக—ஒருவிதத்தாழ்வு மனப்பான்மையுடன்—வெளிப்படுத்திக் கொள்வதாக நாவலாசிரியை காட்டுகிறார். பாதிப்பிற்கு ஆளான பெண், இவ்வாறு மனநிலை பாதிப்பிற்குள்ளாவது, உளவியல் முறையில் இயல்பான ஒன்றாக, நடப்பியல் சார்ந்த தாக இந்த நாவலில் காட்டப்பட்டுள்ளது. திருமணத் தகுதியை இதனால் அப்பெண் இழக்கவில்லை; மாறாக, மணம் நிச்சயம் செய்யப்பட்ட அவளுடைய காதலன் ''நீ என்வரைக்கும் களங்கப்பட்டவள் இல்லே.. கல்யாணம் என்பது இரண்டு ஆன்மாக்களின் சந்திப்பு... வெறும் உடல் உணர்வில் இணையும் ஒரு உறவல்ல... நமது திருமணம் நடந்தே தீரும்'' என்று கூறுகிறான். பாதிப்பிற்குள்ளான லாவண்யாவை நிச்சயம் செய்யப்பெற்ற காதலன் மணந்து கொள்கிறான் என்று ஆசிரியை காட்டுகிறார். (லக்ஷ்மி. **இருளில் தொலைந்த உண்மை**, பக். 83).

இந்த நாவலில் மணத்திற்கு முன் நிகழும் இந்த வன்முறை, அச்சிக்கலைப் பெண் (பாதிக்கப்பட்டவள்) எதிர்கொள்ளும் முறை, தவறு செய்தவனைக் காவல் துறை கண்டுபிடிப்பது, அதற்கு அப்பெண் உதவுவது என்பன விரிவாகக் காட்டப் படுகின்றன. காவல்துறையினரின் கணிப்பின்படியும் அதற்கு அடிப்படையான இந்தியக் குற்றவியல் சட்டப்படியும் (இ.பி.கோ பிரிவு 375) ஒரு பெண்ணை, அவள் விருப்பத்திற்கு மாறாக, பாலுறவு வன்முறைக்கு ஆளாக்குவது கடுமையான தண்டனைக் குரிய குற்றமாகும். ஆயின், மணத்திற்குமுன்

நடந்திடும் இச்சமூகக் குற்றத்தைக் காவல்துறை, நீதிமன்றம் என்று கொண்டு போனால், நாளிதழ்களில் வெளிவந்து பலரறிய விளம்பரமாகிப் பெண்ணின் திருமணத்தகுதி பாதிக்கப்படும் என்ற அச்சமும், கற்புக்கோட்பாடு பற்றிய நம்முடைய மரபு சார்ந்த கண்ணோட்டமும் தடைப்படுத்துகின்றன. "கற்பழிப்பு என்ற குற்றம் இப்போது நம்நாட்டில் நிறையவே நடக்கிறது... போலீசாரிடம் சொல்லாது, அவமானம் தாங்காமல் மறைத்து விடப்படும் கேசுகள் கணக்கில் வராதவை எத்தனையோ... ஒன்று பதிவானால், பத்து மறைக்கப்பட்டுவிட்டது என்று நாம் கொள்ள வேண்டும்" என்று காவல் துறை அலுவலரின் கூற்றாக வரும் கருத்து (லக்ஷ்மி, **இருளில் தொலைந்த உண்மை**, பக். 33) நம்முடைய சமூகத்தின் மனப்போக்கைக் காட்டுகிறது.

பெண்ணைச் சார்ந்த உறவினர்கள், மரபு சார்ந்த கண்ணோட்டத்தின்படி, தங்கள் பெண் வாழ்வில் ஏற்பட்ட இந்த விபத்தை மறைக்க முயல்வதாக வெளிப்படுத்தி நீதி மன்றம்–காவல்துறை என்று போனால் பெண்ணின் மணத்தகுதி பாதிக்கப்படும் என்ற கவலையால் மறைத்திட நினைப்பதாக–நாவலாசிரியை காட்டுகிறார். "அவளை நீங்க கோர்ட்டுக்கு இழுத்து கஷ்டப்படுத்தினால், எங்க குடும்பமே ஏதாவது விஷத்தைத் தின்னுட்டுப் போக வேண்டியதுதான்" (அதே நாவல், பக். 94—95) என்று அப்பெண்ணின் பெற்றோர் கூற்றாக ஆசிரியை காட்டுகிறார். ஆகவே, சமூக மனமாற்றமும், குற்றவாளியைக் கண்டுபிடிக்கக் காவல்துறை—நீதிமன்றம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு (அப்பெண்ணின் பெயர் விளம்பரப் படுத்தப்படாமல்), அப்பெண்ணே செய்யும் உதவி காரணமாகக் குற்றவாளி தண்டனை பெறுவதும், வன்முறைக்கு ஆளான அப்பெண்ணை மணஞ்செய்திடும் அவள் காதலனின் துணிவும் இந்த நாவலில் காட்டப்படுகின்றன. இவை, பிரச்சினைக்குத் தீர்வாகின்றன. சமூக மனமாற்றமும் பெண்—ஆண் இருவரிடமும் விழிப்புணர்வு வரவேண்டும் என்பதும் இந்நாவலில் அழுத்தமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**மணத்திற்குப் பின்**

திருமணத்திற்குப் பிறகு, பாலுறவு வன்முறைக்குப் பெண் ஆளாவதைப் **பைசா நகரத்துக் கோபுரங்கள்**, **ஒரு சங்கமத்தைத் தேடி** ஆகிய இரு நாவல்கள் சித்திரிக்கின்றன. இந்தநாவல்களில் வன்முறைக்கு ஆளான பின்னர் குடும்பச்சிதைவு ஏற்பட்டு, பெண் வீட்டைவிட்டு வெளியேற்றப்படுவதும் (பைசா நகரத்துக் கோபு

ரங்கள்), மிகுந்த மனப்போராட்டத்திற்குப் பிறகு, தன்னுடைய மனைவியை ஏற்றுக்கொண்டு மீண்டும் அவளுடன் குடும்ப வாழ்வை நடத்துவதும் (ஒரு சங்கமத்தைத் தேடி) பின்விளைவுகளாகக் காட்டப்படுகின்றன. 'ஒரு சங்கமத்தைத் தேடி' நாவலில், கதைத் தலைவி தாரா மயக்க நிலையிலிருக்கும் பொழுது, வன்முறைக்கு ஆளாகிறாள். அதன் காரணமாக, அது ஒரு விபத்து என்றும், தான் அறியாமல் தன் மீது நடத்தப்பட்ட அந்த வன்முறைக்கு எவ்வகையிலும் தான் பொறுப்பல்ல என்ற தெளிவும் அவளிடம் காணப்படுகின்றன. அதனால்தான், தன்னை ஏற்கத் தயங்கும் கணவனிடம், அவனுடைய கோழைத் தனத்தைச் சாடவும் செய்கின்றாள். ''என்னைப் பொறுத்த வரை இது எனக்குத் தெரியாமல் நேர்ந்த விபத்து. பலவீனமான நிலையில் என் பெண்மை அவமானப்படுத்தப்பட்டது என்கிற கோபத்தைத் தவிர எனக்கு எந்தவிதமான மனக்கூச்சமும் இல்லே'' (வாஸந்தி, **ஒரு சங்கமத்தைத் தேடி**, பக். 199) என்கிற அப்பெண்ணின் கூற்று அவளுடைய உறுதியைக் காட்டும்.

இதற்கு மாறாக, இந்துமதியின் பைசா நகரத்துக் கோபுரங்கள் நாவலில், பாதிப்பிற்குள்ளான சௌதாமினி, தானே இதனால் பாதிக்கப்பட்டவளாக, தன்னுடைய குடும்ப வாழ்க்கைத்தகுதி பங்கப்பட்டுவிட்டதாக எண்ணுகிறாள். தன்னுடைய விருப்பமின்றி நடந்த போதிலும், தான் கறை பட்டவள் என்றே மனம் குமுறுகிறாள். முதலில் தன் கணவன் வீட்டாராலும், பின்னர் தன் பெற்றோராலும் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பின்னர், தன்னை மாய்த்துக் கொள்ள அவள் முனைகிறாள். ''மூலையில் உட்கார்ந்து அழப்போற தில்லை. நான் செய்யாத ஒரு தப்புக்கு வளைந்து கொடுக்கவும் போறதில்லை. நீங்க சொன்ன மாதிரி ஆறு, குளத்தை தேடிக் கிட்டோ, ஒரு முழக்கயிற்றை தேடியோ ஓடவும் மாட்டேன். இதைவிட நூறு மடங்கு நீங்க பேசினாலும் சரி, அதற்காக வெல்லாம் கவலைப் படாமல் தைரியமாக இந்த உலகத்தை எதிர்நோக்கறதுன்ற முடிவுக்கு வந்துட்டேன்.'' (**பைசா நகரத்துக் கோபுரங்கள்**, பக். 100—101) என்று முதலில் துணிவாகப் பேசினாலும், இறுதியில் அவள் தற்கொலை செய்து கொள்ள முடிவெடுக்கிறாள். இந்தவிதமான அவளுடைய முடிவிற்கு, அவளைச் சுற்றியுள்ள சமூகத்தின் புறக்கணிப்பும், கணவன், பெற்றோர் ஆகிய இரு வீட்டாரின் புறக்கணிப்புமே காரணமாகின்றன.

ஒரு பெண் அவளுடைய விருப்பமின்றி, விபத்து போல வன்முறைக்கு ஆட்பட்டாலும், அவளைக் கொடூரமாகத் தண்டிப்பதாக நம் சமூக அமைப்பு உள்ளது. ஆணாதிக்கச் சமூக அமைப்பில், தன்னுடைய உடைமைப் பொருளாகப் பாவிக்கும் மனைவியை, அவளுடைய உடலை—மற்றொருவன் வன்முறைக்கு ஆளாக்கினான் என்பதையே பொறுத்துக் கொள்ளாத ஆணின் மனநிலைதான் இதற்கு அடிப்படைக் காரணம். 'ஒரு சங்கமத்தைத் தேடி' நாவலில், இந்த விபத்திற்குப் பிறகு, பிறக்கும் குழந்தையை ஏற்பதற்குக் கணவன் தயங்குகிறான். ''ஒரு அந்நியனின் பிம்பம் என் பெயரைச் சொல்லிக் கொண்டு, என் கூரையின் கீழ் வளர்ந்து வருவதை நான் சாதாரண விஷயமாக நினைக்க முடியுமா?'' (**ஒரு சங்கமத்தைத் தேடி**, பக். 201) என்று கூறுகிறான். மனைவியை ஏற்று, வாழத் துணிந்த போதிலும் அந்தக் குழந்தையைத் தன் மகவாக ஏற்பதில் அவன் தயங்குகிறான். காலங்காலமாக இருந்து வரும் குடும்பம், சொத்துரிமை, ஆண் பிள்ளைக்கு முதன்மை, ஆண் பிள்ளையைப் பெற்ற தாய், தந்தையர் நரகம் செல்லமாட்டார்கள் என்ற நம்பிக்கை ஆகிய மரபு சார்ந்த மதிப்புகள் தான் இந்தத் தயக்கத்திற்குக் காரணம். ஆகவே சமூக மாற்றமும், தனி மனிதனின் மனப்போக்கு மாற்றமும் மட்டுமே இதனைத் தீர்க்கும் என்று இப்படைப்பாளிகள் கருதுகின்றனர்.

'பைசா நகரத்துக் கோபுரங்கள்' நாவலில், வன்முறைக்கு ஆளாவதற்கு முன்னமே தான் கருவுற்றிற்கும் செய்தியைத் தன் கணவனிடம் கூறாமல் சௌதாமினி இருக்கவே, விபத்திற்குப் பிறகு, அதையே காரணம் காட்டி, ஐயுற்றுக் கணவன் அவளை வெளியேற்றுகிறான். ''இது என் குழந்தைங்கறதை நான் மட்டுமில்லே. இங்கே இருக்கறவங்க யாரும் நம்பத் தயாராக இல்லே'' (**பைசா நகரத்துக் கோபுரங்கள்**, பக். 105) என்று அவள் கணவன் கூறுவதுடன் ''உன்கிட்டே பழைய மாதிரி நெருங்கிப் பழக மனசு இடம் கொடுக்கலை. அந்த அளவுக்குப் பரந்த மனப்பான்மை என்கிட்ட இல்லே. பரந்த மனப்பான்மையை வளர்த்துக்கவும் முடியலே. அதைச் சொல்ல நான் வெட்கப்படலே. ஏன்னா நான் வளர்ந்த சூழ்நிலை அப்படி...'' என்றும் கூறுகிறான். (மேலது, பக். 105-106). ஆகவே, பழைய சமூக மதிப்புகளும் மரபுவழியான கண்ணோட்டமும் காரணங்களாக அவன் தயங்கிப் பின்வாங்குகிறான்.

பாலுறவு வன்முறைக்கு ஆளான பெண்ணை 'எச்சிற் பண்டம்', 'கெட்டுப்போன பொருள்' என்று கூறி ஏசுவதுடன், அவளை வீட்டில் சமையலறை, பூசையறை இவற்றினுள் வரக் கூடாது என்று மாமியாரும், கிணற்றடி-குழாயடி போன்ற இடங்களில் வந்தால் புனிதம் கெட்டுப்போய்த் தீட்டு ஏற்பட்டு விடும் என்று பக்கத்து வீட்டுப் பெண்களும் பேசுகின்றனர். (**பைசா நகரத்துக் கோபுரங்கள்**, பக். 92, 93, 94). இங்குச் சமயஞ் சார்ந்த சடங்குகளில், காலங்காலமாகப் பின்பற்றப் பட்டு வரும் ஆணாதிக்கமும், அதை அப்படியே ஆண்களின் சொற்படியே கேட்டு ஏற்றுப்போற்றும் பெண்களின் சார்பு நிலைக் கண்ணோட்டமும் சுட்டப்படுகின்றன. பெண்களின் உடற்கூறு சார்ந்த, இயற்கையாக அமைந்துள்ள தாய்மைப் பண்பு, அதைச் சார்ந்த உடல் மாற்றங்கள், தீட்டு என்றும் புனிதமற்றவை என்றும் நடைமுறைப் பழக்கங்களாக்கப்பட்டு, அவை பெண்களின் மீது பெண்களாலேயே திணிக்கப்படுகின்றன. அதன் விளைவுதான், வன்முறைக்கு ஆளாகித் தவறே செய்யாத பெண்ணை அவள் மாமியாரும், தாயும் பிற அண்டை வீட்டுப் பெண்களும் இவ்வாறு ஏசுவதாகும். கற்பு குறித்த சமூகக் கண்ணோட்டம், குறிப்பாகப் பெண்கள் இதனைக் குறித்து கொண்டுள்ள மரபுவழியான பார்வை, மாறவேண்டும் என்பதை இப்படைப்பாளர்கள் வலியுறுத்துகின்றனர். அதனால்தான், தற்கொலை செய்துகொள்ள முயலும் சௌதாமினி காப்பாற்றப் பட்டு, புதிய வாழ்க்கைத் தொடங்குவதாக இந்துமதி காட்டு கிறார். உடன்பாட்டு முறையிலான வாழ்க்கை பற்றிய நம்பிக்கைக் கண்ணோட்டம் அழுத்தமாகப் புலப்படுத்துகிறது. தீமையை எதிர்த்து நிற்பதும், போராடுவதும் வாழ்ந்து காட்டு வதும் ஆகிய விழிப்புணர்வை இளம் பெண்களுக்கு இந்த நாவல் கள் அழுத்தமாக எடுத்துரைப்பதுடன், தாய்— மாமியார் போன்ற மூத்த தலைமுறைப் பெண்களுக்கு, கற்புக் கோட்பாடு குறித்த மறுசிந்தனை, மதிப்பு மாற்றம் உண்டாக வேண்டிய காலத்தின் தேவையை வலியுறுத்துகின்றன.

**உழைக்கும் பெண்கள் நிலையும் கற்பும்**

உடல் உழைப்பை முதன்மையாகக் கொண்டு, உழைத்துத் தன் குடும்பத்தைக் காப்பாற்றும் கிராமப்புற, நகர்ப்புறப் பெண்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ளனர். இவர்களின் உழைப்பு அவர்தம் குடும்ப வாழ்விற்கு இன்றியமை யாதது. ஆனால், உழைப்பிற்காகச் செல்லும் இடங்களில்,

அங்குள்ள ஆண்கள் இவர்களின் உழைப்பை மட்டுமின்றி, கற்பையும் சுரண்டும் இக்கட்டு உள்ளது. இப்படிப்பட்ட சிக்கல் எழும்போது, உழைக்கும் பெண்கள் அச்சிக்கலை எவ்வாறு எதிர் கொள்ளுகின்றனர் என்பதை எண்பதுகளில் புனைகதை யாளர்கள் காட்டியுள்ளனர். வயல்களில் பயிர்த்தொழில் செய்து வீடுகளில் எடுபிடி வேலைகள் செய்து, உழைத்துப் பிழைக்கும் ஏழைப் பெண்கள், தங்களுடைய சிறிய வருவாய் காரணமாக ஆண்களின் இச்சைக்கு ஆளாக வேண்டிய கட்டாயம் நேரிடு கிறது. ராஜம்கிருஷ்ணனின் **சேற்றில் மனிதர்கள், மண்ணகத்துப் பூந்துளிகள்** ஆகிய நாவல்களிலும் **உருவாக்குகிறார்கள்** என்ற சிறுகதையிலும் இப்பிரச்சினை காட்டப்படுகிறது. 'சேற்றில் மனிதர்கள்' நாவலில் உழைக்கும் இடத்தில் பாலுறவு வன் முறைக்கு ஆளான லட்சுமியை, அவள் நிலை அறிந்தும் அவளைக் காதலித்த சண்முகம் மணக்கிறான். வன்முறைக்கு ஆளான அவளுடைய வயிற்றில் வளரும் குழந்தையைக் கலைக்க முற் பட்டு, பயனின்றிப் போவதை அவள் தாய் உணருகிறாள்; மூளை வளர்ச்சியின்றிப் பிறக்கும் ஆண் குழந்தையைத் தன் மகனாக ஏற்கிறான், சண்முகம். பொருளாதாரத்தில் பின்தங்கி, சொத்துடைமை எதுவும் இல்லாத அடிமட்டத்து மக்களிடம் கற்புக்கோட்பாடு எதுவும் செல்லுபடியாகவில்லை. மாறாக உடைமைச் சமுதாயத்தில்தான் ஆணாதிக்கமும், கற்புக்கோட் பாடும் குடும்ப அமைப்பும், பெண்ணைத் துன்புறுத்துகின்றன: இதனை மிகச் சரியாகச் சமூகவியல் வரலாற்றுக் கண்ணோட்டத் துடன் ராஜம் கிருஷ்ணன் இந்த மூன்று படைப்புக்களிலும் காட்டுகின்றார்.

'மண்ணகத்துப் பூந்துளிகள்' நாவலில் அழகாயியின் கணவன் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டபின், வீட்டு வேலை உதவிக்காகத் தன் மாமன் மாயாண்டிவீட்டிற்குச் சென்ற இடத்தில் அழகாயி அவனுடைய இச்சைக்கு ஆட்படு கிறாள். பிறகு, தன் வயிற்றில் குழந்தை வளர்வதை உணர்ந்து அத்தவறு அவளை நெருடுகிறது. பிறந்த சிசுவை (பெண் சிசு) யாருமில்லாத போது அதன் சுவாசத்தில் இரண்டு நெல்மணி களை இட்டு முடித்துவிடுகிறாள். அவளுடைய கணவன் இதைப் பற்றி ஒன்றும் தீவிரமாக எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிடு கிறான். அழகாயியின் மகள் பூவு திருமணத்திற்கு முன் நெறி தவறிப் போனாள் என்று அறிந்து அவளை அடித்து அழகாயி துன்புறுத்தும் போது அவள் கணவன் ''ஆபரேசன் பண்ணிட்டு அஞ்சு வருசம் கழிச்சி, நீ ஒரு புள்ளியைப் பெத்து அது உசிரில்

லாம போச்சி, கேட்டனா? கேட்டனாடி: ஆம்புள பொம்பள ஒலகம்னு இருந்தா எல்லாம் நடக்கிறது தே. அதுக்குன்னு அந்தப் பச்சப்புள்ளையைப் போட்டுக் கொல்லுற...நீ?'' (**மண்ணகத்துப் பூந்துளிகள்** பக்.66) என்று சீறிப் பாய்கிறான். இங்குத் தன் மகளைத் தண்டிக்கும் தாய், திருமணத்திற்கு முன்பு நெறி பிறழ்வது, அவளுடையத் திருமணத் தகுதியைப் பாதிக்கும் என்ற அச்சத்தின் விளைவாகும். ஆனால் தன் மகள் துன்புறுத்தப்படும் போது,பாசஉணர்வின் காரணமாக, அறியாப் பிள்ளையைத் தாய் தண்டிப்பதை அவன் எதிர்க்கிறான்.

'உருவாக்குகிறார்கள்' என்ற கதையில், வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரி முத்தம்மாவைத் தன் இச்சைக்குப் பயன் படுத்திக் கொண்டு, தான் தவறில்லாதவன்எனவும் வேலைக்காரி தன் கள்ளக்காதலனை வீட்டில் யாரும் இல்லாத பொழுதுகளில் வீட்டிற்கு அழைத்துவந்து உறவாடுவதாகவும் பழிசுமத்துகிறான், குடும்பத் தலைவன். ''நீங்க அம்மாட்டச் சொல்லிடாதீங்கை யா?ன்னு ஏங்கிட்டக் குழைஞ்சு கெஞ்சினா, அட அவ வீட்டுக்கு வெளில எப்படியும் இருக்கட்டும், அது சொந்த வாழ்க்கை இங்கேயே...ன்னா...'' (ராஜம் கிருஷ்ணன் **களம்** பக். 24) இந்த உரையாடலில், வேலைக்காரியின் மீது பழியைப் போட்டுத் தான் தப்பித்துக் கொள்ளும் குடும்பத் தலைவனின் மனநிலை வெளிப் படுகிறது. சேற்றில் மனிதர்கள் லட்சுமியும், வேலைக்காரி முத்தம்மாவும் (**உருவாக்குகிறார்கள்** சிறுகதை) தாங்கள் வேலைபார்க்கும் இடத்தில் ஆணின் இச்சைக்கு ஆளாகிஅடங்கிப் போவதற்கும் விளைவை ஏற்பதற்கும் அவர்களுடைய பொருளா தார நிலை காரணமாகிறது. இப்பெண்களிடமும் அவர்களின் கணவன்மாரிடமும் கற்பு பற்றிய இறுக்கமான வரையறை ஏதுமில்லை. அதனால்தான் அவர்களும் அழகாயியின் கணவனும், நெறி பிறழ்வதை மிக எளிதாக ஏற்றுக்கொண்டு அதற்காகப் பெண்கள் தண்டிக்கப்படக் கூடாது என்றும் உணர்த்துகின்றனர்.

**அலுவல் மகளிரும் கற்பும்**

கல்வி கற்று. அலுவலகங்களில் பள்ளிகளில் பணிபுரியும் மத்தியதர, உயர் மத்தியதரப் பெண்கள் பொருளாதாரத்தில் சார்பின்றித்தனித்து நிற்கும் நிலை ஏற்பட்டு விட்டது. ஆனால், அலுவல் பார்க்க வெளியே வந்துவிட்ட பெண்களை, ஆண்கள், உலகம் இன்ப நுகர்ச்சிக்குரிய பொருட்களாகப் பார்க்கின்றனரே அன்றி, சக மனுஷியாக, சகநிகர் சமானமாகப் பாப்பதில்லை. இத்தகு சூழலில், சுற்றிலும் அரக்கர் கூட்டத்திடையே-இரா வணர்களின் நடுவில் இருக்கும் சீதைகளாகப் பெண்கள் வாழ

வேண்டியுள்ளது. பெண்ணை மிக எளிதில் தம் இச்சைக்கு அடி பணிய வைக்கவும் பணிய மறுப்பின் அலுவலிலிருந்து நீக்கி விடவும் பெண்ணின் கற்புநெறி குறித்துத் தவறாக வதந்தி பரப்பியும் அலுவல் மகளிருக்கு இன்னல் விளைவிக்கின்றனர். மணமாகாத பெண் அலுவல் பார்க்க வந்து இந்தச் சூழலில் சிக்கினால், இந்த அவதூறு அவள் திருமணத்தகுதியைப் பாதிக் கிறது. மணமான பெண் என்றால், இது அவள் குடும்பவாழ்வில் சிக்கலை உண்டாக்கித் துயருக்குள்ளாக்குகிறது. இவை எண்பது களின் புனைகதைகளில் விரிவாகவும் அழுத்தமாகவும் பேசப் பட்டுள்ளன. பெண் கல்வி கற்று அலுவல் புரிதல், பொருளா தாரச் சுதந்திரம் என்ற படிநிலை வளர்ச்சியில் கற்புக்கோட் பாடு என்ற தளையால் அவளைச் சிதைக்கவும் சிறுமைப் படுத்தவும் ஆண்களின் ஆதிக்க உணர்வு முயல்வது மிகுதியாக இப்புனைகதைகளில் காட்டப்படுகிறது.

ஆயின், முன்னெப்போதையும்விட, இத்தளைகளில் சிக் குண்டு, சிதைவிற்குள்ளாகாமல், எதிர்த்துப் போராடவும், நிமிர்ந்து நின்று வாழ்ந்து காட்டவும் தளைகளை அறுத்துக் கொண்டு வரவும் கூடிய விழுப்புணர்வை இப்புனைகதைகள் மிகுதியாகக் காட்டுகின்றன. கூட்டிற்குள்ளாகச் சுருங்கிப் போகும் நத்தைகளாக இல்லாமல், துணிந்து, எதிர்த்து நிற் கின்றனர், பெண்கள். இந்த விழிப்புணர்வும் எதிர்த்து நிற்கும் ஆற்றலும் கற்புக் கோட்பாடு பற்றிய மரபு ரீதியான கண் ணோட்டத்தையும் ஆண்களின் ஆதிக்கப் போக்கையும் படிப் படியாக மாற்றுவதுடன், எதிர்காலத்தில் சமூக மாற்றத்திற்கும் உதவும். இந்த ஆக்கப்பூர்வமான, எழுச்சியும், விழிப்புணர்வும் வாழ்க்கை பற்றிய நம்பிக்கைக் குரலும் எண்பதுகளில் புனை கதைகளில் பரவலாக இடம் பெற்றுள்ளன.

மணமான பெண், மணமாகாத பெண் ஆகிய இருவருமே அலுவலகத்தில் ஆண்களோடு சரிநிகர் சமானமாகப் பணி புரிகின்றனர். திறமையும், உழைப்பும் நேர்மையும் தகுதிகளாகக் கணக்கிடப்பட்டுப் பதவி உயர்வு வழங்கப்படும் தனியார் அலுவலகங்களில் நியாயமாகப் பெண்ணுக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வைக் கூட, ஆணின் ஆதிக்க-உடைமை-மனநிலை ஏற்கத் தயங்குகிறது. தனக்கில்லாமல், தன்னைவிட தகுதிகள் மிக்க ஒரு பெண்ணுக்குப் பதவி உயர்வு வருமாயின், உடனே, 'அவள் நெறி தவறியவள்; நெறியின்மை காரணமாகவே அவள் உயர்வு பெற்றாள்' என்று வதந்திகளைப் பரப்பி அப்பெண்ணின்

குடும்ப வாழ்வைச் சிதைக்கமுயல்கிறான், ஆண். இதனைத் திலக வதியின், பிரம்மாஸ்திரம்' சிறுகதை வெளிப்படுத்துகிறது. பாதிக்கப்படும் ஆண் எழுப்பும் வதந்தி, தொலைபேசி,மடல்கள் வழி அவள் கணவனை எட்டுகின்றது. அவள் கணவன், ஆர்த்தி யிடம் 'நீ வேலை பார்த்தது போதும். உனக்குச் சாப்பாடு போட என்னால் முடியும். சௌக்யமாக வச்சுக்க முடியும். மானம் பெரிசுன்னு நினைக்கிறவன் நான். கல்யாணங்கறது ரொம்ப புனிதமான பந்தம்...உனக்கு கெட்ட பேரு வரக்கூடாதுங்கற தாலேதான் சொல்றேன்'' (திலகவதி **அரசிகள் அழுவதில்லை,** பக் 103-104) என்று அன்பாக, அவள் மீது அக்கறை கொண்ட வனாகப் பேசுகிறான். அடிப்படை மனநிலையில், கற்புக்கோட் பாடு பற்றிய மரபுவழியான பார்வையும் ஆணாதிக்க உடைமை போக்கும்தான் அவனைச் செயற்படுத்துகின்றன. கல்வி கற்றுச் சுயமாகச் சிந்தித்து, பணிபுரியும் அவன் மனைவி ஆர்த்தி, இதனை எதிர்க்க தன்னிடம் தவறில்லாதபோது, பதவி உயர்வு யுத்தத்தில் எதிரி தன்னை வீழ்த்துவதற்காகத் தன் கற்பையே இழித்துப் பேசுவதன் மூலம், தன் கணவனையே எதிராகச் செயற்படுத்த முனைவதை எதிர்க்கிறாள். ''புருஷன்கற மொறையில உங்களுக்கு என் வாழ்க்கையைப் பத்தி பேச, பகிர்ந்துக்க எல்லா உரிமையும் தாரேன். ஆனா, என்னை அழிக்க நெனைக்கிற எதிரி எய்யற பிரம்மாஸ்திரமா நீங்களே வந்திங்கன்னா என்னைக் காப்பாத்திக்க விலகிக்கத்தானே வேணும்'' (மேலது, பக்.105) என்று தன் கணவனிடம் அவள் தீர்க்கமாகப் பேசும்போது, எதிர்த்து நிற்கும் துணிவும் உரமும் சிறுமை கண்டு பொங்கும்-சீறும்-பண்பும் ஒழுங்கே காணப்படு கின்றன.

பிரபஞ்சனின் **ஒரு வித்யாவின் கதை** என்னும் சிறுகதை யிலும், கணவனிடமிருந்து மணவிலக்குப் பெற்று வாழும் வித்யா விடம், தவறாகப் பேசும் அவள் கற்புநெறி பற்றி ஐயுற்றும் அவளைத் தன்னிச்சைக்கு இசையவைக்க முடியுமா என்று முனைந்து பேசும் அவளுடைய அலுவலக அதிகாரியிடம் துணிவும் உரமும் கொண்டு தெளிவாகப் பேசுகிறாள் வித்யா. வித்யா வின் நண்பன் ரவி (அவளுடைய மணத்திற்கு முன்னமேயிருந்து அவள் நண்பனாகப் பழகுபவன்) இப்போதும் வீட்டிற்கு வந்து போகிறானா என்று கேட்பதுபோல, அலுவலக அதிகாரி சீண்டு கிறார். அதற்கு அவள், ''ரவி காலைலேயே வந்தானா என்றா கேட்டீங்க? இல்லை. நேற்று ராத்திரியே வந்துட்டான். என் னோடதான் படுத்திருந்தான். இன்னைக்கும் வருவான்போதுமா

சார்? இது விஷயம்மா வேற ஏதாவது தகவல் வேணுமா சார்? சொல்லுங்க மிஸ்டர் தேவசகாயம். அவள் குரல் உயர்ந்து அந்த அலுவலகத்தின் நான்கு சுவர்களையும் எட்டியது' (பிரபஞ்சன் **ஒரு மனுஷி**, பக்.177) என்ற பகுதி அவளுடைய துணிவையும், சிதைந்துவிடாமல் நிமிர்ந்து, எதிர்த்து நிற்கும் மன உறுதியையும் ஒருங்கு காட்டும்.

'ஓசைகள் அடங்கிய பிறகு' நாவலில், தனியார் பள்ளியில் வேலை பார்க்கும் மீனா, அவள் வாழும் பேட்டையின் அரசியல் கட்சி செல்வாக்குள்ள மேஸ்திரியுடன் எம்.எல்.ஏ. ஒருவரைப் பார்க்கச் செல்லுகிறாள். தனனுடைய பேட்டையில், ஒரு நர்சரி பள்ளி தொடங்கி, அதன் மூலம் பின்தங்கிய ஏழை எளிய சேரி மக்களை முன்னேற்ற ஆசைப்பட்டு அது பற்றி விவாதிக்கவே. அரசின் உதவி பெறவே செல்கிறாள். ஆனால் எம்எல்.ஏ. அவளிடம் ''வர சனிக்கிழமை சாயங்காலம் மகாபலிபுரம் போயி ரெஸ்ட் எடுக்கப் போறேன். ஆருக்கும் தெரியாது நீ எதுவானாலும் ஸகீம் வச்சிருந்தா எடுத்திட்டு அங்க வந்திடு. இப்ப இங்க என்ன பேசுறது?'' (ராஜம் கிருஷ்ணன். **ஓசைகள் அடங்கிய பிறகு**, பக். 111) என்று கூறி, அவளைத் தன் இச்சைக்கு இணங்க வைக்க முயலுகிறான். பள்ளிக்கூடம், உதவி என்ற போர்வைகள் விலகப் பச்சையான அவனுடைய மிருக வேட்கையை அவள் புரிந்து கொள்ளுகிறாள். அங்கிருந்து வெளியேறி வரும் போது, அவனை எதிர்த்துப் பேசாமல் வந்துவிட்ட தன் கோழைத்தனத்தை எண்ணிக் குமைகிறாள். பள்ளியில் வேலை பார்க்கும் அவளைத் தன்னுடைய இச்சைக்கு வளைக்க முயலும் ஆணாதிக்கப் போக்கு இங்குப் புலப்படுகிறது.

ராஜம் கிருஷ்ணனின் **பிரச்சனை** என்ற சிறுகதையில் அலுவலகத்தில் வேலைபார்க்குமிடத்தில் மேலதிகாரி, தன்னிடம் தவறாக நடக்க முற்பட வேலையை விட்டு விடுகிறாள், (**பிரச்சனை** பக். 57—59) என்று ஆசிரியை காட்டுகிறார். திலகவதியின் **நத்தைக்கூடுகள்** சிறுகதையில், லதா தன்னிடம் தவறாகப் பேசிய மேலதிகாரியிடம் கடுமையாகவும், துணிந்தும் பதில் கூறுகிறாள். ''குறைந்த பட்சம் வீட்டுக்காவது இன்வைட் பண்ணலாம்னா'' என்று கூப்பிட்ட மேலதிகாரியிடம் ஆபீசில் சூபரின்டெண்டிடம்— ''வீட்டுக்கு வர்றதைப் பத்தி ஒண்ணும் ஆட்சேபணையில்ல. ஒங்க பொண்டாட்டி இல்லாட்டாலும் பரவால்லே, ஒங்க பொண்ணு புள்ளைங்க இருக்கிற டைமாச்

சொல்லுங்க. ஏன்னா, ஒத்த வ்யசுக்காரங்களோடதானே ஓட்டமுடியும்''னு முகத்திலடித்தாற் போலச் சொல்ல முடிந்தது'', (திலகவதி, **அரசிகள் அழுவதில்லை**, பக். 26) என்று தீரமும், துணிவும் கொண்டு நிமிர்ந்து பதில் சொல்லுகிறாள். பயந்து கொண்டிருக்கும் வரைதான், ஆண்கள், தங்களை வீழ்த்தப் பார்ப்பார்கள்; துணிந்து, எதிர்த்தால் அடங்கிப் போவார்கள் என்று இப் பெண்களின் வாயிலாகப் படைப்பாளர்கள் காட்டுகின்றார்கள்.

அலுவல் பார்க்குமிடத்தில் தன்னுடைய ஒழுக்கத்தைக் குலைப்பதற்கான முறையில் மேலதிகாரி இவ்வாறு நடந்து கொள்வதை வீட்டில் தன் கணவனிடமோ, பெற்றோரிடமோ கூறினால், அவர்கள், 'கண்டும் காணாமலும் இருந்துவிட்டுப் போ' என்று ஆறுதல் சொல்லுவார்களேயன்றி, இவ்வாறு துணிவையும், எதிர்த்து நிற்கும் ஆற்றலையும் வெளிப்படுத்த அறிவுரைதராததாகவேஇப்படைப்புகளில் காட்டப்படுகின்றனர். இதனைத் தன்னுடைய மேலதிகாரியான பெரிய மருத்துவரிடம் (அவருக்கு வயதாகி தலையெல்லாம் நரைத்துவிட்டது) இளம் மருத்துவரான நந்தினி, உரையாடும் போது உணருவதாகக்கூ(ற) சிறுகதையில் லக்ஷ்மி கண்ணன் காட்டுகிறார். ''அந்த சிகாரைப் பறித்து அதன் எரியும் முனையால் அவர் இரு கண்களையும் பொசுக்கவா? அல்லது வீடு போனதும் முதல் வேலையாய் கணவன் குமாரிடம் சொல்லவா? நான் இனிமேல் வேலை பார்க்கமாட்டேன். உனக்கோ நல்ல பதவி இருக்கு. உன் சம்பாத்தியத்தில் அதற்கு மேல் நானும் ஏதோ ஒரு சின்ன 'பிரைவேட் பிராக்டிஸ்' பண்ணினால், நாம் சமாளிக்கலாம். போதும் இந்த உத்தியோகம்; இந்த மாதிரி 'பாஸ்'. இதற்குக் குமார் என்ன சொல்லி விடப்போகிறான்? எட்டாவது முறையாகவோ அல்லது ஒன்பதாவது முறையாகவோ அவளுக்கு ஆறுதல் சொல்வான்!'' (லக்ஷ்மி கண்ணன், **ஓசைகள்**, பக். 38) என்று வரும் சிந்தனை ஓட்டம் இதனை வலியுறுத்தும். இங்கெல்லாம், மணமான பெண்ணின் ஒழுக்கத்தைச் சிதைக்க முயலும் மேலதிகாரிகளான ஆண்களின் மனநிலை, அதை எதிர்த்து நிற்கும் பெண்களின் உணர்வு ஆகியவை காட்டப் படுகின்றன. பெண்ணை, வெறும் நுகர்வுப் பொருளாக மட்டும் பார்க்கும் ஆணாதிக்க நிலையில் வெளிப்பாடுதான் இவை.

மணமாகி, இரு குழந்தைகளுக்குத் தாயான—கணவனைப் பிரிந்து வாழும்—சாருவிடம், அவள் குடியிருக்கும் வீட்டின்

உரிமையாளர் தவறாக நடக்க முயல்வதாகவும், சாரு அதை எதிர்ப்பதாகவும், ராஜம் கிருஷ்ணன் **ஆண்களோடு பெண்களும்** நாவலில் காட்டுகிறார். "நான்கூட ஒரு கார் எடுத்துக்கிட்டு வந்து, அடவாங்க பிஷர்மேன்கேவ் போயிட்டு வரலாம்னு சொன்னா மாட்டேன்னு சொல்லிடுவீங்களா?..." என்று வீட்டின் உரிமையாளர் மயில்சாமி கூறுகிறார். (ராஜம் கிருஷ்ணன், **ஆண்களோடு பெண்களும** பக். 98). இதனை அப்பெண் சாரு மிகக் கடுமையாக எதிர்க்கிறாள். மணமான பெண், மணவிலக்கு பெற்றுத் தனித்து வாழும் பெண், விதவையான பெண், மணமாகாத பெண் என்று அனைத்து தரப்பிலும் இந்த மாதிரியான இக்கட்டுக்களைப் பெண்கள் எதிர்கொள்வதை இப்புனைகதைகள் காட்டுகின்றன. 'சக்தி 81' நாவலில், அலுவலகத்தில் பணிபுரியும் சக்தியிடம் அவளுடைய மேலதிகாரி கபூர் பேசுவதும் அதை அவள் தன் நண்பன் பிரதாப்பிடம் பகிர்ந்து கொள்வதிலும் பெண்களைப் பற்றிய ஆணின் மதிப்பீடு தெரிகிறது. "சொந்தக்காலில் நிற்கிற பெண்களுக்கு ஏன் இப்படி ஒரு முத்திரை குத்திப் பார்க்க ஆசைப்படுகிறார்கள்? ஆள்காட்டி விரலை ஆட்டினாலே ஓடிவந்துவிடுவாள் என்று நினைக்கிறார்களோ... சாதாரண ஆணின் இயல்பு" (**சக்தி 8**', இந்துமதி, பக். 114. 115) என்று வரும் சக்தியின் கூற்றும்; பின்னர் பிரதாப் அவளை விட்டுப்போய்விட்டதையும் அவள் தனியாக இருப்பதையும் அறிந்த கபூர் மீண்டும் அவளிடம் "பிரதாப் போய்விட்டால் அந்த இடத்திற்கு அடுத்து அப்ளிகேஷன் போடப் போகிறவன் நான்தானே" என்று கூறி அவன் தொடர்ந்து பேச, சொல்லிமுடிப்பதற்குள் அவன் கன்னத்தில் அவள் ஒரு அறை விடுகிறாள் என்று இந்துமதி காட்டுவதும் (மேலது, பக். 153) பெண்ணின் துணிவையும் எதிர்த்து நின்று போராடும் ஆற்றலையும் காட்டும்.

அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள், இவ்வாறு தம் மேலதிகாரிகளால் பாலுறவு வன்முறைக்கு ஆட்படுத்த முயலும் போது, அதை எதிர்க்கவும் துணிவுடன் போராடவும் விழிப்புணர்வு பெறவேண்டும் என்று இப்படைப்பாளர்கள் அழுத்தமாகக் காட்டுகின்றனர். பொதுவாக, மரபு சார்ந்த கண்ணோட்டமும் அச்சமும் கொண்டு அடங்கிப்போய்விடுகின்ற பெண்களிடம் தனிமையில் எளிதாகத் தன் இச்சையைத் தீர்த்துக் கொள்ளும் ஆண்கள், அலுவலகத்தில் பலர் முன்னிலையில், எதிர்த்து நிற்கும் பெண்களிடம், இதைப்பற்றிப் பேசிப் பார்த்து, எதிர்த்து நிற்பது கண்டால் அடங்கிவிடுவார்கள்.

எனவே, எதிர்த்து நின்று போராடும் பண்புதான் வளர வேண்டும் என்பது இன்று தேவையான, வலுவான சிந்தனை யாகும்.

தவிர்க்கவியலாத சூழலில் ஆணின் வன்முறைக்கு ஆளாகி விட்ட, அலுவலகப் பெண்ணுக்குத் திருமண வாழ்வு பாதிக்கப் படுகிறது; அவள் திருமணத்தகுதியை இழக்கிறாள். இதனை, ஜோதிர்லதா கிரிஜாவின் **மன்மதனைத் தேடி** நாவல் காட்டு கிறது. அலுவலகச் சூழலில், கடந்த காலவாழ்வில், தன் மேலதி காரியின் வன்முறைக்கு ஆளானவள் கமலா என்று அறிந்ததும் அவள் காதலன் அவளை, 'எச்சிற்பழம்' (**மன்மதனைத் தேடி**, பக். 70) என்று கூறி ஒதுக்கிவிடுகிறான். எனவே, இந்தப் போக்கு நம் சமூகத்தில் உள்ளதை நடப்பியல் நெறியில் படைத் துள்ளனர்.

## கற்புநெறி குறித்த ஆணின் எதிர்பார்ப்பு

ஆண்கள் எவ்வளவுதான் படித்து, உயர் அலுவல்களில் பணிபுரிந்தாலும் கற்புக் கோட்பாட்டில் பழமையான கண்ணோட்டமுடையவராகவும், தன் மனைவி கற்புநெறி பிறழாதவளாக இருக்க வேண்டும் எனவும், உலகில் உள்ள பிற பெண்கள், தம் விரலசைவில் ஓடிவரனும் தமக்கென அதற்காகவே படைக்கப்பட்ட இன்பநுகர்வுப் பொருட்கள் எனவும் மனப் பான்மை உடையவர்களாக உள்ளனர். ஆண்களின் இந்த மனநிலைக்குக் காரணம், தத்தம் மனைவியரைத் தம் உடைமைப்பொருளாகவும் பிறபெண்களைத் தமக்குரிய நுகர்வுப் பொருளாகவும் பார்க்கின்ற ஆதிக்க மனநிலையாகும். ஆகவே, கற்புக்கோட்பாட்டைப் பொறுத்தவரையில் தம்முடைய உடைமைக்கு ஒரு வரையறையும், பிறபெண்களுக்கு ஒரு வரையறையுமான இரட்டை அளவுகோல்களை உடையவர் களாக ஆண்கள் உள்ளனர். ஆனால், தன் மனைவிக்கோ, பிற பெண்களுக்கோ, அவர்களுக்கென்று தனிப்பட்ட ரசனையோ, விருப்பு வெறுப்போ இருத்தல் கூடாது என்பதில் எல்லா ஆண் களும் ஒன்று போல உள்ளனர். இந்த மனநிலையின் காரண மாகக் கற்புக் கோட்பாட்டை மிகவும் இறுக்கமாகத் தம் மனைவி யிடம் எதிர்பார்க்கின்றனர்.

'வெந்து தணிந்த காடுகள்' நாவலில் அருணின் மனைவி விம்மி வெளிப்படையாகவே அவனிடம் சொல்லிக் காட்டுகிறாள். ''ராதிகா சிகரெட் குடிக்கிறாள். விஸ்கி குடிக்கிறாள். ஆண்

களுடன் எந்தவித மனத்தடையும் இல்லாமல் பழகுகிறாள். ஒரு பெண் இப்படி இருப்பதை உங்களுடைய பாரம்பரியப் பண்பாட்டுப் பிரக்ஞை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால்தான் ராதிகாவைப் போல் நீ இருக்க விரும்புகிறாயா என்று என்னை ஏளனமாகக் கேட்டீர்கள்.. ஆனால் உங்கள் வியாபார முன்னேற்றத்துக்கு இந்த ராதிகாதான் தேவை. இதைப்பத்தி உங்களுக்கு எந்தவித ஆட்சேபமும் இல்லை. உங்கள் மனைவி என்று வரும்போது எவையெவை நல்ல குணங்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அவற்றின் மொத்த உருவமாக, பண்பாட்டுக் கருவூலமாக அவள் அமையவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்.. இத்தகைய வெவ்வேறு அளவுகோல்கள்தான் எனக்குப் பிடிக்கவில்லை.'' (**வெந்து தணிந்த காடுகள்**, பக். 57) என்று வரும் அவளுடைய கூற்றும் 'அவன் தொழிலுக்காகப் பல அசுத்தமான காரியங்கள் செய்யவேண்டியுள்ளது; வீடு சுத்தமாக இருக்க வேண்டுமென்று நினைப்பதில் என்ன தவறு' (அதே நாவல், பக். 57) என்று அவனுடைய எண்ணவோட்டத்திலும் காட்டப்படுகிறது.

'சுந்தரகாண்டம்' நாவலில் தன்னுடைய விருப்பத்திற்கு மாறாகச் சுகுமாரனைத் தனக்கு மணமுடித்த பின்னர், சீதா, தன்னைச் சுற்றிக் கோடு வரையறுத்துக் கொண்டு, பெயருக்கு அவனுடன் வாழுகிறாள். வீட்டில் தாதி வேலை செய்யும் விதவை மீனாவிடம் தன் கணவன் சுகுமாரன் உறவு கொள்வதைக் கண்டு, மீனாவை மறுமணம் செய்து கொண்டு வாழுமாறு வற்புறுத்துகிறாள். ஆனால், அவனோ இதற்கு இணங்காததுடன், மீனாவைத் தன்னுடைய இன்பநுகர்ச்சிக்கு மட்டுமே உரியவள் எனவும் வாதிடுகிறான். ''அவளே (மீனாவே) அதையெல்லாம் கேட்கிறது சரியில்லேன்னு, இருக்கிற வாழ்க்கையிலே திருப்தியாயிருக்கும்போது நீ ஏன் இன்னொருத்தர் விவகாரத்திலே-உனக்கு சம்பந்தமில்லாத விவகாரத்திலே தலையிடறே?'' (**சுந்தர காண்டம்**, பக். 350-351) என்ற உரையாடல் இதனை வலியுறுத்தும்.

அலுவலகத்தில் பணிபுரியச் செல்லும் பெண், வயதான தன் மேலதிகாரி தன்னிடம் தவறாக நடப்பதைத் தன் தந்தையிடம் சொல்லுகிறாள், **பிரச்சனை** சிறுகதையில். ஆனால் தந்தையோ, மகள் கொண்டுவரும் வருமானம்தான் பெரிது என்ற நிலையில், கண்டும் காணாமல் அநுசரித்துப் போ என்கிறார். ''நானூறு ரூபாய்ச் சம்பளம் எட்டிப் பிடிக்கலாம், அப்பாவைப் போல

ஒருவர், 'நன்றா உடுத்தியிருக்கிறாயே என்று சொல்ல மாட்டாரா? உனக்கென்ன ஒட்டிக் கொண்டது. கோடீசுவரனான முதலாளி, பர்ஸனல் கிளார்க் என்றிருந்தால் கொஞ்சம் தமாஷாகத்தான் பேசுவான். இந்த நாகரீகம் கூடவா ஒரு பெண்ணுக்குத் தெரியாது?''(ராஜம் கிருஷ்ணன், **களம்**, பக். 59) என்று வரும் தந்தையின் கூற்று இதனை வலியுறுத்தும். அலுவலகத்தில் உடன் பணிபுரியும் சக பெண்களிடம் ஆண்கள் தவறாக நடக்க முற்படுவதைத் திலகவதியின் நத்தைக் கூடுகள், லக்ஷ்மி கண்ணனின் கூடு விரிவாகக் காட்டுகின்றன. இவற்றிலும், முன்னரே, குறிப்பிட்ட புனை கதைகளிலும், அலுவல் புரியும் பெண்ணை, ஆண்கள் தன் இச்சைக்குப் பயன்படுத்த முனையும் மனப்போக்கே புலனாகிறது. பொருளாதாரத் தேவைக்காக அல்லது தனித்து வாழுவதற்காக அலுவல் புரியுவரும் பெண்கள் இந்த இடர்பாடுகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும், ஆண்களிடமிருந்து விலகி, தேவைப்பட்டால் எதிர்த்து நின்று சமாளிக்கவும், போராடவும் விழிப்புணர்வும் வீரமும் பெற வேண்டும் என்று இப்படைப்பாளர்கள் தொடர்ந்து வலியுறுத்துகின்றனர். மாறாகப் பின் விளைவுகளை ஆராயாமல், ஆணின் இச்சைக்கு இணங்கினால், அதன் பயனாகத் தன் வாழ்வையே பறிகொடுக்கிறாள். இதனை ராஜம் கிருஷ்ணனின் 'டென்ஷன்' சிறுகதை காட்டுகிறது 'பிரமீளாவுக்கு அவள் வயசுதான் இருக்கும்...வரம்பு மீறிய பழக்கத்தின் விளைவில் கட்டாயமாக மணம் புரிந்துகொள்ள வேண்டியிருந்தது. பிறகுதான் வாழ்வில் தான் கொடுமையாக ஏமாற்றப்பட்டவள் என்ற உண்மை புரிந்தது. அவள் மணந்த பாஸ்கரனுக்கு ஏற்கெனவே ஒரு மனைவியும் இரண்டு குழந்தைகளும் இருக்கின்றனர். இவளுக்கும் ஒரு குழந்தை இருக்கிறது. அவன் விவாகரத்தும் செய்துகொள்ளவில்லை...' (ராஜம் கிருஷ்ணன், **களம்**, பக். 133) என்று வரும் பகுதி இதனைக் காட்டும். ஆகவே, ஆணின் இச்சைக்கு எளிதில் இணங்கினால், பெண் பெறும் கடும் விளைவுகள் அவளை முடக்கிவிடும். எனவேதான், கற்புக்கோட்பாட்டைத் தனக்குச் சாதகமாகவும் காலங்காலமாகப் பெண்ணைத் தனக்கு அடிபணிய வைப்பதற்காகவும் ஆணாதிக்க சமூகம் வைத்துக் கொண்டுள்ளது.

**கற்புக்கோட்பாடு-மறுமதிப்பீடு**

பெண், கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டு, ஆண்களைச் சார்ந்து வீட்டில் பூட்டி வைக்கப்பட்ட காலத்தில் ஆணாதிக்கச்

சமூகம் விதித்த கற்புக் கோட்பாட்டை அப்படியே ஏற்றுக் கொண்டு வாழ்ந்தாள். இன்று, சமூக அமைப்பு மாறி வர, ஆணுக்குச் சரிநிகர் சமானமாகக் கல்விகற்று, அலுவல் புரிகிற சூழலில், பழைய சமூக மதிப்புகள் பலவும் மாறி வரும்போது, கற்பு பற்றிய இறுக்கமான கட்டுப்பாடுகள் நெகிழ ஆரம்பித்துள்ளன. எனவே, கற்புக்கோட்பாடும் மறுமதிப்பீடு செய்யப் பெற வேண்டும் என்ற சிந்தனை இப்படைப்பாளர்களால் வலியுறுத்தப் படுகிறது. கற்பு என்பது வெறும் உடல் சம்பந்தமானதா? மனம் சம்பந்தமானதா? என்ற வினா எழுகிறது. வீட்டைவிட்டு வெளியே வந்து, பிற ஆடவர்களுடன் (அதுவும் தன் மனைவி மட்டும் கற்புக்கடம் பூண்ட இல்லத்தரசியாக தனக்கென்று முகமில்லாத மனுஷியாக இருக்க, அலுவல் பார்க்க கல்வி கற்க வெளியே வரும் பிற பெண்கள் அனைவருமே தமக்குரிய போகப் பொருள் என்ற இரட்டை அளவுகோலுடைய ஆண்களின் மத்தியில்) கலந்து பழகி வாழ்கிற பெண், **பயிர்ப்பு** என்ற பழைய சமூக மதிப்பையும் கற்பு என்ற பழைய கோட்பாட்டையும் எப்படிப் பின்பற்றி வாழ்வது? இந்த வினாக்களுக்குத் திலகவதியின் **நத்தை கூடுகள்** என்ற கதை விடை சொல்லுகிறது. ''அம்மா! நீ சொல்ற கற்பு என்னுடைய இந்தப் போக்கால காக்கப்படுமே தவிர அழிக்கப்படாது. கற்பு கற்புன்னு இத்தனை பேசறியே, கற்புன்னா என்ன சொல்லு பார்ப்போம்! அது உடம்பு சம்பந்தப்பட்டதா? இன்னிக்கு சினிமா ஹீரோக்களுக்கு விசிறியா இருக்கிற பொண்ணுங்க எல்லாம் கற்பிழந்தவங்கதான். வீட்டு நடையைப் பெண்கள் தாண்டாம வீட்டுக்குள்ளேயே உழன்று வீட்டு நினைவும் வீட்டு வேலையும் வீட்டு விஷயமும் தவிரவும் வீடே உலகம்னு அடைபட்டிருந்த காலத்துலே விதிச்ச பழக்க வழக்கங்களையும் நியதிகளையும் இன்னிக்கும் அப்படியே அனுசரிக்கணும்னு கட்டாயப் படுத்தினா எப்படி?'' (திலகவதி, **அரசிகள் அழுவதில்லை**, பக். 27-28) என்று மகள் லதா தாயிடம் கூறுகிறாள். இதன்மூலம் மாறிவரும் சமூக, காலமாற்றங்களுக்கேற்ப கற்பு குறித்த மறுசிந்தனை தேவை என்பதையும், அந்த விழிப்புணர்வு வயதான மூத்த தலைமுறையினருக்கு மிகச் சரியாக உணர்த்தப்பட வேண்டும் என்னும் படைப்பாளியின் சிந்தனையும் வெளிப்படுகிறது.

வாஸந்தியின் **மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்** என்ற நாவலில், கணவனிடமிருந்து மணவிலக்குப் பெற்று, பின்னர் தான் காதலிக்கும் ஸ்ரீதரனை மறுமணம் செய்து கொள்ளத் தயங்கும் நிலையில், ஆனந்திக்கு அறிவுரை கூறுவதாக, ''கற்பு

என்பது என்னவென்று நினைத்துக் கொண்டாய்? உன் அன்பு பூத்தாலும் நம்மிடையே பரஸ்பர அன்பு மலர்ந்து நீ அதற்கு மதிப்புக் கொடுத்து அதைப் புனிதப்படுத்துவதில்தான் உன்னுடைய கற்பு காக்கப்படும்'' (வாஸந்தி, **மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்**, பக். 261-262) என்ற ஸ்ரீதரனின் கூற்றால் உணரலாம். இதனால் கற்பு குறித்த மறுமதிப்பீடு ஏற்பட வேண்டும் என்று படைப்பாளர்கள் மீண்டும் மீண்டும் உணர்த்துவதை அறியலாம். முன் காலத்தைப் போல அடங்கி, ஒடுங்கி கோழைகளாக இருப்பதைவிட, தீமைகளை எதிர்த்து, துணிவும் உரமும் கொண்டு நிமிர்ந்து போராடி வாழும் நிலை இன்று உள்ளது. இச்சூழலில், ''பெண்ணுக்குத் தேவை சுருண்டுக்கறதுக்கு ஒரு கூடு இல்லை. வெட்கமும் கூச்சமும் வச்சுக்கிட்டு கூட்டுக்குள்ளே புகுந்துக்கற நத்தையா அவள் வாழ வேண்டியதில்லை. அந்தக் கூட்டை ஒடைச்சு சிறகைப் பிரிச்சு வெளியே உள்ள பரபரப்பான உலகத்துக்கு ஈடு கொடுத்து வாழ அவளுக்குத் தேவையானது தைரியமும், பலமும் நம்பிக்கையும்தான்'' என்று வரும் திலகவதியின் கூற்று (**அரசிகள் அழுவதில்லை**, பக். 28) இதனை வலியுறுத்தும்.

## முடிவுரை

ஆணாதிக்கச் சமூக அமைப்பில், பெண்ணைத் தனக்கு அடிமைப்படுத்தி, தன்னுடைய உடைமைப் பொருளாக்க ஆண் ஏற்படுத்திய நியதி கற்பு. ஒரு தார மணம் பெண்ணுக்கு மட்டுமே உரியது என்று இதன் அடிப்படையில் ஏற்படுத்தி, குழந்தைபேறு, ஆண் வாரிசுக்கு முதன்மை, ஆண் வாரிசு பிறந்தால் பெற்றோருக்கு நரகமில்லை ஆகிய சமயஞ்சார்ந்த நம்பிக்கைகள் இதன் தொடர்விளைவாக ஏற்பட்டன. ஆகவே, பெண் தன் உடலாலும், உள்ளத்தாலும் கணவனுக்குரியவளாக வாழ்ந்து, அவனுடைய ஒழுக்கக் கேடுகளையும் பொறுத்துக் கொண்டு வாழ வேண்டும் என்று விதிக்கப்பட்டது. கால மாற்றத்தில் கல்விகற்று, அலுவல் புரிந்து பொருளீட்டி, வெளியேயும் வீட்டிலேயும் பணி செய்து பெண் இரட்டைச் சுரண்டலுக்கு ஆளானாள். இத்தகைய நிலையில், பெண்ணைத் தனக்கு இணையாக நடத்தாமல், பழைய சமூக மதிப்பான கற்பைக் கூறி அவளைத் தளைப்படுத்தினான் கணவன். அவள் தவறே செய்யாது, ஆணின் வன்முறைக்கு ஆளான போதும் பழியை அவள் மீது சுமத்தினான். மணமாவதற்கு முன், வன்முறைக்கு ஆட்படின் அவளுடைய மணத்தகுதி பாதிக்கப்பட்டது;

மணமானபின் என்றால், வன்முறைக்கு ஆட்பட்ட பெண் பழி சுமந்து, குடும்பச் சிதைவிற்கு ஆளாக்கப்பட்டாள். வன்முறைக்கு ஆளானவளை, அவளுடைய உடல்கூறு, தாயாகும் பண்பு இவற்றைக் கொண்டே, திட்டு, புனிதமற்றவள் என்று பெண்களே பழிக்கும் பழைய சமயஞ்சார்ந்த மதிப்புகள், மூதிய தலைமுறைப் பெண்களிடம் இன்னமும் காணப்படுகிறது. ஆகவே, ஆண்களுக்கு மட்டுமன்றி, இந்த முதிய தலைமுறைப் பெண்களுக்கும் கற்புக்கோட்பாட்டின் மறுமதிப்பீடு உணர்த்தப் பட வேண்டும் என்ற எழுச்சிமிக்க சிந்தனை இப்படைப்பாளர் களிடம் தொடர்ந்து காணப்படுகிறது.

வன்முறைக்கு ஆளான பெண், தன்னை மாய்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடாது வாழ்ந்துகாட்டும் போராட்ட உணர்வும், நம்பிக்கைக் குரலும் இப்படைப்புக்களில் தொடர்ந்து காணப்படுவது, வாசகர்களிடம், குறிப்பாகப் பெண் வாசகர் களிடம் தன்னம்பிக்கையையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத் தும் முயற்சியாகும். நாடகத்தன்மை வாய்ந்த நிலையிலன்றி மிகவும் யதார்த்தமாக நிகழ்ச்சிகளைப் படைப்பாளர்கள் படைத்துள்ள பாங்கு குறிப்பிடத்தக்கது. வன்முறைக்கு ஆளான பெண்ணை மணந்து வாழும் நிலையில், பிறக்கும் குழந்தையை ஏற்கத் தயங்கும் நகரத்து மனிதனையும், அவ்வாறு பிறந்த குழந்தையைத் தன் மகவாக ஏற்று வாழும் கிராமத்து, உழைப் பாளி தந்தையின் மனநிலையையும் இப்படைப்பாளர்கள் காட்டுவதால் அறியலாம்.

உடைமைச் சமூக அமைப்பில்தான் குடும்பம், கற்பு போன்ற கோட்பாடுகள் தளைகளாகிப் பெண்ணை அடிமைப்படுத்துவதை யும், அவ்வாறு இல்லாத, உழைப்பை மையமிட்ட அடிமட்டத்து வாழ்க்கையில் கற்பு குறித்த மதிப்பீடு மாறுபடுவதையும் இதனால் உணரலாம். சமூகவியல், வரலாற்றுக் கண்ணோட்டத் தில், இவை மிகச் சரியாகப் படைக்கப்பட்டுள்ளன. மாறிவரும் கால, மதிப்பு மாற்றங்களுக்கேற்ப, பெண்களுக்கு விழிப்புணர்ச்சி யையும், தன்னம்பிக்கையையும், போராடும் குணத்தையும் மிகச் சரியான முறையில் முன் எப்போதையும் விட மிகுதியாக வும் அழுத்தமாகவும் இப்படைப்பாளர்கள் காட்டியுள்ளனர்.

# பெண்ணுரிமை

**முன்னுரை**

உலகெங்கிலும் அந்தந்த நாட்டின் பண்பாட்டு, நாகரிகச் சூழல்களுக்கு ஏற்ப, பெண்ணுரிமை செயல்—நடைமுறைத் திட்டங்களுடன் முழுவீச்சில் செயற்பட்டு வருகிறது. சமூக இயக்கமான அது, கலை—இலக்கியம் ஆகியவற்றிலும் தன் வீச்சைக் காட்டி வருகிறது. சமுதாயப் பிரச்சினைகளை ஆழமான சமூகக் கண்ணோட்டத்துடன், விமர்சன நடப்பியல் பாங்கில் எழுதும் புனைகதை படைப்பாளர்கள், குடும்ப, சமூக அமைப்புக்களில் காணப்படும் பெண்ணடிமைத்தனத்தையும், ஆணாதிக்கத்தை எதிர்த்துச் சம உரிமையும் தனித்துவம் போற்றும் பாங்கும் பெண்ணை இழிவபடுத்தலை எதிர்க்கும் பண்பும் கொண்டு எழுகின்ற எழுச்சியையும் மறைத்துவிட்டு எழுத முடியாது. நடப்புச் சமூகத்தின் சமூக ஆவணங்களாக விளங்கும் புனைகதைகள் பெண்ணியநோக்கில், பெண்ணுரிமைச் சிந்தனைகளை எவ்வாறு படைத்துள்ளன என்று காண்பது இவ்வியலின் நோக்கமாகும்.

இந்த நூற்றாண்டில் தமிழ்ச் சமுதாயத்தில், பெண்கள் கல்வி கற்று, ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாகப் பணிபுரிந்து பொருளுற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளனர். அரசியல், சட்ட ரீதியாகப் பெண்ணுக்குச் சொத்துரிமை கிடைக்க வழி செய்யப் பட்டு உள்ளது. ஆயினும், அலுவல் பார்க்கச் செல்வதாலே பெண்ணின் வாழ்க்கை இன்னும் மிகுதியாக இரட்டைச் சுரண்டலுக்கு ஆட்பட்டுத் துன்பம் அனுபவிக்கிறது. குடும்ப, சமூக, அலுவலக அமைப்புக்களிலும், சமய, பண்பாட்டு மரபுகள்—நடவடிக்கைகளிலும் பெண் இன்னமும் இரண்டாந்தர குடிமகளாக, ஆணைவிடத் தாழ்ந்தவளாகவே நடத்தப்

படுகிறாள். அவளுக்கு என்று தனித்ததான ரசனை, விருப்பு—வெறுப்பு இருக்கக் கூடாது என்ற நிலையில் பெண் அடக்கி வைக்கப்படுகிறாள்.

குடும்ப, சமூக அமைப்புக்களில் சம உரிமை மறுக்கப்பட்டும், தனித்துவம் மறுக்கப்பட்டும் நடத்தப்படுவது இன்றைய தலையாய பிரச்சினைகளாகும். அதுபோல, பெண்களை இன்னமும் ஆண்கள் தம் இன்பநுகர்வுப் பொருளாக—பழமை யான, மரபு சார்ந்த பிம்பங்களாக—நடத்துவது, இழிவுபடுத்து வது என்பவையும் பிரச்சினைகளாகும். கலை—இலக்கிய, திரைப்பட சாதனங்கள் யாவும் ஆணாதிக்கச் சமூக அமைப்பில் பெண்களை இழிவுபடுத்துகின்றன. ஆகவே, இவற்றை எதிர்த்துப் போராடும் பணியே இன்றைய பெண்களுக்கு உடனடித் தேவையென இன்று பெண்ணியவாதிகள் செயற் படுகின்றனர். இந்தப் பின்னணியில்—இவற்றை மையமிட்டு—புனைகதை ஆசிரியர்கள் எவ்வாறு இவற்றைத் தம் படைப்புக் களில் எண்பதுகளில் படைத்துள்ளனர், என்று காண்பது இவ்வியலின் நோக்கமாகும்.

ஆண்—பெண் இருவரும் சமஉரிமை பெறும் வழியைக் காணுதல்—கல்வி கற்று, ஆணுக்குச் சரி நிகராக அலுவல் பார்த்துவரும் பொருளீட்டும் பெண், இன்னமும் பழைய மரபு சார்ந்த பங்குநிலைகளையும் கடமைகளையும் செயற்படுத்த மட்டுமே உரிமையுள்ளவள் என்ற ஆணாதிக்கச் சமூக—குடும்ப அமைப்பை மாற்றுதல்; பெண்ணின் தனித்தன்மை—தனியான ஆளுமையை—வெளிப்படுத்திடவும் தன் திறமைகளை வெளிப் படுத்தவும் குடும்ப, சமூக நிறுவன அமைப்புக்களில் அவள் பங்குநிலை தடையாவதை எதிர்த்தல்; பெண்ணுக்கு இழைக்கப் படும் சமூகக் கொடுமைகளை எதிர்த்தல் ஆகியன இன்றைய பெண்ணுரிமை இயக்கங்களின் தலையாய—முதன்மை நோக்கங் களாக உள்ளன. இந்திய மரபுவழியான பின்னணியில், தமிழ்ச் சமுதாயத்தில் மிகுதியும் அல்லல்களுக்கு ஆளாவதற்குக் காரணமாக அமையும் குடும்ப அமைப்பு, கற்புக்கோட்பாடு என்பவை நெகிழ்ச்சி பெற்று மறுமதிப்பீட்டிற்குள்ளாவதையும் பெண்ணியச் சிந்தனையின் மைய இழைகளாகத் தமிழகத்தில் காண்கிறோம். சமய, பண்பாட்டு மரபுகளில் பெண்கள் இழிவு படுத்தப்படுவதையும் இரண்டாந்தரக் குடிமகளாக நடத்தப் படுவதையும் பெண்ணுரிமை இயக்கம் எதிர்க்கிறது. இதையும் படைப்பாளிகள் அழுத்தமாக இக்காலக் கட்டத்தில் படைத் துள்ளனர். பெண்ணுரிமை என்றால், கட்டுப்பாடற்ற—வரன்

முறையற்ற—பாலுறவுச் சுதந்திர நாட்டமுடையவர்களாகப் பெண்கள் உள்ளனர் என்று காட்டும் போக்கு, தவறானதும் பெண்ணுரிமை இயக்கத்தின் நோக்கத்தைக் கொச்சைப் படுத்துவதுமாகும். அத்தகைய போக்கு, இப்படைப்புக்களில் இடம் பெறவில்லை.

இவ்வியலில், தனித்தன்மை போற்றல், குடும்ப—சமூக அமைப்புக்களில் சமத்துவம், இழிவுபடுத்தலை எதிர்த்தல், சமய, பண்பாட்டு நடைமுறைகளில் சமமின்மையை எதிர்த்தல், மரபுவழி பங்குநிலை—கடமை குறித்த மறுமதிப்பீடு, பெண்ணுரிமை போற்றும் பிம்பங்கள், பெண்ணுரிமை செயற் பாட்டிற்கான நடைமுறை வழிகள் ஆகியன ஆராயப்படுகின்றன. இவ்வியலில் பேசப்படும் கருத்துக்களுக்குச் சான்றுகளாக, **ஆத்துக்குப் போகணும், வெந்து தணிந்த காடுகள், மானுடத்தின் மகரந்தங்கள், மண்ணகத்துப் பூந்துளிகள், ஓசைகள் அடங்கிய பிறகு, ஊமை அரண்கள், ஆண்களோடு பெண்களும், சுழலில் மிதக்கும் தீபங்கள், சுந்தரகாண்டம், சக்தி 81, பாரதகுமாரிகள், எல்லைகளின் விளிம்பில், சந்தியா** ஆகிய நாவல்களும், **களம், அரசிகள் அழுவதில்லை, ஒருமனுஷி, வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, ஓசைகள், பயணம், அம்மா, பருவங்கள் மாறும், ஆதார சுருதி** ஆகிய.

சிறுகதைத் தொகுப்பு நூற்களும் அமைகின்றன.

### தனித்தன்மை போற்றல்

இன்றைய சூழலில் மத்தியதர, உயர்மத்தியதர வாழ்க்கையில் கல்விகற்று, அலுவல் பார்த்துப் பொருளீட்டும் பெண்ணுக்கு மணமாகி, குடும்ப வாழ்வில் மனைவி என்ற பங்குநிலையை ஏற்றபின், அவளுக்குத் தனித்தன்மை, தனிப்பட்ட ரசனை, படைப்பாற்றல், விருப்பு—வெறுப்பு என்பன ஏதும் இருக்கக் கூடாது; இருப்பினும் குடும்ப வாழ்விற்காக அவள் அதையெல்லாம் மறந்து, மூட்டைகட்டிப் பரணில் போட்டுவிட வேண்டும்; உக்கிராண அறையில் (சமையலறையில்) அவள் இருப்பதுதான் அவளுடைய இயக்கத்திற்கு மைய அச்சாக அமையும்; பொருளீட்டி வர அலுவலகம் போய்வந்தாலும் அவளுடைய முகம் எதிலும் வெளிப்படக்கூடாது என்பதாக ஆணாதிக்க சமூகம் அவளைக் கட்டிற்குள் வைத்திருக்கிறது. அதைமீறி, தன் திறனை தனித்தன்மையைப் போற்றி, வெளிப்படுத்தினால் விளைவுகள் அவளைப் பாதித்து, குடும்ப அமைப்பில் சிக்கல் உண்டாக்குகிறது என்பதை இப்படைப்புக்கள்

காட்டுகின்றன. ஆனால், அத்தகைய அடக்குமுறைகளை மீறித் தன் தனித்தன்மையை வெளிப்படுத்தும் பெண்களையும் தடைகளை எதிர்த்துப் போராடி. விளைவுகளை ஏற்று வாழும் துணிவையும் இப்படைப்புகள் காட்டுகின்றன. தனிமனித நிலையில் குடும்பத்திற்குள்ளிருந்த படியே விளைவுகளைச் சந்தித்துப் போராடும் நிலையும், குடும்பத்தை விட்டு வெளியேறி விலகி வாழும்நிலையும் இவற்றில் காணப்படுகின்றன.

**வெந்து தணிந்த காடுகள்** நாவலில் விம்மி ஓவியத்தில் ஆர்வமுடையவள்; **ஆத்துக்குப் போகணும்** நாவலில் ரமா நாவல்—சிறுகதை எழுதுகிறவள்; **ஸ்வயங்கள்** (பருவங்கள் மாறும்) சிறுகதையில் கதைத்தலைவி கவிதை எழுதுபவள்; இவர்கள் அனைவருக்கும் மணமானபின், தம் தனித்தன்மையை வெளிப்படுத்த, நிலை நிறுத்த, மனைவி என்ற பங்குநிலை கடும் தடையாக உள்ளது; கணவன் தடை செய்கிறான். விம்மி, ரமா மீறி வளர்கின்றனர்; எதிர்ப்பைக் காட்டி வளர்கின்றனர். தன் மனைவியிடம் உள்ள கலைவெளிப்பாடு, படைப்பார்வம் ஆகியவற்றைக் கணவன் எதிர்க்க—நசுக்க—அவனிடம் உள்ள ஆதிக்க, உடைமை மனநிலைகளும் மரபு சார்ந்த பெண்ணின் பங்குநிலை—கடமை பற்றிய ஆடவர் மதிப்பீடும், ஆணிடம் உள்ள தாழ்வு மனப்பான்மையும், பெண்—மனைவி—ஆணைவிட (தன்னைவிட)ப் புகழ்பெற்றிடக்கூடாது என்ற அச்ச உணர்வும் இதற்கு அடிப்படைக் காரணங்களாகின்றன. 'எனக்கென்று ஒரு தனித்தன்மை இருக்கலாம்...தேடுவதில் தப்பில்லை. இந்த முயற்சிதான் வாழ்க்கையைச் சுவாரஸ்யமாக்குகிறது...ஒரு ஆணோட 'முகம்' சமூகத்திலே தனியாத் தெரியணுங்கிறதுக்காக 'இல்லத்தரசி'ங்கற பட்டத்தைச் சுமந்துகொண்டு பெண்கள் வாழ்க்கை பூரா வீட்டிலேயே அடைக்கப்பட்டு, முகம் தெரியாம சாகணுமா?'' என்று (இந்திரா பார்த்தசாரதி, **வெந்து தணிந்த காடுகள்**, பக். 58) விம்மி கூறுவதும், தாமோதரனிடம், ''என்னை எந்த விதத்திலே 'எக்ஸ்பிரஸ் பண்ணிக்கலாம்னு யோசிச்சு, பெயிண்ட் பண்ண ஆரம்பிச்சேன்'' (மேலது, பக். 67) என்று கூறுவதும் இதனை வலியுறுத்தும். அவள் ஓவியம் வரை பவள்; ஆர்வம் உள்ளவள் என்பதை அருண் (அவள் கணவன்) அறியாதவனாக உள்ளான். இதுபற்றி ராதிகா அவனிடம், ''இத்தனை வருஷமா கல்யாணமாகி ஒண்ணாக குடித்தனம் பண்றீங்க. அவ 'பெயிண்ட்' பண்றான்னுகூட உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்க, அவன் அதற்கு, ''இதெல்லாம் 'வேஸ்ட் ஆப் டைம்'ங்கிறதுதான் என் அபிப்பிராயம்'' (மேலது, பக். 107—108) என்கிறான். இப்படிப்பட்ட கணவனிடமிருந்து

கொண்டு தன் ஓவியக்கலை ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள முடியாது என்று விம்மி, அவனை விட்டுப் போய்விடுகிறான். அவள் ஓவியன் தாமோதரனுடன் தங்கியிருப்பதைக்கூட மிகவும் கொச்சைப்படுத்திக் காணும் அருணிடம் அவளுடைய தனித் திறமையைப் போற்றும் மனப்பாங்கு இல்லை. மாறாக அவளைத் தன் உடைமையாகக் கருதும் ஆதிக்க உணர்வுதான் உள்ளது.

'ஆத்துக்குப் போசணும்' நாவலில், ரமா எழுதிய மிதவை மரம் நாவலை நண்பர்கள் அனைவரும் பாராட்ட அவள் கணவன் துரை அதனைச் சகிக்கமாட்டாதவனாக இருக்கிறான். இதனைக் காயத்ரி உணர்கிறாள். 'படித்த இந்த துரைக்குள் அந்த குக்கிராமத்தின் குறுகலான போக்கு ஒளிந்து கொண்டிருக்கிறதோ?' என்று காயத்ரியின் எண்ண ஓட்டத்திலும், "காயத்ரி, நான் நாவலில் அந்த 'ராஜசேகரையும் பிரகாஷையும் சிருஷ்டித்த பிறகு எனக்கு கிருகச்சாரம் பிடித்துக் கொண்டது. அப்படி இரண்டு ஆண்களை எனக்குத் தெரியுமோ என்று விமர்சகர்களை மட்டுமல்ல, துரையையும் உள்ளூர அரிக்கிறது'' என்று ரமா கூறுவதும் இதனைக் காட்டும் (காவேரி. **ஆத்துக்குப் போசணும்**, பக். 102, 103). இதில், தன் மனைவி எழுதுவதையும் அதைப் பலரும் பாராட்டுவதையும் கணவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவளைப் பாராட்டி ஊக்கப்படுத்தாததுடன். அவள் எழுதும் நாவவில் படைத்துள்ள ஆண் பாத்திரங்கள் யாவும் அவளுக்குத் தெரிந்து—அவள் பழகியிருக்கக் கூடியவர்கள், என்று அவள் நடத்தை குறித்தே ஐயுறுகிறான். நம்முடைய சமூக அமைப்பில், ஆணாதிக்க மன நிலையின் வெளிப்பாடு இவை. இதனை "ஒரு ஆண் நாவலாசிரியர். நல்ல, சிறந்த ஏன் சில மறக்கமுடியாத பெண் பாத்திரங்களை அளிக்கலாம். இதை அவருடைய நுண்ணறிவு, நுழைபுலம், அது இதுவென்று பாராட்டைக் குவிப்பார்கள். பெண் நாவலாசிரியரானால் அவள் வெளியே அலைந்து அறுவடை செய்த உண்மைகள் என்பார்கள்'' (**ஆத்துக்குப் போசணும்**, பக். 100) என்று வரும் பகுதி இதனை வலியுறுத்தும்.

'ஓசைகள் அடங்கிய பிறகு' நாவலில் வரும் மீனா, 'சுந்தர காண்டம்' சீதா ஆகிய இருவரும் தம்முடைய தனித்தன்மை வெளிப்படுமாறு முறையே பள்ளியில் பணிபுரிந்தும், பெண்கள் பிரச்சினை பற்றி ஆராய்ச்சி செய்தும் வாழுகின்றனர். இவர்களுடைய தனித்தன்மை வெளிப்பாட்டிற்குத் திருமணவாழ்வு தடையாகும் போது, போராடி, பின்னர் தனித்து வாழ்ந்து

தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். 'சுழலில் மிதக்கும் தீபங்கள்' கிரிஜா, கணவனால் வீட்டைவிட்டு வெளியேற்றப் பட்டபின், தனித்திருந்து பெண் எழுச்சிக்காகச் செயற்பட்டு தன் திறமையை வெளிப்படுத்துகிறாள். 'சக்தி 81' நாவலில் சக்தி தன்னுடைய நண்பன், பத்திரிகை அலுவலக மேலதிகாரி ஆகிய வர்களுடன் இருந்தும், பின்னர் வெளிவந்தும் தனித்துவத்தை நிலைநாட்டுகிறாள். திலகவதியின் பிரம்மாஸ்திரம் கதையில், தன்னுடைய தனித் திறமையை—அலுவலகத்தில் கிடைக்கும் தகுதி அடிப்படையிலான பணி உயர்வை—அடைவதற்குத் தடை யாகக் கணவனே வரும் போது, ''உங்கள் படுக்கையறைப் பதுமையாக இருக்க மட்டுமே நான் படைக்கப்பட்டிருந்தா எனக்குத் தனியா மூளையும் சிந்தனை சக்தியும் இருக்க வேண்டிய தில்லை. என்னையும் என் பேரையும் காப்பாத்தறது உங்க ஒருத்தரோட வேலையா மட்டும் இருந்தா எனக்குத் தனியா கை, கால் எதுக்கு'' (**அரசிகள் அழுவதில்லை**, பக், 104) என்று கூறுவது தன்னுடைய தனித்தன்மையை வெளிப்படுத்துவதைக் காட்டும். சூடாமணியின் செந்திரு ஆகிவிட்டாள் கதையில், கிராமத்தில் பின்தங்கிய பெண்களுக்கு உதவும் சமூகப் பணியைச் செந்திரு செய்வதற்கு, அவள் கணவன் முழு ஆதரவும் தந்து, வீட்டில்' பணிகளைப் பகிர்ந்து உதவுகிறான். ''குடும்பத்தைச் சேராத மத்தவங்களுடனும் சமூகத்துடனும் அவள் ஒரு தனிப் பட்ட மனுஷியாய்த் தொடர்பு வச்சுக்கிறதில் என்ன தப்பு'' (**அம்மா**, பக்.88) என்று ஆதரவாகவும் பேசுகிறான். மனைவியின் தனித்துவத்தை—சமூகத்தில் பின்தங்கிய பிறருக்கு உதவும் தன் மனைவியின் சமூகப்பணி ஆர்வத்தை—முனை மழுங்கவிடாது செயலாற்றிடத் துணை நிற்கும் கணவனை இச்சிறுகதையும், ராஜம் கிருஷ்ணன் களம் சிறுகதையும் மட்டுமே காட்டுகின்றன.

மணமாகாத பெண்ணுக்கு இவ்வாறே தனித்திறமை இருப் பதைத் திருமணச் சந்தைக்குத் தகுதி குறைவாகக் கருது கின்றனர். 'கௌசல்யாவிடம் ஒரு தூய்மையான ஆய்வின் ஆற்றல் இருப்பதைக் குறித்துக் கொண்டார்கள். அவளுடைய அறிவுக் கூர்மையை, திறமையை வளர்த்தால், அவளுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலம் அமையும் என்றார்கள். தாத்தா பெருமையால் பூரித்துப் போனார். அம்மா கவலைப்பட்டாள். அப்பா தலையைச் சொறிந்துக் கொண்டு, துண்டை உதறிப் போட்டுக் கொண்டு வெளியே போனார்'' (லக்ஷ்மி கண்ணன், **ஓசைகள்**, பக். 124) என்று வரும் சிந்தனை ஓட்டம் இதனை வலியுறுத்தும். அடிப்படைச் சமூக அமைப்பில், பெண்ணுக்குச் சம உரிமை இன்மையும், ஆணாதிக்கப் போக்கும் பெண்ணைத் தன்

உடைமைப் பொருளாகப் பார்க்கும் ஆணின் முதன்மை மன நிலையுமே இதற்குக் காரணம். இப்படைப்புக்களில், தம் தனித் துவத்தைப் போற்றும் பெண்களையும், அவற்றிற்கு எதிராக அமையும் தடைகளையும் எதிர்த்து உரமுடன் போராடும் பெண் களையும் படைத்துள்ளனர். பொதுவாகச் சமூக மாற்றமும், தனிமனித மனமாற்றமுமே இதனைச் சாதிக்கும் என்று அழுத்த மாகக் காட்டுகின்றனர். அத்துடன், இப்படைப்புக்களின் வாசகர் களுக்கு விழிப்புணர்வையும், துணிச்சலாக எதிர்த்து நின்று போராடும் தன்மையையும் மீண்டும் மீண்டும் கூறுகின்றனர்.

## குடும்ப சமூக அமைப்புக்களில் சமத்துவம் போற்றல்

காலங்காலமாக நம்முடைய குடும்ப, சமூக அமைப்புக்களில் ஆண் முதன்மையானவனாகவும் தலைமை ஏற்பவனாகவும் உள்ளான்; பெண் சார்ந்த நிலையிலே உள்ளாள். கல்விகற்று, அலுவல் பார்ப்பது, குடும்பத்தின் பொருளாதாரத் தேவைக்கு, வசதியான வாழ்க்கைக்கு என்ற மனப்பாங்குதான் செயற்படு கிறது. கல்வி கற்பது, ஆணைப் போலப் பெண்ணுக்கும் அடிப்படை உரிமை என்றோ, அவளுடைய ஆளுமையை வளர்க்க உதவும் என்றோ எண்ண மறுக்கின்றனர். அதே போல, பெண்ணின் பொருளீட்டும் பாங்கும், அவளுடைய விருப்பத்திற் காக இல்லாமல், பெற்றோருக்கே உரியது என்றாகிறது. அலுவல் பார்க்க வெளியே செல்வதால், வீட்டிலும் வெளியிலுமாக இரட்டைச் சுரண்டலுக்கு ஆளாகிறாள். ஓய்வு எடுப்பது என்பது கூட அலுவல் மகளிருக்கு அவள் விருப்பத்தின்படி முன் வைக்கப் படுவதில்லை. இத்தகைய பின்னணியில் குடும்ப, சமூக அமைப்புக் களில் பெண்ணுடைய சமத்துவம் குறித்துப் படைப்பாளர்களின் சிந்தனை தீவிரமாகவும் செயல் வேகத்துடனும் எண்பதுகளில் வெளிப்பட்டுள்ளன. பொட்டுக்கட்டி வாழும் குலத்தில் பிறந்து விட்ட காரணத்திற்காக மணவாழ்வு மறுக்கப்படும் சமூகக் கொடுமையை எதிர்த்து, மணம் செய்து வாழும் மதுராம்பாள். சமூக அமைப்பில் சமத்துவத்துக்காக வாழ்க்கை முழுவதும் போராடுகிறாள். இதனை ராஜம் கிருஷ்ணனின் மானுடத்தின் மகரந்தங்கள் விரிவாகப் பேசுகிறது. 'எல்லைகளின் விளிம்பில்' மாலு, 'சுழலில் மிதக்கும் தீபங்கள்', கிரிஜா, 'ஓசைகள் அடங்கிய பிறகு', மீனா, 'ஆத்துக்குப் போகணும்', காயத்ரி, ரமா, 'வெந்து தணிந்த காடுகள்', விம்மி, 'ஆண்களோடு பெண்களும்', சாரு, 'ஊமை அரண்கள்' வசு ஆகியோரும் 'டென்ஷன்' சிறுகதை பார்க்கவியும் வெளிப்படுத்துவதாகப் படைத்துள்ளனர். சமத் துவத்தை அல்லது சுதந்திர உணர்வை உடைய இப்பெண்கள்,

தன் வீட்டிலும், சமூகத்திலும் இதனை ஏற்காமல் எதிர்க்கும் போது துணிவுடன் நிமிர்ந்து நிற்கின்றனர். மரபு வழியில் பெண் என்பவள் சார்ந்து நின்று பிறருடைய (ஆணினுடைய) தீர்மானங் களை அப்படியே கொண்டு செலுத்துபவர்கள் என்று கற்பிக்கப் பட்டு வரும் போதனைகளை மறுத்து, சரிநிகர் சமானமாக இவர்கள் செயற்படுகின்றனர். இவ்வாறு பெண்களைப் படைத் துள்ள பாங்கு தமிழ்ப் புனைகதை வரலாற்றில் முன் எப்பொழு தையும்விட எண்பதுகளில் பரவலாகவும், தீவிரமாகவும் காணப் படுகின்றது. அடங்கி, ஒடுங்கி சரிசெய்து கொண்டு துன்பங் களைக் கண்டும் காணாமலும் போகப் பழகிக் கொள்வதையே வலியுறுத்தி வந்த படைப்புக்களின் போக்கிலிருந்து இவை மாறு பட்டுள்ளன.

ஆண் எப்படியும் இருக்கலாம்; எங்கும் சுற்றித் திரியலாம். ஆனால், பெண் வீட்டிற்குள்ளேயே அடங்கியிருக்கவும் மறு பேச்சின்றிக் கணவனின் முடிவுகளைச் செயற்படுத்தவும் வேண்டும் என்ற மரபு வழியாக வரும் ஆணாதிக்கச் சட்ட திட்டங்களை, கட்டுப்பாடுகளை எதிர்க்கும் பெண்களாக இவர்கள் படைக்கப்பட்டுள்ளனர். தவறு இல்லாமல் இருப்பினும் பெண் தவறு செய்தவளாகப் பழிக்கப்பட்டு, தண்டனையும் அனுபவிக்கிறாள். இத்தகைய அநீதியையும் அடக்கு முறையையும் எதிர்ப்பதாக இப்படைப்புகள் காட்டுகின்றன. 'பொருளாதாரப் பாதுகாப்பு தருகிறான் என்ற ஒரே காரணத்திற்காகக் கணவனின் செயல்களைப் பற்றிக் கேட்க மனைவிக்கு உரிமையில்லை; இல்லற தருமத்தில் அனைத்து உயர்ந்த பண்புகளும் மனைவிக்கு மட்டுமே. கணவன் எப்படி வேண்டுமானாலும் மனிதனாகச் செய்ற்படலாம்; தெய்வம் என்ற முத்திரை குத்தி, சுலபமாகப் பெண்ணை அடைத்துவிட சமூகம் தயாராக உள்ளது. ''பொம்ம னாட்டிகளுக்கு வேறே என்ன வேணும்? பணம், செல்வாக்கு இல்லாட்டா ஆள் பர்ஸனாலிட்டியா இருக்கணும். இது மூணும் எங்கிட்டே இருக்குன்னு நிச்சயமா எனக்குத் தெரியும்... பெண்கள் இப்படிச் சுலபமா கிடைக்கிற போது, பெண்கள் கிட்டே எனக்கு மதிப்பு இருக்கும்னு எதிர்பார்க்கறியா?'' (**வெந்து தணிந்த காடுகள்**, பக். 100-101) என்று தன் மனைவி யிடம் வாதிடும் அருண், பெண்ணைப் பற்றி இத்தகைய—பிற் போக்கான—கருத்துக்களை வைத்திருக்கிறான். உயர் மத்தியதர வாழ்க்கைப் பின்னணியில், பெரிய அலுவலக மேலதிகாரி என்ற நிலையில் அவன் பொது இடங்களில் குடிப்பதும், பெண்களுடன் பழகுவதும் நாகரிகத்தின் அளவுகோல் என்று நம்புகிறான். ஆனால், தன் மனைவி வெளிப்படையாக, ''அவருடைய

பெயின்டிங்ஸை பார்க்கப் போனேன்.. நேத்திக்கு முதல் தடவையா விஸ்கி குடிச்சேன்'' என்று சொன்னதும் அதிர்ச்சி அடைகிறான். அவனுடைய இந்த அதிர்ச்சியுற்ற—மனநிலையைப் புரிந்து கொண்டு ''இது உங்களுக்கு இவ்வளவு அதிர்ச்சியா இருந்தா, நீங்களும் எத்தனையோ விருந்துகள்லே கலந்துக்கிறீங் களே, அது எனக்கு எவ்வளவு அதிர்ச்சியா இருக்கணும்? ஆனா எனக்கு அப்படியில்லே... ஏன்னா நீங்க பெரிய தப்புக் காரியம் பண்ணிட்டதா நான் நினைச்சதே இல்லே..'' (**வெந்து தணிந்த காடுகள்**, பக். 103) என்று கூறுகிறாள். அறம் சார்ந்த பழைய மதிப்புக்களைத் தன் மனைவியிடம் எதிர்பார்க்கும் கணவன். தான் தவறுகள் செய்த போதும் அவற்றைப் பொருட்படுத்தாமல் கேள்வி கேட்காமல் தன் மனைவி இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறான். குடும்ப அமைப்பில், பெண்ணுக்குச் சம உரிமை இல்லாத ஆணாதிக்கப் போக்கை இது காட்டும்.

'ஓசைகள் அடங்கிய பிறகு' நாவலில் மீனா தன் கணவன் சாரங்கனின் அனுமதியின்றி, தான் பணியாற்றும் தனியார் பள்ளியில் மகப்பேறு விடுப்பு கிடைக்காது என்ற காரணத்தால் கருவைக் கலைத்து விடுகிறாள். ''ஒரு பொண்ணுக்கு ஒரு குழந்தையைப் பெத்துக்கிறதுக்கும் பெறாம தள்ளிப் போடுற துக்கும் சுதந்தரம் உரிமை இல்லையா! நீங்க சொல்றீங்க. எனக்கு படிச்சி வேலை செய்து சுயமா இருக்கணும்னு விருப்பம் இருக்கு. நாம ஒரு நிலையாக வாழ்க்கையில் காலூனிய பிறகு குடும்பத்தைப் பெருக்கிக் கொண்டால்...'' (**ஓசைகள் அடங்கிய பிறகு**, பக்.241) என்று வாதிடுகிறாள். குடும்ப அமைப்பில், எதிர் கால நன்மையைக் கருதி மகப்பேற்றைத் தள்ளிப் போடும் உரிமையைத் தாய்க்குரியதாகக் கருதி செயற்பட்ட அவளைத் கணவன் ஏசுகிறான். பொட்டுக்கட்டி வாழும் குலத்தில் பிறந்து, சமூக அமைப்பிற்கு எதிராக, முறையான குடும்ப வாழ்க்கை வாழும் மதுராம்பாள், ''பொண்ணாகப் பிறந்தவ என்னிக்கும் கட்டை உடைச்சிட்டுப் போகக் கூடாதுன்னு அறுதியாக்கி யிருக்கா. அதுக்குக் காரணம் அவ உடம்புன்னு அதையே வலுவாக்கி அதனாலேயே அவளைச் சபலப்படுத்துறவளாகவும், பலமில்லாதவளாகவும், இன்னும் என்னென்ன வகையி லெல்லாமோ தடைப்படுத்தியிருக்கா. இதெல்லாம் உங்களைப் போல இருக்கிறவா புரிஞ்சிண்டு புத்திய வச்சிண்டு வாழ வந்தது சிலாக்கியம்தான். யாரையும் யாரும் மேலேறி அதிகாரம் பண்ற நினைப்பு இருக்கக்கூடாது'' (**மானுடத்தின் மகரந்தங்கள்**, பக். 186) என்று கூறுவது சமூக அமைப்பில் சமத்துவம் போற்றும் பாங்கைப் புலப்படுத்தும்.

இரண்டு நாட்கள் குடும்பத்தை விட்டு ஒரு மாறுதலுக்காக ஹரித்துவார் சென்று வந்த மனைவி கிரிஜாவை 'நெறி கெட்டவள்' என்று கூறி வீட்டில் சேர்க்க மறுக்கிறான் கணவன். 'கிரிஜாவினால் இனியும் இந்த வீட்டில் எப்படி இருக்க முடியும்? நாற்பத்தாறு வயசு. மூன்று குழந்தைகளுக்குத் தாய். இவள் குடும்பத்தைவிட்டுப் போனால், உடல் பரமான மாசுக்களை வீசுவதுதான் நியாயமா? அந்த மாசு ஆணுக்குக் கிடையாது? இல்லை? ஒரு மனிதப் பிறவியான பெண்ணை, இயந்திரத்தையும் விட மோசமாக நடத்த ஓர் ஆணுக்கும் அவனை சார்ந்தவர் களுக்கும் உரிமை வழங்கும் ஓர் அமைப்புத்தான் குடும்பம். இந்த மையமான அதிகார உரிமைக் குவியலை மாற்றமாட்டோம் என்றால், அவள் வெளியேறித்தான் அதைச் சீராக்க முனைய வேண்டும்' என்று (**சுழலில் மிதக்கும் தீபங்கள்**, பக். 102-103) கிரிஜாவின் எண்ண ஓட்டத்தில் காட்டும் சிந்தனை அறியத் தக்கது. குடும்ப நிறுவனத்தில் பெண்ணுக்குச் சம உரிமையும் இணையாகச் செயற்படும் பாங்கும் முடிவெடுத்துச் செயலாற்றும் உரிமையும் இக்கதை மாந்தர் மூலம் வலியுறுத்தப்படுகின்றன. சம உரிமை வேண்டிக் கணவனைப் பணிந்து நிற்பதாகவோ, அவன் தர இவளும் உரிமையைப் பெறுவதாகவோ படைக்கப் படவில்லை. உரிமை உணர்ச்சி இயல்பாகப் பெண்ணுள் பொங்கி வர, அதை எதிர்க்கும்—மதிக்க—மறுக்கும்—கணவனை எதிர்த்து உரமுடன் போராடும் துணிவுள்ள பெண்களாக இவர்கள் படைக்கப்பட்டிருப்பது நடப்பியல் நெறிமிக்க போக்காகும். இப் பெண்கள், கல்வி கற்ற, சுய சிந்தனைமிக்க தனித்துவம் போற்றும் பெண்கள்.

## இழிவுபடுத்தலை எதிர்த்தல்

பத்திரிகை, திரைப்படம் போன்றவைப் பெண்களை வெறும் கவர்ச்சிப் பதுமைகளாகவும் இன்பநுகர்வுப் பொருளாகவும், தவறான பிம்பங்களாகக் காட்டுவதைப் பெண்கள் எதிர்க் கின்றனர். இந்த ஆரோக்கியமான போக்கை இக்காலப் புனை கதைகள் அழுத்தமாகக் காட்டுகின்றன. பெண்ணிய இலக்கியக் கோட்பாட்டில், பெண்ணைத் தவறான பிம்பங்களாகக் காட்டி ஆணுக்குரிய போகப் பொருளாகக் காட்டும் போக்கை—இழிவு படுத்தலை—எதிர்ப்பதும் ஒன்றாகும். பத்திரிகைகளில் பெண்கள் காட்டப்படும் நிலை, இதழ்களின் அட்டைப்படங்களில் இடம் பெறுவதன் மூலம் விளம்பரமும் பணமும் ஒரு சேரக் கிட்டு கின்றன என்பதால் பெண்கள் பலர் அதை விரும்பும் போக்கு, பெண்ணை போகப் பொருளாகச் சித்திரிக்கும் மலினமான—

கொச்சையான கதைகளைப் பெண் பெயரில் உற்பத்தி செய்யும் இதழ்களின் நிலை, இத்தகைய இதழ்களையும் திரைப்படங் களையும் படித்தும் பார்த்தும் தம் வாழ்வை நாசப்படுத்திக் கொள்ளும் போக்கு ஆகியவை இக்காலப் புனைகதைகளில் காட்டப்படுகின்றன. இத்தகைய இழிவுபடுத்தும் போக்கை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற விழிப்புணர்வும் இக் கதை களின் வழி அழுத்தமாகக் காட்டப்படுகின்றது.

மிகவும் மோசமாகப் பெண்ணைப் போகப் பொருளாகச் சித்திரித்து பெண் பெயரில் ஆண் கதை எழுதும் நபும்சக எழுத்துப் பணி நடைபெறுவதைச் சுந்தரகாண்டம் காட்டுகிறது. ''சீதா மாதிரி ஒரு இளம்பெண் எழுதறதா உங்களையே (வாசகர் களையே) நம்ப வைக்கிறது ஒரு கலையில்லையோ...? குமாரி சுந்தரிங்கறதுஒரு தலை நரைச்ச பிராமணன்...சாட்சாத் சர்மாங் கிற நான்தான்'' என்று சுந்தரி ஆசிரியர் கூறுகிறார். 'அதுதான் ஜர்னலிசத்தின் வெற்றி' என்கிறார். **சுந்தரகாண்டம்**, பக் 19) ஆபாசமான முறையில் பெண்ணை வருணிக்கும் படைப்புக் களைப் பெண் எழுதுகிறாள் என்றால் வாசகர் விரும்பிப் படிப்பர் என்று படிக்கும் வாசகர் சமூக உளவியலைக் கொச்சைப்படுத்தி யுள்ள பத்திரிகை உலக ஆணாதிக்க நிலையை இது காட்டுகிறது. 'ஓசைகள் அடங்கிய பிறகு' நாவலில் பத்திரிகையில் அட்டைப் படத்தில் தம் படம் வரவேண்டும் என்று பெண்களே ஆசைப் படும் நிலையை இது காட்டுகிறது. ''மீனா நீ ரொம்ப லக்கிடீ. எங்க சுமிக்குத்தான் இப்படி அட்டைப்பட அழகியாகணும்னு ஆசை. அதுக்காகப் போட்டி வச்சாங்களே, அதுக்குக் கூட எழுதி விட்டா'' எனவும் ''அட்டைப் படத்திலே வரணும்னு ஒவ்வொரு பெரிய வீட்டுப் பெண்ணுங்களும் என்னென்னமோ முயற்சி பண்ணுங்க...'' எனவும் காட்டப்படுகிறது. (**ஓசைகள் அடங்கிய பிறகு**, பக். 90, 78-79). தன் படத்தைப் பத்திரிகைப் புகைப் படக்காரன் மிகவும் ஆபாசமாகப் போட்டிருப்பதை— 'மார்புச் சேலை நழுவி விழட்டுமா வேண்டாமா என்று கேட்கும் நிலையில் அவளுடைய பெண்மை வளைவுகளை நன்றாகப் பார்ப்போர் கண்களைக் கவரும்படி காட்டுகிறது' (மேலது, பக். 94). பத்திரிகையில் இவ்வாறு படம் வந்ததை அவள் அவமானமாக எண்ணுகிறாள்.

பத்திரிகைகளும் திரைப்படமும் பெண்களைப் போகப் பொருளாகக் காட்டுவதையும் அத்தகு பாதிப்பால் ஈர்க்கப்பட்டுச் சின்னஞ்சிறு பெண்கள்கூட திரைப்பட ஆசையில் வீட்டைவிட்டு ஓடி மாயச்சூழலில் சிக்கிச் சீரழிவதையும் 'மானுடத்தின் மகரந்

தங்கள்' நாவல் காட்டுகிறது. ''இந்த சினிமா, கண்ட பத்திரிகைகள், போஸ்டர்கள் இதெல்லாம்தான் இன்னிக்கு இவளைப் போல் பெண்ணுங்களைப் புடிச்சிப் பேயாட்டம் ஆட்டறது'' (**மானுடத்தின் மகரந்தங்கள்**, பக்.141) என்று வரும் உரையாடல் இதை எடுத்துக் காட்டும் இப்போக்கை-பத்திரிகை, திரைப்படம் பெண்ணை இழிவுபடுத்தலை—எதிர்த்துப் போராட வேண்டும் எனவும் இந்தநாவலில் காட்டப்படுகிறது ''பத்திரிகை சினிமா, தொலைக்காட்சி அந்தச்சுவர் இந்தச்சுவர், முச்சந்தி, நாற்சந்தி, அண்ணாந்து பார்த்தா தலைசுத்தும் உசரத்திலே அரங்கத்தில், கொட்டகையில் கதையில், கற்பனையில், துச்சாதனன், துரியோதனன் வமிசங்கள் மொய்க்குதப்பா...நாகரீக ஓட்டலிலும், நாலந்தரச் சந்தியிலும் புடவையுரிச்சுப் போட்டு ஆடவைச்சுக் காட்டுகிறான்' என்று உள்ள நிலைகாட்டி 'இந்த அவலநிலைக்கு எதிராக ஓராயிரம் பாஞ்சாலிகள் அணிதிரண்டு புறப்படுவோம் என்று ஆக்ரோஷமான எழுச்சியுடன்...பெண்கள் கூடி இதனை எதிர்க்க வேண்டும்' என்று ராஜம்கிருஷ்ணன் காட்டுகிறார் (**மானுடத்தின் மகரந்தங்கள்**, பக். 266).

பாலுறவு வன்முறைக்கு ஆளான பாதிக்கப்பட்ட பெண்களைப் பற்றி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு விற்பனைக்காகப் பரபரப்பாக ஆக்குகிறதே அல்லாமல், ஆக்கபூர்வமான சிந்தனைகளை மக்களிடையில் பரப்புவதில்லை.இந்துமதியின் 'பைசா நகரத்துக்குக் கோபுரங்கள்' நாவலில் இத்தகைய சமூகப்போக்குக் காட்டப்படுகிறது. ''ஒரு பெண் அநியாயமா கெடுக்கப்பட்டதை பக்கம் பக்கமா போட்டா போட்டு எழுதறாங்களே—இதே இவங்க வீட்டுப் பொண்ணுங்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டுருந்தா இப்படிச் செய்திருப்பாங்களா? விஷயத்தை எழுதறாங்களே—அதுக்கப்புறம் அந்தப் பெண்ணோட கதி என்ன? அவள் என்ன செய்வான்னு யாராவது நினைச்சுப் பார்க்கறாங்களா?'' என்று வரும் சௌதாமினியின் பேச்சு (**பைசா நகரத்துக் கோபுரங்கள்**, பக்.123—124) இதனைப் புலப்படுத்தும். பெருவாரியான மக்களைச் சென்றடையும் செய்தித்தாள் சௌதாமினியின் படத்தைப்போட்டு வெளியிட்டுப் பரபரப்பான விற்பனை தந்திரத்தில் அவளை இன்னும் குரூரமாகச் சிதைத்தது (பக். 74,71). 'இந்தப் போக்கைக் கண்டிக்க, சட்டம், நீதி ஏதாவது வழி காட்டுதா?' (பக். 124) என்றும் அவள் குமுறுகிறாள். நம் சமூக அமைப்பில் உள்ள ஆணாதிக்கப் போக்கும் பெண்ணைத் தன்உடைமைப் பொருளாகப் பார்க்கும் மனநிலையும் பெண்ணை அவள் உடலை வைத்துப் போகப் பொருளாகத் தன் இச்சைக்கு ஆட்படுத்தும் பாலுறவு சார்ந்த

மன எக்களிப்பும், பெண்ணுக்கு மட்டும் கூறப்படும் கற்புநெறியும் இந்தப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணங்களாகின்றன. பத்திரிகைகளும் தம் வாசகர்களிடம் இவற்றைப் பரப்பி, விற்பனை ஆக்குகின்றனவே தவிர, ஆக்கப்பூர்வமான விழிப்புணர் வைத் தரும் செய்திகளைப் பரப்புவதில்லை.

பெண்களை இவ்வாறு இழிவுபடுத்தும் போக்கை எதிர்த்துப் பெண்ணுரிமை இயக்கம் ஆக்கபூர்வமான செயல்களை ஆற்று வதைச் **சக்தி 81** நாவல் காட்டுகிறது. பெண்களின் தன் மானத்தைக் குறைக்கிற எந்தவகையான போஸ்டர்களையோ, கதைகளையோ சினிமாப்படங்களையோ வெளியிடக்கூடாது என்ற வேண்டுகோளைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புதல்; மீறி அவர்கள் வெளியிடுவார்களேயானால் அவைகளைத் தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை ஏந்தி அமைதி ஊர்வல மாகக் கோட்டை சென்று முதல்வரைச் சந்தித்து முப்பது நிமிடங்கள் விவாதித்து அந்தக் கோரிக்கையையும் கொடுத்து விட்டு வந்தாள் சக்தி' (**சக்தி 81**, பக். 185—186). அம்பையின் கறுப்புக்குதிரை சதுக்கம் சிறுகதையிலும் இதுபோன்று செயற் பாட்டுத் திறனுடன் இச்சிந்தனை முன்வைக்கப்படுகிறது. இழிவு படுத்தலை எதிர்த்துப் பெண்கள் விழிப்புணர்வு பெற்று, போராட வேண்டும் என்ற ஆக்கப்பூர்வமான வழிகளை இப் படைப்பாளர்கள் முன்வைக்கின்றனர்.

### சமய, பண்பாட்டு நடைமுறைகளில் சமமின்மையை எதிர்த்தல்

சமய நிறுவன நடவடிக்கைகள், சடங்குகள், பண்பாட்டு நடைமுறைகள் ஆகிய அனைத்திலும் ஆண்களின் ஆதிக்கமும் பெண்ணை அடிமைப்படுத்தும் போக்கும் காணப்படுகின்றன. இவற்றுக்கு எதிரான கருத்தாக்கங்களை இக்கால நாவல்கள் முன்வைக்கின்றன. அத்துடன், பெண் அடிமைப்படுத்தப்படும் இழிநிலைகளை இந்நாவலில் பெண்கள் எதிர்க்கின்றனர். வயதான முந்தைய தலைமுறைப் பெண்கள், தன்னலநோக்கில் தங்களுக்குச் சாதகமாக இருப்பதால் இதனை ஏற்று ஒத்துப் போகும் பெண்கள் ஆகியோருக்கு முதலில் விழிப்புணர்வு ஏற் படுத்த வேண்டும் என்பதை இப்படைப்பாளர்கள் வற்புறுத்து கின்றனர். அத்துடன், ஆணாதிக்கப் போக்குகளை எதிர்த்து நிற்கின்றனர்.

ராஜம் கிருஷ்ணனின் மானுடத்தின் மகரந்தங்கள், நாவலில் கணிகையர் குலத்தில் பிறந்த மதுரம் தன்குல வழக்கத்திற்கு மாறாக மணமுடித்துக் கணவனுடன் குடும்பம் நடத்துகிறாள்.

அந்த ஊருக்குச் சங்கராச்சாரியார் சுவாமிகள் மடத்தில் தங்கி இருக்க வருகையில், மதுரம் மாம்பழக் கட்டுப் புடவையுடன் (பட்டையான கொசுவங்களைத் திரட்டி உருட்டி உள்மடிப்பில் வைத்து மாம்பழம் போல் அடக்கும் முறை-இது அந்தணர் வீட்டுப் பெண் புடவை கட்டும் முறையன்று; கணிகையர் வீட்டுப் பெண்கள் கட்டும் முறை) வீட்டு வாசல் திண்ணையில் நிற்க, அவள் கணவன் பஞ்சக்கச்சம் வைத்து வேட்டி கட்டிப் பூரணகும்பத்துடன் வரவேற்கிறான். "வக்கீல் சார் கேட்கி றார். ஏண்டா சொல்லல? சாமிநாதன் அகமுடையாள் மாம்பழ கட்டும்தானுமா நிக்கிறா. அநாசாரங்கறார். இப்ப பாவ மாயிட்டது. சுவாமிகள் பிச்சை (உணவு) எடுக்காம மூணுநாள் நிராஹாரமாக இருக்கறதுன்னா பாவம் ஆரைச்சாரும்?உம்மைச் சொல்லி குத்தமில்லை! தெருவில் விட்டு வச்சது தப்பு" என்று வெங்கு வெடித்தான்." (**மானுடத்தின் மகரந்தங்கள்** பக். 136) என்று வருகிறது.

மதுரத்தின் புடவை உடுத்தும்முறை அவளைக் கணிலகயர் குலம் என்று காட்டிக்கொடுக்கிறது. மடத்துத் துறவியான சங்கராச்சாரியார் முன் அனைத்து இனமக்களும்-ஆண்-பெண் அடங்கலும் சமமாக நடத்தப்படவேண்டும். மாறாக கணிகை யர் குலத்துப்பெண் (அப்படி ஒருகுலம் உருவாக ஆண்களின் ஆதிக்கமும் பெண்ணை இன்ப நுகர்வுப்பொருளாகக் காணும் மனநிலையுமே காரணம்) வந்து நின்று வரவேற்றாள் (தன் வீட்டின் தூண் மறைவில் திண்ணையில் நின்றாள்) என்பது பெருங்குற்றமாக, பாவமாகக் கருதப்படுவதும் அதற்காக அவர் மூன்று நாட்கள் உணவு உண்ணாமல் இருப்பார் என்பதும் பெண்ணை இழிவுபடுத்தும் ஆணாதிக்கச் சட்டங்களாகும். மனத் தூய்மையும் உண்மையான அன்பும் மட்டுமே இறைவனிடம் கொள்ளும் பக்திக்கு வேண்டியவை என்று பேசப்படும் சமயத்தில், நிறுவனசமயமாகி, மடத் துறவிகளாக வந்த ஆண், இவ்வாறு பெண்ணை அவள் குலம் காரணமாக அவள் ஆளுமையைச் சிதைப்பது மிகப்பெரும் இழிவாகும்.

'சுழலில் மிதக்கும் தீபங்கள்' நாவலில் பணமும் சமூகத் தகுதியுமுடைய உயர்மத்தியதர வகுப்பைச் சார்ந்த ஒரு அந்தணப் பெண் (ரோஜா மாமி) ஹரித்துவாரில் துறவிக்குப் பாதபூசை செய்து பிட்சை செய்திட அவரும் அதை மனப்பூர்வ மாக ஏற்கிறார். அந்தப்பெண், அவள் கணவர் இருவரும் சட்டத்திற்குப் புறம்பாக, தவறான வழியில் பொருள் சேர்த்து அரசை ஏமாற்றி, சமூகத்தில் 'பெரிய மனிதர்' வேடமிட்டு வாழ்

வதால், துறவி இவர்களின் பூசை வழிபாட்டை ஏற்பதையே கிரிஜா ஏற்க மறுக்கிறாள். பொருளாதாரத்தில் உயர்ந்தவரிடம் காட்டும் அன்பை, பரிவை—ஏழை, எளிய மக்களிடம்—பெண்களிடம் துறவிகள் காட்டாததைக் கிரிஜா எதிர்க்கிறாள். விதவையான பெண்ணைத் தலையை மொட்டையடித்து (அவள் விருப்பத்திற்கு மாறாக) அலங்கோலஞ்செய்து பார்க்கும் சமூக வழக்கம் இன்று மிகவும் குறைந்து அருகிவிட்டது. ஆனால், அப்படிச் செய்தால்தான் மடத்திலுள்ள துறவி (ஆசாரிய சுவாமி) யைத் தரிசனம் செய்யவும் அவரிடம் தீர்த்தம் பெறவும் பெண்கள் வரலாம்—வரமுடியும் என்பது இன்றும் உள்ளகட்டுப்பாடாகும்.

இந்து சமய நிறுவன அமைப்பில் ஆணாதிக்கம், பெண்ணைச் சார்புநிலையில் வைத்து போகப்பொருளாகப் பார்க்கும் பாங்கு ஆகியவை மேலாதிக்கஞ் செய்கின்றன. முதற்கட்டமாக இவ்வாறு பெண்ணினத்தை அடிமைப்படுத்தும் ஆணாதிக்கப் போக்கை எதிர்க்கும் துணிவும் விழிப்புணர்வும் பெண்களிடம் வரவேண்டும். இத்தகைய ஆணாதிக்கப் போக்கை எதிர்க்கவேண்டும் என்று இப் படைப்பாளர்கள் வலியுறுத்துகின்றனர். ராஜம்கிருஷ்ணனின் 'விடுதலை' சிறுகதையில் இது காட்டப்படுகிறது: ''ஒரு கோலமுமில்லை...இங்கே **பெரியவர்** (ஆசார்ய சுவாமி) வந்து ஊரெல்லாம் அமர்க்களப்படறது. எத்தனை நாள்தான் பாவியாக இருக்க...? சாம்பு சொன்னான். அவம்மாவும் திருவையாத்துக்குப் போய் தான் தொலைச்சிண்டு முறமுறக்க வந்தாளாம். இப்ப பெரியவர் கூடவே போறா... கிட்டப்போய் தீர்த்தம் வாங்கிண்டேன், இந்த ஜன்மத்துக்கு வேறே என்ன வேணும்? நீ இருந்தா எனக்கும் கூச்சமாயிருக்கும். ஒத்துக்கமாட்டே.... என்று வரும் அத்தையின் கூற்றும் அதனால் அதிர்ந்து போய் 'அவளுடைய ஒவ்வொரு அணுவும் பொங்கிப் பொரிகிறது' என்று அவளுடைய பாதிப்பும் காட்டப்படுகிறது. (**களம்**, பக். 112) கணவனை இழந்ததால், வலுக்கட்டாயமாகப் புறக்கோலம், ஒப்பனைச் சிதைவு என்பவை பெண் மீது அவள் விருப்பத்திற்கு மாறாக, சமய நிறுவனத்தில், துறவியிடம் சென்று தீர்த்தம் வாங்கும் சமூகத் தகுதிக்காகத் திணிக்கப்படுகிறது. இதனை எதிர்க்கவேண்டும் என்ற கருத்து இங்கு முன்வைக்கப்படுகிறது.

பெண்ணுக்கு மணமாகவில்லை; விரைவில் மணமாக வேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் சடங்கு பூர்வமான வழிபாடு என்பதில் மூடநம்பிக்கை சார்ந்த மரபு வழிச் சிந்தனை தான் உள்ளது. பெண்ணின் சுயசிந்தனை, ஆளுமை மலர்ச்சி—

அதில் முடக்கப்படுகிறது. 'துர்க்கைக்கு ராகுகால அர்ச்சனை பண்றேன். ஆடிமாசம் வெள்ளிக்கிழமையில் நீ வந்து ஒரு வெள்ளியிலானும் எலுமிச்சம்பழ விளக்கேற்றிவை. **சுவாமிகளே சொல்லியிருக்கிறார்**, வர தைக்குள் கலியாணம் ஆகும்னு...' அந்தச் சூழலில், அந்தப் பராமரிப்பில், அந்த நம்பிக்கை போஷாக்கில் இவளுக்கு அறிவு பூர்வமான சிந்தனை எப்படி உதிக்கும்?' (**சுழலில் மிதக்கும் தீபங்கள்**, பக். 38) என்ற வரிகள் இதனை வலுப்படுத்தும். மணவாழ்க்கைக்காகவே பெண் படைக்கப் பட்டுள்ளாள் எனவும் அது தாமதமானால், நிறைவேறுவதற் காகச் சுவாமிகள் வழி சொல்லியுள்ளார் எனவும் அதை மறு பேச்சின்றி, அப்படியே பின்பற்ற வேண்டும் எனவும், பண்பாட்டு அடிப்படையில் தாய் மகளிடம் போதிக்கிறாள்.

உள்ளும் புறமுமான மனிதநேயத்தை விரட்டிவிட்டு, வெறும் போலியாகச் சடங்குகள், சமயம், பண்பாடு இவற்றின் பெயரால் பெண்களின் மீது திணிக்கப்படுவதையும், அவற்றை மறு பேச்சின்றிப் பெண்களே ஏற்றுச் செயற்படுத்துவதையும், நாம் அன்றாடம் காண்கிறோம். இதனை 'மாமியார், அவளும் ஒரு பெண். இந்த மடிக்கூடு வெறும் அர்த்தமற்ற போலிச் சடங்கு' என்னும் கிரிஜாவின் எண்ண ஓட்டத்திலும் (**சுழலில் மிதக்கும் தீபங்கள்**, பக். 88), ''என் நியமம், பூஜை விட்டுவிட முடியுமா? ஒரு வெள்ளி, செவ்வாய், மலைக்கோயிலுக்குப் போய்வந்தா என்ன? நீ பண்ணிக்காட்டினால் தானே குழந்தைகளுக்கு வரும்? அதுகளை வச்சிட்டே, பாட்டிமடி, ஆசாரக் குடுக்கைன்னா அதுகளுக்கு மதிப்பு வருமா?'' (மேலது பக்.100) என்று வரும் உரையாடலிலும் இது வெளிப்படுத்தப்படுகிறது.

'தேவி வந்தாள்' என்னும் சிறுகதையில், நிறுவப் பெறுவதற்கு ஆயத்தமான ராஜராஜேஸ்வரி சிலையைத் தன்னிடம் கேட்காமல், கோவில் அதிகாரிகள் தாமாகவே ஆவன செய்த தால், சிலையை நிறுவுவதற்கு மடத்தின் ஆசாரிய சுவாமிகள் ஒப்புதல் அளிக்கவில்லை. இதனை, ''என்ன பெரியவரோ இப்படி முயலுக்கு மூன்றே கால் என்று மொண்டுத்தனம் பண்ண றார்'' என்று வரும் கௌசல்யாவின் கூற்றிலும், ''பெரியவர் உத்தரவு தருகிறாரோ இல்லையோ, ஏதோ ஒன்று உந்த அவளே குமுறி எழுந்து வருவாள். இராஜராஜேஸ்வரிக்குக் கோபம் மீறினால் காளியாக மாறிடுவாள்.காளி ஸ்வரூபத்தில், எல்லோருடைய குடலையும் சுருட்டும்படி கூச்சலிட்டு, துவம்சம் பண்ணத் தொடங்குவாள். பிறகு ஆக்ரோஷம் தலைவிரித்தாடும்'' (**ஓசைகள்**, பக். 118, 125) என்று வரும் அவளின் எண்ண

ஒட்டத்திலும் காட்டப்படுகிறது. இங்கும் அம்மன் சிலையை நிறுவுவதில் காலதாமதம் ஆவதற்குத் துறவியின் தன் முனைப்பும் தான் முடிவு செய்ய, மற்றவர் கேட்க வேண்டும் என்ற ஆதிக்க மனநிலையுமே காரணமாகின்றன. ஆனால் இப்படிப்பட்ட சிந்தனையைக் கௌசல்யா போன்ற பெண் கூறுவதைப் பிற பெண்களும் மரபுவழி வந்த ஆண்களும் ஏற்க மறுக்கின்றனர். 'நீண்ட காலமாக, அமைதி வடிவமான ராஜராஜேஸ்வரி அடைத்து வைக்கப்பட்டால், அவள் காளியாகப் பொங்கி, வீறு கொண்டு எழுவாள்' என்ற கருத்து குறியீடாக நின்று, சமய, பண்பாட்டு நடைமுறைகளில்—சடங்குகளில்—பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு அடக்கி வைக்கப்படுவதை எதிர்த்து மேலெழவேண்டும் என்பதை உணர்த்துகிறது. தமிழ்ப் புனை கதை வரலாற்றில் இத்தகைய வலுவான சிந்தனை எண்பது களில் அழுத்தமாகக் காணக் கிடைக்கிறது. பெண்ணிய இலக்கியத்திறனாய்வுக் கோட்பாட்டின் ஒரு கூறாகும் இது.

## மரபுவழி பங்குநிலை கடமை குறித்த மறுமதிப்பீடு

ஆணாதிக்க சமூக அமைப்பில், குடும்ப நிறுவனத்தில் பெண்ணின் கடமை, பங்குநிலை குறித்த மதிப்பீடுகள் பல உள்ளன. மனைவி என்ற பங்கு நிலையில், பெண் சமையலறை யில் மட்டும் இருந்து எந்திரமாக உழைத்து—அன்னபூரணியாக உணவாக்கி அளித்து—தேய வேண்டும். கணவனின் அலங்காரப் பொம்மையாக, தனக்கென தனித்த முகமில்லாதவளாக இருக்க வேண்டும் என ஆண் கட்டுப்பாடுகள் விதித்திருக்கிறான். ஆயின், கல்வியும் புறஉலகத் தொடர்பும் பணி புரியச் சென்று பொருளுற்பத்தியில் ஈடுபடும் பண்பும் பெண்ணைச் சிந்திக்க வைத்ததுடன், மரபு வழிப்பட்ட தன்னுடைய பங்குநிலை—கடமை பற்றி மறுமதிப்பீடு செய்ய வைத்துள்ளது. இப்போக்கை, இக்காலப் புனைகதைகள் விரிவாகவும் ஆழமாகவும் பன்முக வீச்சுடன் காட்டியுள்ளன. வீட்டிலும் அலுவல் புரியும் இடத்திலு மாகப் பெண், பங்குநிலை மோதலுக்குள்ளாகித் தன் பணிகளில் சிறிது தவறினும், அதற்காக அவள் கடுமையாக ஏசப்படுகிறாள். வீட்டிலும் வெளியிலுமாக அவளுடைய உழைப்பு இரட்டைச் சுரண்டலுக்கு ஆளாகிறது. அத்தகு நிலைகளில், தன் வீட்டுக் கடமைகளைக் கணவன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என மனைவி எதிர்பார்க்கிறாள். ஆனால், மரபு வழியாகச் சமையல் அறைப் பணிகள், வீட்டு வேலைகள் என்பன மனைவிக்குரியன.

என்பதாக ஆண் நினைக்கிறான். இத்தகு நிலைகளில் கடமைகள் குறித்த மறுமதிப்பீடு வேண்டும் என்று படைப்பாளர்கள் தீவிர மான சிந்தனைகளை முன்வைக்கின்றனர்.

'மானுடத்தின் மகரந்தங்கள்' நாவலில் பாட்டி மதுராம்பாள் தன் கணவன் தனக்கு வீட்டுக் கடமைகளில் ஒத்தாசை செய்ததை மனநிறைவுடன் பேத்தியிடம் நினைவு கூர்கிறாள். ''உங்க தாத்தா எனக்கு பிரசவம் பார்க்கவே ஒத்தாசை பண்ணும்படி யாக இருந்தது. எனக்குப் புடவை நோச்சுப் போட்டார். 'வாத்தியாரு பொண்டாட்டிக்குப் புடவை தோச்சுண்டு போறார்'னு வாய்க்கால் கரையில வம்பு பேசுவாளாம். அவர் பொருட்டாக்கல...'' (**மானுடத்தின் மகரந்தங்கள்**, பக்.187-188) என்ற பகுதி இதனை வலியுறுத்தும். 'வாய்க்கால் கரையில் நின்றவர்கள் வம்பு பேசியதற்கு மரபு வழிப்பட்ட ஆணாதிக்கச் சமூகப் பார்வை (மனைவி எந்திரம் போலத் தன் கணவனின் துணிகளைத் துவைக்கலாம்: மனைவியின் புடவையைக் கணவன் துவைத்தல் கூடாது' என்பது மரபு வழிப்பார்வை) காரண மாகும்.

'சுழலில் மிதக்கும் தீபங்கள்' நாவலில் கணவன் தன் உடை களையெல்லாம் மனைவி தோய்த்து ஒழுங்கு செய்வதைப் பெருமையாகக் கூறினான் என்று வருகிறது: ''இங்கே நான் ஒண்ணுமே பண்ண வேண்டாம். பத்து நாட்கள்தானே. ஊரில் கொண்டு போட்டால், என் மிஸஸ் எல்லாம் சரியாக்கி, வார்ட்ரோபில் வைத்துவிடுவாள்'' என்றாராம். (**சுழலில் மிதக்கும் தீபங்கள்**, பக். 43). அந்தக் கணவனிடம் மனைவி கிரிஜா, ஒருநாள் வீட்டின் அலமாரியில் புதியதாகக் காணும் பெட்டி பற்றித் தூண்டித் துருவி வினவ, அவன் சினமுற்றுக் கத்துகிறான். அதற்கு அவள், ''ஏனிப்படி எரிஞ்சு விழணும்? சப்பாத்தி, ரைஸ், சமையலறை மட்டும்தான் எனக்கு, அதிகப் படி ஒண்ணும் கேட்கக் கூடாது... ஏன் என்னன்னு கேட்டா, கோபம் வந்துடும்'' என்று அவள் கூறுவதிலும், ''பதினேழு வருஷம் அடிமைச் சேவகம் செய்து, குழந்தைகளைப் பெற்று வளர்த்த இவளுக்கு ஒரு பேச்சு, ஒரு குரல் எழுப்ப உரிமை இல்லையா? அப்படியும் உரத்த குரல் கூட இல்லை. அந்த ஒரு பிசிறைக் கூட பொறுக்க முடியாத ஒரு கூடு இது...?'' (**சுழலில் மிதக்கும் தீபங்கள்**, பக். 43, 46) என்று அவள் எண்ண ஓட்டத்திலும் வருவது, மனைவி சமையல் பணி மட்டுமே செய்யப் படைக்கப்பட்டவள் என்ற மரபு வழிச் சிந்தனையை வெளிப் படுத்தும்.

ஊமை அரண்கள் நாவலில், 'பிள்ளையை அவள் பெற வேண்டி இருப்பதால் அடுப்பையும், அடுக்களையையும் கூடக் கட்டிக்கொள்ள வேண்டும். அடிமை முத்திரை இட்டுக் கொள்ளாத பந்த நிலை. இந்த அண்ணியை இவ்வளவு புகழ்ந்து கொண்டாடும் விட்டல், இந்த அண்ணிக்கு ஒரு நெருக்கடியான துன்பநிலை வந்தால், மனைவி தன்னை விட்டுப்போகக் கூடாது என்றுதான் சொல்வான்' (**ஊமை அரண்கள்**, பக். 69) என்று வரும் வசுவின் சிந்தனை ஓட்டம் மரபு வழிப் பார்வையையும், அதை மாற்றிட விழையும் பெண் மன உணர்வையும் காட்டும். பொதுவாக, நம் சமூக அமைப்பில் பெண்ணின் உழைப்பாற்றல், வீட்டிலும் வெளியிலுமாக அவளை வலிமையாக அழுத்துகின்றன. ''வளரணும் என்ற இந்தப் பொது முயற்சியும் பெண்களுக்கு இன்னும் கடுமையாகவே அமைந்துவிடுகிறது. காரணம், அவளைத் துரத்தியடிக்கும் அந்த வேலை. ஆபீஸிலும் சரி, வீட்டிலும் சரி. சொல்லப் போனால் அந்த 'வீடு' என்பதே அவள் அமைத்தால் தான் உண்டு. அது தானாகவே தயாராக அவள் மடியில் பொத்தென்று ஒரு போதும் விழப் போவ தில்லை. அப்படியே அவள் தன்னைச் சுற்றி ஒரு வீட்டை அமைத்தாலும், கடைசியில் அது அவள் சௌகரியங்களுக்காக இல்லாமல், வீட்டின் ஆணிற்கு, குழந்தைகளுக்குத் தான் ஓய்வெடுக்க இடம் தருகிறது. சமூக அமைப்பே அப்படி'' (**ஆத்துக்குப் போகணும்**, பக். 27-28) என்று வரும் ரமாவின் கூற்று மரபு வழிப்பார்வையையும், அதை மீறிச் சிந்திக்கும் பெண்ணின் எண்ண ஓட்டத்தையும் ஒருங்கு காட்டும்.

ஒரு காலத்தில் காற்றுப் புக வசதியின்றி, ஒரே இருட்டாக, கீழே ஒரு பக்கத்தில் அமைந்துள்ள தொட்டி முற்றத்தின் ஈரம் காலை அழுத்த, இயற்கையை—புற உலகை—பார்க்கும் வாய்ப்பில்லாமல் வீட்டின் மூலையில் இருந்த சமையலறை, உக்கிராண அறை, 'காமிரா உள்' ஆகிய இடங்களே பெண்ணின் உலகமாக இருந்தது. இந்த அறைகளில் இருள் காலங்காலமாகப் பெண்ணின் சிந்தனையை மழுங்கடித்து வைத்திருந்தது. 'இதிலிருந்து எழும்பி மேலே பறந்து விரிந்த வானத்திற்குப் போக வேண்டும்' என்ற எழுச்சி உணர்வு இக்காலப் புனைகதை களில் (**ஆத்துக்குப் போகணும்**, **ஓசைகள்**, (அலை நடுவில் அன்னபூரணி), வீட்டின் மூலையில் ஒரு சமையலறை) முழு வீச்சுடன், முன் எப்போதையும் விட அழுத்தமாக வெளிப் படுத்தப்பட்டுள்ளது. ஊர் முழுவதும் வெள்ளம் வந்து மக்கள் யாவரும் அலமருகையில், தானும் தன் குடும்பமும் மட்டும் வசதியாக உக்கிராண அறையில் சேமித்து வைத்துள்ள பொருட்

களைக் கொண்டு, வேளா வேளைக்கு மனைவி சமைத்துப் போட, உண்டு, அவளைப் பாராட்டி மகிழ்கின்றனர் கணவனும், மாமியாரும். 'இந்த மானக்கேடான சேகரிப்புதான் அவளுக்கு இந்த சமூகத்தில் எவ்வளவு நல்ல பெயரைச் சம்பாதித்துத் தருகிறது. அவள் ஒரு நல்ல மனையாள், நல்ல அன்னை, (**ஓசைகள்,** பக். 176) என்று வரும் கூற்று, ஊரெங்கும் வெள்ளம் வந்தபோது, அனைவருக்கும் அன்னம் பாலிக்க வேண்டும் என விழையும் ஒரு தாயின் மன உணர்வையும், அதற்குத் தடை செய்யும் தன்னலமிக்க கணவன்—மாமியார் ஆகியோரின் மரபுப் பார்வையையும் ஒருங்கே காட்டும்.

பெண்ணுக்குக் கிடைத்துள்ள சுதந்திரக் காற்று உக்கிராண அறையிலிருந்து நடுக்கூடத்திற்குத்தான் கொண்டு வந்துள்ளது; அங்கும் நிறைய 'லட்சுமணக் கோடுகள்'. அவற்றைத் தாண்டி வெளிச்செல்ல முடியாது. இந்த அளவில்தான் மரபுகள் அவளைக் கட்டுப்படுத்தி உள்ளன. இவற்றையும் மீறி இன்னும் மேலே எழும்பி பறப்பதற்கு உறுதுணையாக—அநுசரணையாக—அவளுடைய வீட்டு, வெளிக் கடமைகளைப் புரிந்து கொண்டு, பகிர்ந்து கொள்ளும் துணை—கணவன்—வேண்டும் என்பதே மரபுச் சிந்தனையின் மறுமதிப்பீடாக இப்படைப்பாளர்களால் முன் வைக்கப்படுகிறது.

இந்த நிலைக்கு மாற்றாக, மறுமதிப்பீடாக முன்வைக்கப்படும் சிந்தனைகள் சில புனைகதைகளில் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன. வெந்து தணிந்த காடுகளில், விம்மி தேடிச் செல்லும் ஓவியன் தாமோதரன் தான் சமையல் பணி செய்வதையும் அவளுக்கு உதவுவதாகவும் கூறுகிறான். ''நான் அவ்வளவு ஒண்ணும் மோசமான சமையல்காரனில்லே''. என்றான் தாமேதரன். (**வெந்து தணிந்த காடுகள்,** பக். 123). இதே போல சக்தி 81 நாவலில் பிரதாப் வீட்டில் தானே சமைப்பதைக் கூறுகிறான்: ''நாளையிலிருந்து இந்த நளன் தன் பாகத்தைத் தொடங்குவான்'' (**சக்தி 81,** பக். 79) என்ற கூற்று இதனை வலியுறுத்தும்.

சூடாமணியின் செந்திரு ஆகிவிட்டாள் என்னும் சிறுகதையில் ''உங்கம்மா உங்களுக்கெல்லாம் தன் கடமைகளில் ஒரு குறையும் வைக்காமல் எல்லாம் செஞ்சுட்டாள். அதுக்கப்புறம் குடும்பத்தைச் சேராத மத்தவங்களுடனும் சமூகத்துடனும் அவள் ஒரு தனிப்பட்ட மனுஷியாய்த் தொடர்பு வச்சுக்கிறதில் என்ன தப்பு? நம்ம வேலை முறை மாறியிருக்கிறது இல்லையா?

அதை நினைச்சு சிரிச்சேன். என் பெண்டாட்டி எனக்கு உழைக்கிற யந்திரமாய் மட்டுமே இருக்கணும்னு நான் சொல்லணும் பெண்ணும் ஒரு மனுஷப் பிறவியில்லையான்னு நீ கேட்கணும். ஆனா இங்கே நடந்தது தலை கீழே. பெண் களுக்கு எதிரி பெண்கள்தான்னு சொல்றது சரியாய் தான் இருக்குது இல்லே'', (**அம்மா**, பக். 88, 89) என்று வரும் தந்தையின் கூற்றில் கிராமத்து ஏழை எளிய மக்களுக்கு உழைப் பிற்கான ஆக்க பூர்வமான பணிகளைக் கற்றுத்தர மனைவி (தாய்) வெளியே செல்ல வீட்டுப் பணிகளைத்தான் செய்வதாக மனமகிழ்வுடன் கூறுகிறார். இந்தப் பணியை இன்னார்தான் செய்ய வேண்டும் என்ற பணிப்பங்கீடு—மரபுவழியான பங்கு நிலையும், பணியும்—மறுமதிப்பீடு பெற்றுள்ள வலுவான சிந்தனையைக் காண்கிறோம்.

ஆதார சுருதி சிறுகதையில், 'அவள் அப்பா ரங்கநாதன் எப்போதும் அம்மா இருக்கும் இடத்தையே சுற்றி வருபவர். நிறைய தடவை, சமையலறையில் தரையில் அமர்ந்து காய்கறி நறுக்கித் தந்து பார்த்திருக்கிறாள். அப்பா ஆபீஸில் நடக்கும் விஷயமெல்லாம் அம்மாவிற்கும் அத்துப்படி' (**ஆதார சுருதி**, பக். 115) என்று பெண்ணின் மன ஓட்டத்தில் அவளுடைய தந்தை தாய்க்கு உதவியாகச் சமையலறையில் உடன் பணி புரிந்ததை நினைவு கூர்கிறாள்.

'கைப்பிடித்தே காதலொருவனை' சிறுகதையில் தந்தையும் மகனுமாக வீட்டுப் பணிகளை ஒரு அவசர நேரத்தில் செய்வதை ஊரிலிருந்து வந்த மகளே மதிப்புக் குறைவாகப் பேசுவது காட்டப்படுகிறது. கல்வி கற்று எம்.ஏ. பட்டம் பெற்ற இளம் தலைமுறைப் பெண்ணே இன்னமும் மரபுக் கண்ணோட்டத் தில் இருந்து உழல்வது காட்டப்படுகிறது. ''இங்கே வந்து பார்த்தால் மானம் போறது. இவன் சமைக்கிறான். அப்பா காய் நறுக்குகிறார்'' (களம், பக். 89) என்று வரும் பகுதி இதனைக் காட்டும். பெண்களிடம் முதலில் விழிப்புணர்வும் மரபுவழிப் பார்வை பற்றிய மறுமதிப்பீட்டைப் புரிந்து கொள்ளும் உணர்வும் வரவேண்டும் என்ற கருத்து இதில் வலியுறுத்தப்படுகிறது. பெண்ணியச் சிந்தனை, திறனாய்வுக் கோட்பாட்டில் இத்தகு மரபுக்கண்ணோட்ட மறுமதிப்பீடு அடிப்படையானது என்பதையும் அது எவ்வாறு இளந்தலை முறைப் பெண்களுக்கு வலுவாக இளமைதொட்டே கற்பிக்கப் பட வேண்டும் என்னும் பொறுப்புணர்வையும் இப்படைப் பாளர்கள் ஆணித்தரமாக இக்காலப் படைப்புக்களில் தொடர்ந்து காட்டியுள்ளனர்,

**பெண்ணுரிமை போற்றும் பெண் பிம்பங்கள்**

பெண்களை மரபுவழிப்பட்ட பிம்பங்களாகக் காட்டாமல், பெண்ணுரிமை போற்றுபவர்களாக, ஆக்கப்பூர்வமான செயற்பாடு உடையவர்களாக இப்படைப்பாளர்கள் படைத்துள்ளனர். அதனைச் சரியாகப் புரிந்து கொண்டவர்களாக, பெண்ணியக் கருத்தாக்கங்களை இளம்பெண்கள், மூத்த தலைமுறையினர், ஆண்கள் ஆகியவர்களிடையே அழுத்தமாகப் பரப்புவதுடன், வலுவான முறையில் பெண் குழந்தைகளை வளர்க்கவேண்டும் என்ற பொறுப்புமிக்க தாய்மார்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர். ''பெண் விடுதலை என்பது ஆணை எதிர்ப்பது என்று பலரும் நினைக்கிறார்களே என்று வருந்துகிறாள். கல்வி கற்று பண்பாடடைந்தவர்கள் என்றால், ஒருவர் மற்றவரை அறிவு சார்ந்த மனிதர் என்று மதிப்பதே யாகும்'' (**களம்**, பக். 10) எனவும், இயல்பாக உள்ளத்தில் பொங்கிவரும் உரிமை உணர்ச்சி எனவும் பெண்ணுரிமை பற்றி இப்படைப்பாளர்கள் அடிப்படை விளக்கம் தந்துள்ளனர்.

''இக்காலச் சமூகப் பொருளில், 'சீதை சிறைமீட்சி' என்பது பெண் விடுதலையே ஆகும் ...விடுதலை என்பது ரொம்பவும் சமூகம் சம்பந்தப்பட்ட விஷயம்... சுந்தரகாண்டத்துச் சீதை, நம்பிக்கையில்லாத, தைரியமில்லாத சீதையல்ல. ராமன் உண்டு என்கிற சிறைமீட்சி உண்டு என்கிற நம்பிக்கையும் உறுதியும் உடையவள்'' (**சுந்தரகாண்டம்**, பக்.356—357) என்று சுந்தரகாண்டம் நாவலில் பெண் விடுதலை விளக்கப்படுகிறது. தளைகளிலிருந்து சிறைமீட்சி உண்டு என்பதையும் நம்பிக்கைக் குரலில் உறுதியும் துணிவும் எதிர்த்துப் போராடும் குணமும் மிளிர இனங்காட்டுகின்றனர். ''பொறுக்கல்லேன்னா எழும்பிப் போராடு; தெளிந்து கொள், இரண்டிலொன்னு முடிவு செய்துடணும்; அந்த முடிவைப் பத்திப் பிறகு அலட்டிக்கக் கூடாது'' (**சுழலில் மிதக்கும் தீபங்கள்**, பக். 86) என்றும் ''அடிப்படை உரிமைகள் கிடைக்கல்லேன்னா, நியாயத்துக்குப் போராடுவோம்... குழம்பாம அறிவுத் தெளிவோட நடைமுறை வாழ்வுக்கு ஒத்து யோசனை செய்வோம்'' (**ஆண்களோடு பெண்களும்** பக். 128—129) என்றும் ''ரொம்பப்பேர் விடுதலை, நாகரிகம்னா, அறிவுன்னே புரிஞ்சுக்கல்லே... நாம் யாருக்கும் விரோதிகளில்ல. நாம் நாமாக இந்தச் சமுதாயத்தில் இருக்க அனுமதிக்காத சக்திகளோடு போராட வேண்டியிருக்கு...'' (**சுழலில் மிதக்கும் தீபங்கள்**, பக். 124) என்றும் ராஜம்கிருஷ்ணன் விடுதலை பற்றியும் அதை அடையும் நெறி பற்றியும் தீர்க்கமாக விளக்கி

யுள்ளார். நீண்டகாலமாக அடக்குமுறைகளுக்கு ஆளானவர்கள், விடுதலைக்காக இப்போது போராடத் தொடங்கியுள்ளனர் என்பதை இப்படைப்புக்கள் அழுத்தமுற வெளிப்படுத்துகின்றன.

'வெந்து தணிந்த காடுகள்' விம்மி, 'சுழலில் மிதக்கும் தீபங்கள்' கிரிஜா, ரத்னா, அபு, 'ஆண்களோடு பெண்களும்' சசி, ஜெயந்திதேவி, சாரு, ராஜி, 'சக்தி-81' சக்தி, 'ஆத்துக்கு போகணும்' காயத்ரி, ரமா, 'சுந்தரகாண்டம்' சீதா, மரியம், ராமதாஸ் கிரிதரன், 'ஊமை அரண்கள்' நாவல் வசு ஆகிய கதை மாந்தர்கள் பெண்ணுரிமை போற்றும் பிம்பங்களாவர். பெண்கள் மட்டுமல்லாமல் ஆண்களும் (அபு, ராமதாஸ், கிரிதரன் போன்றோர்) பெண் உரிமையைப் போற்றுபவர்களாக ஆண் களும் பெண்களும் சரிநிகர் சமமாக இணைந்து செயற்பட்டுத் தான் சமூகமாற்றம் கொண்டுவர வேண்டும் என்று சிந்தித்து, போராடி, செயற்படும் பிம்பங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

கல்வி ஆணைப் போல பெண்ணுக்கு அடிப்படை உரிமை என்பதையும், கல்வி கற்பது உலகைப் புரிந்து கொள்ளுவதற்கும், சுயமாகச் சிந்தித்து ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கும், பணி செய்து பொருள் ஈட்டித் தனித்து வாழுவதற்கும் பயன்படு கிறது. இதனை இப்படைப்புக்கள் தெளிவாகக் காட்டுகின்றன. மணஞ்செய்து கொண்டு குடும்பமாக வாழ்வதும், குடும்பத்தில் சிக்கல் ஏற்பட்டு, சிதைவுக்குள்ளாகி தனித்து வாழும் போது, நிமிர்ந்து நிற்கவும், கல்வியும், பணி வாய்ப்பும் அடிப்படைத் தேவைகளாகின்றன. மணம் செய்து கொண்டு வாழ்வது மட்டுமே பெண்ணுக்கு விதிக்கப்பட்டது என்ற சமூக நியதி இந்தப் படைப்புக்களில், பெரும்பாலும் ஆண்களால் சிக்கலுக் குள்ளாக்கப்படும் போது, பெண்கள் தனித்து வாழவேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். அடிப்படை உரிமைகளுக்காகப் போராடவும் செய்கின்றனர்.

''பெண் சுதந்திரமாகப் பிறர் தயவின்றி ஒரு பிரஜையாக வாழும் போது, அத்தகைய பெண்களின் தொகை ஒரு சமூகத்தில் பெருகும் போது இந்தக் கல்யாணங்களின் தன்மையே மாறிப் போகும். அந்தச் சமூக மாற்றம் நிகழும்வரை இந்த நிலைதான். இந்தக் காலத்து இளைஞர்கள் பலர் நம்ப ராமதாஸைப் போலவும் டாக்டர் கிரிதரனைப் போலவும் திருமணம் இல்லாமல் வாழுகிறார்கள். அது போலப் பெண்களும் இருக்கத் தானே வேண்டும்'' **(சுந்தரகாண்டம்**, பக். 359) என்ற கூற்றும், ''கல்யாணத்தினாலே ஒரு ஆணோ, பெண்ணோ, தன்னோட

சுதந்திரத்தைப் பறி கொடுக்கணும்னா இந்த ஸிஸ்டமே டோட்டலி ராங். விம்மி தன்னோட சுதந்திரத்தைப் பறி கொடுத்ததாகத் தான் நினைச்சிருக்கணும். உங்களுக்காகப் பிடிக்காத விஷயங்களையெல்லாம் பிடிச்சதா பாவனை பண்ணிண்டு, இத்தனை வருஷமா நடிச்சிருக்கணும்னா அது எவ்வளவு பெரிய 'ஸ்ட்ரெயின்' இனிமே நடிக்க முடியாதுங்கற நிலை வந்தபோது, அவ எது தன் மனசுக்குச் சரின்னு பட்டதோ, அப்படி நடந்திண்டிருக்கா'' (**வெந்து தணிந்த காடுகள்**, பக். 109) என்று வரும் கூற்றும் பெண் உரிமை பற்றிய சிந்தனையின் வீச்சைக் காட்டும்.

பெண்கள் தமக்கென்று தனித்த முகம் உடையவர்களாக உள்ளனர். இதனை, ''ரமாவைப் பார்த்து, மிஸஸ் துரைசாமி என்றாள் உஷா. ஏன் ரமான்னு அழைக்கலாமே என்றாள் ரமா சிரித்த வாறே'' (**ஆத்துக்குப் போகணும்**, பக். 107) என்று வரும் உரையாடலில், பெண் தனக்குத் தனிப்பெயர் உள்ளது என்று கூறுவது தன் தனித்தன்மையை உணர்த்த அவளுடைய வளர்ச்சியை—ஆளுமை மலர்ச்சியைக்—காட்டும். பெண் தன்னை உணர்ந்து கொள்ளவும் அடிப்படை உரிமை களுக்காகப் போராடவும் தயங்கக் கூடாது என்று இப் படைப்புக்களில் வலியுறுத்தப்படுகிறது. ''நாம் நாமாக இருக்க சமுதாயத்தில் அனுமதிக்காத சக்திகளோடு போராட வேண்டியிருக்கு...நாம் இப்படிச் சிந்திக்க ஆரம்பிச்சதனாலே, எதிர்ப்புச் சக்தி ரொம்ப மூர்க்கமா அழுத்தவருது. ஆண்வர்க்கம் இவ்வளவு கொடுமையா நடந்திருக்கலன்னு தோணுது...'' (**சுழலில் மிதக்கும் தீபங்கள்**, பக். 124) என்று வரும் சிந்தனையும், ''புருஷன் இறந்தால்தான் ஒரு பெண்ணிற்கு வேலைன்னா, அவளுடைய அடிப்படை உரிமை, வேலை செய்வதற்கு இல்லையா? ஏம்மா இதெல்லாம் கூட நியாயம்னு ஏன் எடுத்துக்கிறீங்க. உங்களுக்கு வாழ, கல்விக் கற்க, வேலை செய்து சம்பாதிக்க, கல்யாணம் செய்து கொண்டு வாழ, உங்கள் விருப்பப்படி குழந்தை பெற்றுக்கொள்ள உரிமைகள் இருக்கு. இதெல்லாம் அடிப்படை உரிமைகள். இது கிடைக் கலைன்னா, நியாயத்துக்குப் போராடுவோம்'' (**ஆண்களோடு பெண்களும்** பக். 126, 128) என்று வரும் கூற்றும் இதனை வலியுறுத்தும்.

உரிமை கோரும் பெண்கள், தங்களின் இலக்கு எது என்றும் எதைக் குறித்துப் போராடுகிறார்கள் என்றும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுவதுடன், அச்சமோ, தயக்கமோ இன்றித்

துணிவும் உரமும் கொண்டு தெளிவுடன் செயற்படவேண்டும் என்பதும் இப்படைப்பாளர்களால் மீண்டும் மீண்டும் கூறப் பட்டுள்ளன. "வலிமையையும் எண்ணங்களின் விடுதலையையும் பெற வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி பெறுங்கள்" (**சக்தி 81**, பக். 189) என்று வரும் சக்தி 81 நாவலின் கூற்று இதனை விளக்கும். பெண்ணை எவ்வாறு எதனால், எப்படி அடிமைப் படுத்துகிறார்கள் என்றும் மீண்டும் மீண்டும் விளக்கப்படுகிறது. "காரணம் அவ உடம்புன்னு அதைய வலுவாக்கி, அதனாலேயே அவளைச் சபலப்படுத்துறவளாகவும், பலமில்லாதவளாகவும் இன்னும் என்னென்ன வகையிலெல்லாமோ தடைப்படுத்தி யிருக்கா. இதையெல்லாம் உங்களைப் போல இருக்கறவா புரிஞ்சுண்டு புத்தியவச்சிண்டு வாழவறது சிலாக்கியம்தான். யாரையும் யாரும் மேலேறி அதிகாரம் பண்ற நினைப்பு இருக்கக் கூடாது" (**மானுடத்தின் மகரந்தங்கள்**, பக். 186) என்று வரும் சிந்தனை இதனை வலியுறுத்தும்.

சார்புநிலையில் நின்ற பெண், சுயமாகச் சிந்திக்கவும், பணி செய்து பொருளீட்டவும் தொடங்கிய பின்னர் வேறு வடிவங் களில் அவளுக்குப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. குடும்பம் என்ற அமைப்பில் தன்னை, மனைவியாக ஆக்கிக் கொண்ட பின், முடிவெடுக்கவும், செயற்படவும் ஆடவன் மட்டுமே உரிமை உடையவன்; பெண் அதைக் கேட்டுச் செயற்படுத்த மட்டுமே உரியவள் என்ற தளை அவளைப் பிணிக்கிறது. இந்த தளையிலிருந்து எப்படி மீளுவது என்பதைப் பெண்கள் சிந்திப்ப தாக இப்படைப்புக்கள் காட்டுகின்றன. மணமாகும் முன் பெற்றோருக்கும், மணமானபின் கணவன், மாமியார், மாமனார், பிற உறவினர் ஆகியோரிடமும் அவள் தன் நிலையை தான் தானாக வாழ்வதற்கான உரிமையை அடை வதற்கு—வெளிப்படுத்தக் கடுமையாகப் போராட வேண்டும். ஒரு புறம் வயதானவர்களுக்கும் மறுபுறம் இளைய தலைமுறை யினருக்கும் சரியான முறையில் விளக்கவேண்டியுள்ளது. இதனை, "பெண்ணின் பொருளாதாரச் சுதந்தரத்தைவிட, அண்டி நிற்கும் தாழ்மையையே மதிக்கும் அவலம் எப்படிப் போகும்" என்றும், "படித்திராத மாமியாரின் அடிமைத் தனத்தை உணரச் செய்வது கடினமாக இல்லை. இந்த எம் ஏ.க்காரியை எப்படிச் சமாளிப்பது?" (**களம்**, பக். 82, 90) என்று வரும் சிந்தனைகள் வலியுறுத்தும்.

"ஒரு பெண் மணமாகும் அந்தஸ்தைப் பெறணும். மனைவி யாக வாழ வேண்டும் என்பதற்காக அவள் மரக்கட்டை யாகணுமா? முடியாது" (**களம்**, பக். 141) என்று வரும் கூற்று

வீட்டிலும் அலுவலகத்திலுமாக உழைத்து, தன் தனித்துவத்தை மதிக்காத நிலையில் கணவனிடம் கூறும் கூற்றாகும். மணவாழ்வில், கணவன் வீட்டில் துன்பப்பட்டு, சிதைந்து போய் பிறந்த வீட்டிற்குத் திரும்பிய பெண்ணை மேலும் துன்பத்திற்கு உள்ளாக்குமாறு செய்தல் கூடாது. அவளை அவள் போக்கிலே வாழவிட்டு—வாழ்வதில் ஒரு பிடிப்பும், அவளுடைய மனத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தி மேலே உயரச் செய்ய வேண்டிய பொறுப்பும், பிறந்த வீட்டிலுள்ளோருக்கு உரியது. இதனைத் திலகவதியின் அரசிகள் அழுவதில்லை தொகுப்பிலுள்ள 'மாதிரிக்கு ஒரு மாதவி' கதையில் வரும், ''செங்கிப்பட்டி கதிரேசனைக் கட்டிக்கறதுக்கு முன்னால மாதவி என்ன செத்த பொணமாவா இருந்தாங்க? அவரு போனதும் வாழ்க்கையே போயிடறதுக்கு? மாதவி இங்க இருந்தாலும், என் வீட்ல இருந்தாலும், செங்கிப்பட்டியிலே இருந்தாலும் அவங்களுக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்குது'' (**அரசிகள் அழுவதில்லை**, பக். 191-192) என்று வரும் உரையாடல் வலியுறுத்தும்.

பெண் தனக்கென வாழாது, பிறருக்குரிய (தன் கணவன், குழந்தைகள் என்ற வட்டத்திற்குள்) கடமைகளையே செய்து, அவர்கள் முகமலர்ச்சியையே தன் உயர்வாக நினைப்பவள் என்று மீண்டும் மீண்டும் பலமுறை சொல்லிப் பெண்ணினுடைய சிந்தனையை முடக்கிவிட்டார்கள். இதனை மாற்றி தன் தனித் தன்மையை உணர்ந்து, தனக்காகவும் அவள் வாழவேண்டியவள் என்பதை இப்படைப்புக்கள் அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளன: ''பெண் சுயநலம் கொண்டவளா ஆகணும், தன்னோட முன்னேற்றம், சுகம் அதுவும் முக்கியம்னு நினைக்கணும். என் சிநேகிதி ஒருத்தி ரொம்ப நல்லா டான்ஸ் ஆடுவா, அவ காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டது ஒரு கிரிகெட்டரை. அவன் கல்யாணம் ஆன உடனே, நீ இனிமே டான்ஸ் ஆடக்கூடாதுன் னான். அவளும் சரின்னு அன்னியோட விட்டுட்டா. அவன் மட்டும் கிரிகெட் ஆடலாமாம். எவ்வளவு சுயநலம்'' (**ஆதார சுருதி** பக். 170).

பெண் அடிமையான நிலை, காலங்காலமாக ஆண்களின் அடக்குமுறைகளுக்கு உள்ளாகி ஒடுக்கப்பட்டு, துன்பங்களை அனுபவித்து வரும் நிலை ஆகியவற்றை வரலாற்றுப் பூர்வமாகவும், சரியான முறையில் இனங்காட்டுமாறும் அம்பையின் கறுப்புக் குதிரைச் சதுக்கம், வீட்டின் மூலையில் ஒரு சமைய

லறை, லக்ஷ்மி கண்ணனின் ஆத்துக்குப் போகணும், ராஜம் கிருஷ்ணனின் சுழலில் மிதக்கும் தீபங்கள், மானுடத்தின் மகரந்தங்கள் ஆகிய படைப்புக்கள் உள்ளன.

**பெண்ணுரிமை — செயற்பாட்டிற்கான வழிகள்**

பெண் அடிப்படை உரிமைகளைப் பெற, தளைகளிலிருந்து மீட்சி பெறவும், ஆண்களோடு சரிநிகர் சமானமாக வாழவும், வேண்டியதன் இன்றியமையாமையை இப்படைப்புக்கள் வலியுறுத்துகின்றன. வெறும் கோஷங்கள் முழக்கங்களாக அல்லாமல் நடைமுறை வழிகளை மிகுந்தப் பொறுப்புணர்ச்சியுடன், ஆழமான தொலை நோக்குடனும் இப்படைப்பாளர்கள் முன் வைத்துள்ளனர். இப்புனைகதைகளைப் படிக்கின்ற தீவிர நாட்டம் மிக்க வாசகர்கள் நன்கு உய்த்து உணருமாறு பல செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. நம்முடைய மொழியிலுள்ள சில சொற்கள் காலங்—காலமாகப் பெண்களை அடிமைப் படுத்தவும், தொடர்ந்து கட்டிற்குள் வைத்திருக்கவும், மரபு வழியாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. ஆண்களால் ஆக்கப் பட்ட இத்தகைய அடக்குமுறை மொழிக்கு எதிராக—மாற்றாக—பெண்ணிய மொழி (Feminist Language) ஒன்று வேண்டும் என்ற தீவிரமான சிந்தனை இன்று உலகம் முழுவதிலும் வலியுறுத்தப்படுகிறது. அந்த இலக்கை அடையும் முதல் முயற்சியாக, மரபு வழியாக வரும் சில சொற்களைத் தவிர்த்து, வேறு சொல்லாக்கங்களைப் பயன்படுத்தும் போக்கு இப்படைப்பாளர்களிடம் காணப்படுகிறது. (**இந்த அடிப்படையில் தான், இந்த நூல் நெடுகிலும் கற்பழிப்பு என்ற சொல் கவனமாகத் தவிர்க்கப்பட்டு, பாலுறவு வன்முறை என்ற சொல் ஆளப் படுகிறது**).

சான்றாக, நம் மரபிலுள்ள ‘வாழா வெட்டி’ என்ற சொல்லைப் பற்றிய சிந்தனையைச் சுந்தரகாண்டம் நாவலிலும், வாஸந்தியின் எட்சுமி (பயணம் தொகுப்பு) சிறுகதையிலும் காணமுடிகிறது. ‘‘எங்கபாட்டியும் வாழா வெட்டியா வந்தா, நானும் இப்ப வாழா வெட்டி. வாழா வெட்டிங்கிறது அநாகரீகமான வார்த்தை. நான் உன்னை **வழிகாட்டின்னு** சொல்லுவேன்’’ (**பயணம்**, பக். 174) என்று வரும் உரையாடலில், துணிச்சலுடன் கணவனின் அடாத செயலை, மணமான அன்றே முதலிரவிலேயே—எதிர்த்து விட்டு வெளி வந்த நெஞ்சுரத்தை வழிகாட்டி என்று வாஸந்தி குறிப்பிடு கிறார். ‘‘சீதா கூட ஒரு வாழா வெட்டிதான்—ஆமாம்,

சுந்தர காண்டச் சீதாப் பிராட்டிகூட வாழா வெட்டிதான்! இங்கே வாழ்ந்து வெட்டுவதைவிட வாழாமல் வெட்டுகின்ற சுசீலாவின் வாழ்க்கை ஒன்றும் கெட்டுப்போகவில்லை'' (**சுந்தர காண்டம்**, பக். 360) என்று வரும் சுந்தரகாண்டம் நாவல் சிந்தனை ஓட்டத்தில் இதிகாசப் பின்னணியைக் கொண்டு, வாழாவெட்டி என்ற சொல்லின் பின்னுள்ள கருத்தாக் கத்தையே விவாதத்திற்கு உள்ளாக்குகிறார் ஜெயகாந்தன். நம்முடைய சமூக அமைப்பில், பெண் விடுதலை, சம உரிமை ஆகிய இலக்குகளை அடைவதற்குத் தடையாக இருக்கும் ஆதிக்கப்போக்குகள் அனைத்தையும் எதிர்க்க வேண்டும்—முற்றாக உடைக்க வேண்டும்—என்ற சிந்தனையை வலுவாக இங்கு முன் வைக்கின்றார்கள் என்பது அறியத்தக்கது.

அடக்குமுறைகளையும் பெண்களுக்கு எதிரான கொடுமை களையும் எடுத்துக் கூறி, மக்களிடையில் அவற்றைப் பரப்பவும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் தீமைகளை—ஆதிக்கப் போக்குகளை—எதிர்த்துப் போராடவும் கூடியவகையில் மக்கள் மத்தியில் பொதுக்கருத்தை ஏற்படுத்தும் ஆக்கப்பூர்வமான வழி களை இப்படைப்பாளர்கள் முன்வைக்கின்றனர்.

**எழுத்து மூலமாகக் கருத்துக்களைப் பரப்புதல்** பெண்விடுதலை, உரிமைச் சிந்தனைகளை மக்களிடையில், குறிப்பாகப் பெண்களி டையில்-பரப்புவதற்கு ஏற்ப பத்திரிகைகள் நடத்துதல், பெண் களுக்கு என்று தனிப்பகுதியை விழிப்புணர்வு பெறும் ஆக்கப் பூர்வமான பணிகளுக்காக உருவாக்கி வெளியிடல், துண்டுப் பிரசுரங்கள் மூலம் கருத்துக்களைப் பரப்புதல், பெண்ணியச் சிந்தனைமிக்க நாவல் எழுதி வெளியிடல் ஆகியவை எழுத்து மூலம் கருத்துப் பரப்பல் என்பதில் இப்புனைகதைகளில் காட்டப்பட்டுள்ளன. சுந்தரகாண்டம் நாவலில் சுதந்தரி என்ற பெயரில் புதியதாகப் பெண்கள் இதழ் தொடங்கப்பட்டு சீதா, மரியம், ராமதாஸ், டாக்டர் கிரிதரன் அதில் ஈடுபட்டுப் பணி யாற்றுவதும் விளக்கப்படுகிறது. சக்தி 81 நாவலில் பத்திரிக் கையில் ஏற்கெனவே மரபுப்பாணியில் உள்ள பெண்கள்பகுதியை மாற்றி, சக்தி புதிய முறையில், விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு வடிவமைக்கிறாள். **சக்தி** என்ற பெயரில் பெண்களுக்கான புதிய பத்திரிகையை அவள் ஆசிரியராக இருந்து கொண்டு வருகிறாள். துண்டுப்பிரசுரங்கள் அச்சிட்டு வழங்குவதுடன், சுவரொட்டி களை அச்சிட்டு ஒட்டவும் செய்கிறாள். (**சக்தி** 81 பக்.185).

வரதட்சணை-சீர் வாங்குதல் என்ற பெயரில் நடக்கும் கொடுமைகள் காரணமாகப் பிறந்ததும் பெண் குழந்தைகள் கொன்றுவிடப்படும் அவலம் பற்றிப் பத்திரிகைக்கு விரிவான செய்தி நேர்முகத்தை அழகாயி கொடுத்து, அக்கொடுமையை நாடறியச் செய்வது, மண்ணகத்துப் பூந்துளிகள் நாவலில் (பக் 207-216)இடம்பெறுகிறது. பெண்களின் பிரச்சினைகளை மைய மாக வைத்து **மிதவைமரம்** என்ற நாவல் ஒன்றை ரமா எழுது வதாக'ஆத்துக்குப் போகணும்' நாவலில்வருகிறது. நடைமுறைச் செயற்பாட்டிற்கான எழுத்து மூலம் கருத்துப் பரப்பும் இந்த முறை கல்விகற்ற மக்கள்-எழுதப்படிக்கத் தெரிந்தவர்-மத்தியிலே பரவலாகச் சென்று, உணர்ச்சிப் பூர்வமாகப் பொதுக்கருத்தை உருவாக்கும். எனினும், காலங்காலமாக அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்கள் விழிப்புணர்வு கொள்ள இந்த முறைநீடித்த-நிலைத்த பயன்தரவல்லது. பத்திரிகைகளில் (ஆங்கிலம்-தமிழ்) வந்து பலரும் அறியுமாறு பெண்குழந்தைக் கொலை வழக்கம் வந்துவிட்டதால், சமூகத்தில் உள்ள ஆணாதிக்கப் போக்கு, வரதட்சணை கேட்கும் பழக்கம் என்பவை வெட்ட வெளிச்ச மாகிவிட்ட கோபத்தை அந்தப்பத்திரிகைகளை எரிப்பதன் மூலம் பஞ்சாயத்துத் தலைவர் உள்ளிட்ட ஆண்கள் தீர்த்துக்கொள் வதையும் மண்ணகத்துப் பூந்துளிகள் (பக்.217) நாவல் காட்டு கிறது.

### பொதுக் கூட்டம் நடத்திக் கருத்துப் பரப்புதல்

கிராம மக்களிடத்திலும் நகரங்களிலுள்ள பெண் மக்களி டையிலும் கூட்டம் நடத்தி. பெண் உரிமைச் சிந்தனைகளைப் பரப்பும் முறைகளையும் இப்படைப்பாளர்கள் காட்டுகின்றனர். இந்தமுறை இன்னும் வலுவானது; விரைவாகச் சென்று கேட்ப வரைப் பற்றக்கூடியது. அத்துடன் கல்விகல்லாத-எழுத்தறிவற்ற-மக்களிடமும் தீப்போல் பரவக்கூடியதாகும். மண்ணகத்துப் பூந் துளிகள் (பக்.227) ஆண்களோடு பெண்களும் (பக். 142, 144) ஆகிய நாவல்களில் கிராமப்புறங்களில் நடைபெறும் கூட்டங்கள் பற்றியும் சக்தி 81 நாவலில் (பக். 190, 196) நகரங்களில் நடை பெறும் கூட்டம் பற்றியும் கூறப்படுகிறது. கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் திரண்டு வந்து உன்னிப்பாகக்கேட்பதையும், விழிப்புணர்வைத் தூண்டும் ஆவேசமான உரைகளைக் கேட்டுத் தாளமாட்டாமல் கூட்டத்தைக் கலைக்கும் முயற்சியில் சிலர் ஈடு படுவதையும் அதையும் மீறி, மக்கள் ஈடுபாட்டுடன் பங்கேற் பதையும் மண்ணகத்துப் பூந்துளிகள் (பக்.235) காட்டுவது நடப்

பியல் நிலையாகும். 'வெறும் ஒலியாகத் தேய்ந்து விடாமல், புதிய ஊக்கங்கள் எழுச்சியையும் மலர்ச்சியையும் கொண்டு வரட்டும்! (**ஆண்களோடு பெண்களும்**, பக். 144) என்று ராஜம் கிருஷ்ணன் கூறுவது கூட்டத்தில் கலந்து கொண்ட பார்வை யாளர்களின் ஈடுபாட்டு உணர்ச்சியையும், பொது மக்களின் எழுச்சியையும் காட்டும் நம்பிக்கைக் குரலாகும்.

**கூத்து நடத்தி, கருத்துப் பரப்புதல்**

எளிய, கிராமப்புற மக்களிடையே பெண்ணுரிமை, வரதட்சிணைக் கொடுமை,பெண்ணை இழிவுபடுத்தும்கொடுமை, திரைப்படத் தாக்கத்தால் பெண்ணைச் சீரழிக்கும் அவலம் ஆகியன பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, பாட்டுப் பாடுதல், கூத்து நடத்துதல் ஆகிய பொது மக்கள் சார்ந்த நாட்டுப்புறக் கலை வடிவங்களைப் பயன்படுத்தும் போக்கை இந்த நாவலாசிரியர்கள் காட்டி உள்ளனர். ராஜம் கிருஷ்ணன் மட்டுமே தம்முடைய மூன்று நாவல்களில் இதனை அழுத்தமாக காட்டுகிறார்.மண்ணகத்துப் பூந்துளிகள்(பக்.229-235)நாவலில் வரதட்சணைக் கொடுமையை விளக்கும் கூத்து இடம் பெறு கிறது. அரிதாரம், பூச்சு எதுமின்றி எளிய முறையிலான **நிஜநாடக**மாக இது காட்டப்படுகிறது. மானுடத்தின் மகரந் தங்கள் நாவலில் (பக்.261-267) பாரதியாரின் நூற்றாண்டு விழாவை ஒட்டி, 'பெண்ணின் பெருமை' என்ற கூத்தை இளை ஞர்கள் நடத்துகின்றார்கள். வரலாற்றுப் பூர்வமாகவும், சமூக வியல் அடிப்படையிலும் காலந்தோறும் பெண், தன் மேன்மை நிலையிலிருந்து அடிமையாகிப் போன கொடுமையை எடுத்துக் காட்டுவதாக இது உள்ளது. பாட்டும் கதை சொல்லலுமாக மிக எளிய முறையில், பாவனை விளக்க முறையில் முச்சந்தி-நாச்சந்திகளில் நடத்தக் கூடிய எளிய முறை உருவாக்கத்தைக் கொண்ட மக்கள் கலையாகக்கூத்து உள்ளது.

> ''எல்லோரும் ஓர் விலை, எல்லோரும் ஓர் நிறைன்னு
> எழுதிவச்சான் பாரதி—ஆனா
> ஆணுக்கு விலையிருக்கு, பொண்ணுக்கு அது இல்ல''

(மேலது பக். 363) என்பது போல கருத்துச் செறிவும் தீவிர சிந்தனையுமிக்க பாடல்களைக் கொண்டதாக அந்தக்கூத்து உள்ளது. நீண்ட காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த பெண் களைத் தட்டி எழுப்பவும், ஆதிக்கப் போக்குகளை எதிர்த்துப் போராடவும், உரமூட்டுவதாக இக்கூத்து முறை உள்ளது. ஆண்

களோடு பெண்கள் நாவலில்(பக். 142,144)மட்டும், விடுதலைப் பாட்டு என்ற பெயரில், பாட்டின் மூலம் கிராமமக்களிடையே கருத்துப்பரப்பும் உத்திகாட்டப்படுகிறது.பிறமுறைகளைவிடவும் பாட்டும் கூத்துமான மக்கள் கலை, மக்களை விரைவில் தட்டி எழுப்பி, மக்கள் சக்தி இயக்கமாக உருவாக்கவல்லது என்பதை ராஜம் கிருஷ்ணன் நன்கு வெளிப்படுத்தி உள்ளார். இதற்கு நம்முடைய வரலாறு சான்றாக நிற்கிறது. எந்த ஒரு இயக்கமும் மக்கள் சக்தியைத் திரட்டி இணைப்பதில்தான் வெற்றி பெறும் என்பதையும், அதற்குக் கூத்தும் பாட்டுமான கலை வடிவங்கள் பெரிதும் துணை செய்யும் என்பதையும், பக்தி இயக்கம் முதல் இந்திய விடுதலைப் போராட்டம் வரையிலான நம் வரலாறு காட்டும்.

**ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்துதல்**

பெண்களுக்கெதிரான தீமைகளை எதிர்த்து ஊர்வலம், பேரணி, ஆர்ப்பாட்டம் நடத்தும் ஜனநாயகப் போராட்ட முறைகளை மேற்கொள்வதாக இந்த நாவல்கள் காட்டுகின்றன. பெண்களுக்கு எதிரான வரதட்சிணைக் கொடுமை, எரியூட்டப் பட்டுச் சிதைக்கப்படுவது ஆகியவற்றைக் கண்டித்து வீட்டின் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவதை எல்லைகளின் விளிம்பில் (பக். 204) நாவல் விரிவாகக் காட்டுகிறது. 'கூட்டத்தையும் கோஷத்தையும் நடுவில் அம்மாவையும் பார்க்கும் போது ஒரு புதிய சகாப்தம் உருவாகிறாப்போல் தோன்றிற்று', (பக் 204) என்று வரும் வாஸந்தியின் கூற்று பெண்களின் எழுச்சியைக் காட்டுகிறது. அம்பையின் கறுப்புக் குதிரைச் சதுக்கம் சிறு கதையில் கொடுமைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவது விரிவாகக் காட்டப்படுகிறது. பெண்ணை இழிவு படுத்தும் படங்கள், சுவரொட்டிகள், திரைப்படம் இவற்றைத் தடை செய்ய வேண்டும் என்று ஊர்வலமாகச் சென்று அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்துவது சக்தி 81 நாவலில் (பக். 185-186) காட்டப்படுகிறது.

தனித்தனியாகச் செயற்படுவதை விடவும், சங்கம் அமைத்து, ஒரு அமைப்பின் கீழ் இயக்கமாகப் போராட வேண்டும் என்ற சிந்தனை இப்படைப்பாளர்களால் மீண்டும் மீண்டும் முன்வைக்கப்படுகிறது. இதனை 'நாம எல்லோரும் அங்கங்கே உருவிப்போட்ட குச்சிங்க போல இருந்தா உருப்படி யாச் செயல்பட முடியாது' (**ஆண்களோடு பெண்களும்** பக். 116) என்று வரும் கூற்று வலியுறுத்தும். எல்லைகளின் விளிம்பில்,

ஆண்களோடு பெண்களும், மண்ணகத்துப் பூந்துளிகள், சக்தி 81, களம், கறுப்புக் குதிரைச் சதுக்கம் செந்திரு ஆகிவிட்டாள், மாதிரிக்கு ஒரு மாதவி ஆகிய படைப்புக்களில் சங்கம் அமைத்துப் போராடுதல், ஆக்கப் பணிகள் செய்தல் ஆகியன விரிவாகக் காட்டப்பட்டுள்ளன.

**பெண்கள் நிலை பற்றிய ஆய்வு மேற்கொள்ளல்**

சமூக அமைப்பிலும் குடும்ப நிறுவனத்திலும் பெண்கள் நிலை, அவர்களின் பணிச்சுமை, சம உரிமை பெறும் சாத்தியம் ஆகியன பற்றிச் சமூகவியல் நோக்கில் கள ஆய்வு செய்யும் ஆய்வுத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ள அபு பற்றிச் சுழலில் மிதக்கும் தீபங்கள் நாவலில் வருகிறது (பக். 41-42) அந்த ஆய்வாளன், கதைத் தலைவி கிரிஜாவிடம் ஒரு வினா நிரலைத் தந்து அதனை நிரப்பித்தரச் சொல்லுகிறான். இத்தகைய ஆய்வுத்திட்டம், கருத்துக் கணிப்பு போன்றவை அறிவுத்தள அமைப்பில் மாற்றங்களை உருவாக்கவும் சமூகவியல் ஆய்வு களுக்கும் உதவும்.

**சங்கம் அமைத்தல்—ஆக்கபூர்வமான பணிகள் ஆற்றல்**

பெண்ணுரிமைச் சங்கம் அமைத்து அதன் மூலம் நலிவுற்ற, துன்பப்படுகிற பெண்களுக்கு ஆக்கபூர்வமாக உதவுவதுபற்றியும் இந்த நாவல்களில் குறிப்பிடப்படுகின்றன. அரசின் உதவித் திட்டங்கள் பெண்களுக்குக் கிடைக்க இவ்வமைப்புக்கள் உதவு கின்றன. சங்கத்தில் இணைந்து பணிபுரிய பெண்கள் மட்டுமின்றி, ஆண்களும் உதவுகின்றதாகவும் ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக வீட்டிலும் சங்கத்திலும் பணிபுரிவதாகவும் நாவல் களில்காட்டப்பட்டுள்ளன. 'மண்ணகத்துப் பூந்துளிகள்' (பக்.226) நாவலிலும் 'களம்' (பக். 11-14), செந்திரு ஆகிவிட்டாள் (பக். 81-95), மாதிரிக்கு ஒரு மாதவி' (பக். 190) ஆகிய சிறுகதைகளிலும் 'ஆண்களோடு பெண்களும்' (பக். 141-142) நாவலிலும் இத்தகைய அமைப்புக்கள் பற்றியும் அவற்றின் ஆக்கபூர்வமான பணிகள் பற்றியும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன. ''இந்த ஊருல இவருதான் (பாண்டித் தேவர்') இதுமாதிரி எல்லாம் பெண் பிள்ளைகளுக்கு விடிவுகாலமும் வாழ்க்கை நம்பிக்கையும் வரணும்னு முனைஞ்சு சங்கம் கொண்டு வர நிப்பவரு'' என்று சங்கம் உருவாகிடத் துணைநிற்கும் மனிதர் பற்றியும் (**மண்ணகத்துப் பூந்துளிகள்**, பக். 226) ''நாம் போராடுவோம், எனக்கு நம்பிக்கை இருக்கு'' (**களம்**,

பக். 14) என்று கணவன் துணையாக நிற்பதையும் இந்த நாவல்கள் காட்டுகின்றன. இச்சங்கங்கள் 'படிக்க வசதி' பிழைக்கத் தொழில்வசதி என்பவற்றைச் செய்வதுடன் அடிப் படை உரிமைகள் பெறப் போராடவும் துணைநிற்கின்றன. 'அரசின் பொருளாதாரத் திட்டங்களைக் கிராமப்புறங்களுக்கு எல்லாம் கொண்டுவரணும்னு (சங்கம்—மகளிர் அமைப்பு) செயல்படுகிறது' (**ஆண்களோடு பெண்களும்**, பக். 142). மறுமலர்ச்சி ஏற்படவும் உழைப்பதால் தன்னம்பிக்கை கொள்ள வும், சுயபலம்பெறவும், தனித்தன்மையை உணரவும், ஆளுமை வளர்ச்சிக்கும் இவ்வமைப்புகள் உதவுகின்றன. அவற்றுடன் தமக் கென்று ஒரு வாழ்க்கை உள்ளது என உணர்ந்து வாழ்ந்திடவும் மனிதநேயத்துடன் பிறருக்கு உதவவும் தீமைகள்—அடக்கு முறைகள்—கண்டவிடத்து எதிர்த்துப் போராடவும் துணிவையும் வலுவையும் பெண்களுக்கு இச்சங்கம் ஏற்படுத்துகிறது என்பதாக இப்படைப்புக்கள் விளக்குகின்றன.

## முடிவுரை

அடிப்படை உரிமைகளைப் பெறவும் தளைகளிலிருந்து விடுதலைபெறவும் சமஉரிமைகள் பெற்றிடவும் காலங்காலமாகத் தமக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளை எதிர்த்துப் போராடவும் பெண்களுக்கு விழிப்புணர்வையும் துணிவையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்துவதாக இந்த நாவல்கள்— கதைகள் அமைந்துள்ளன. குடும்பநிறுவனம், சமூக அமைப்பு இரண்டிலும் பெண்ணுரிமை இலக்கை நோக்கிய செயற்பாடு செல்வதை இந்தப் படைப்புக்கள் காட்டுகின்றன. பெண்களின் தனித்தன்மையைப் போற்றும் முறையில் இவை உள்ளன. நம்முடைய சமூக அமைப்பில் பெண்களின் தனித்துவத்தை ஏற்காதபோது, மதிக்காதபோது, சமத்துவத்தை ஒத்துக் கொள்ளாதபோது சிக்கல்கள் எழுவதையும் பெண்கள் அவற்றை எதிர்த்துப் போராடுவதையும் இப்படைப்புக்கள் தீவிர மாகவும் ஆக்கபூர்வமான முறையிலும் சித்திரிக்கின்றன. மக்கள் தொடர்புச் சாதனங்கள் அனைத்திலும் பெண்களை வெறும் இன்பநுகர்வுப் பிம்பங்களாகக் காட்டி, இழிவுபடுத்தலைப் பெண்கள் எதிர்ப்பதாக—போராடுவதாக—இப்படைப்புக்கள் காட்டுகின்றன.

மரபு வழியாக, காலங்காலமாக நடைமுறையில் இருந்து வரும் சமயச் சடங்குகள், பண்பாட்டு நடைமுறைகள் ஆகிய

வற்றில் காணப்படும் பெண்களை இழிவுபடுத்தி, சார்புநிலையில் வைத்திருக்கும் போக்கை வன்மையாக எதிர்ப்பதை இப் படைப்புக்கள் முழுவீச்சுடன் இக்காலக்கட்டத்தில் காட்டு கின்றன. குடும்ப, சமூக அமைப்புக்களில் பெண் கல்விகற்றுப் பணிபுரிந்து, பொருளுற்பத்தியில் ஈடுபட்டு வருவதன் விளை வாகப் பங்குநிலை, கடமையாற்றல் குறித்த மறுமதிப்பீடுகள் ஏற்பட்டுள்ளதை இப்படைப்புக்கள் வலுவுடன் காட்டுகின்றன. பெண்ணுரிமை போற்றும் பிம்பங்களைக் காட்டுவதுடன், பெண் விடுதலை-உரிமை பெறும் செயல்முறைத் திட்டங்களை விரிவாக வும் நடைமுறைக்கு ஏற்பவும் படைப்பாளர்கள் காட்டியுள்ளனர். கல்வியறிவு பெற்றவர்களிடம் மட்டுமின்றி, கல்லாத மக்களிட மும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆற்றல்மிக்க செயற்பாடுகளை இப்படைப்புக்கள் காட்டுகின்றன. அமைப்புக்களின் கீழ் இணைந்து செயற்பட வேண்டியதன் தேவையைச் சமூகவியல், வரலாற்று நோக்குடன் காட்டுவதும், தன்னம்பிக்கை விழிப் புணர்வு, போராடும் உரம் ஆகியவற்றை ஏற்படுத்துவதும் இப்படைப்புக்களின் தனித்தன்மைகளாகும். ஆண்களும் பெண் களுமாக இணைந்து போராடிச் சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று இப்படைப்புக்கள் காட்டுகின்றன. பெண் உரிமை என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டு காட்டுவதும் சோசலிசப் பெண்ணிய நோக்கிலான செயற்பாடும் இக்காலப் புனைகதைகளின் தனித்தன்மைகளாகும். பெண்ணியச் சிந்தனை களை—கருத்தாக்கங்களை—வெளியிட ஏற்ற பெண்ணிய மொழி உருவாக்கப்படவேண்டும் என்னும் இலக்கை நோக்கிய செயற் பாடுகளையும் இப்படைப்புக்கள் காட்டுகின்றன.

# ஆய்வு முடிவுகள்

எண்பதுகளில் வெளியான தமிழ்ப்புனைகதைகள் பெண்ணியச் சிந்தனைகளை மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும் தீவிரமான போக்குடனும் படைத்துள்ளன. பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்களையும் கருத்து நிலைகளையும் இப்படைப் பாளர்கள் விமர்சன நடப்பியல்நெறியில் காட்டியுள்ளனர். அவர்களின் நிலைப்பாடு சோசலிசப் பெண்ணியமாக உள்ளது. ‘பெண்ணியல்பு’ என்று கூறும் பண்புகள் முழுக்க முழுக்க செயற்கையானவை; அப்படிப்பட்ட இயல்புகள் ஆண்களால், பெண்ணைத் தனக்கு அடிமைப்படுத்த உருவாக்கப்பட்டவை என அறிகிறோம். பெண்ணடிமை ஒட்டு மொத்தமாக மனிதவள மேம்பாட்டிற்கும் ஆற்றல் வெளிப்பாட்டிற்கும் தடையாக இருப்பதால் ஊறுவிளைக்கும் அத்தடைக்கல்லை அகற்ற வேண்டும் என்ற முயற்சி இப்புனைகதையாளர்களிடம் வெளிப் படுகிறது.

மணவாழ்வு, குடும்பம், கற்பு நிலை என்பவைகளைக்கூறி, ஆண்மகன் பெண்ணைத் தனக்கு அடிமைப்படுத்தவும் அவளைத் தன் இன்பநுகர்வுப் பொருளாக—உடைமைப் பொருளாக— வைத்திருக்கவும் முயன்று, பாலுறவு நிலையில் பெண்ணின் மீது செயற்கைப் பண்புகளைத் திணித்து அவளை அடக்கியாளவும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தவும் செய்கிறான். எனவே, இதைப் புரிந்துகொண்டு, பெண் விடுதலைபெற வேண்டும். பெண்ணின் வளர்ச்சிக்கும் ஆற்றல் வெளிப்பாட்டிற்கும் தடையாக அமையும் சட்டங்களை, மரபுகளை மாற்றவேண்டும். பெண்ணுக்கு ஆணைப்போலவே கல்வி அடிப்படைத்தேவை எனவும் ஆளுமை வளர்ச்சிக்கும் உலகைப் புரிந்து கொள்ளவும் கல்வி வேண்டும் என்றும் இப்படைப்புக்களில் காட்டப்படுகின்றன.

மணமாகிறவரை கல்வி, கணவனின் விருப்பப்படி அலுவல் புரிவது, கணவன் என்ற மேலாண்மையை ஏற்று அவன் விரும் பினால் அதுவரை பொருளீட்டுவது என்ற போக்குகளை

இப்படைப்பாளர்கள் தீவிரமாக எதிர்க்கின்றனர். படிப்பதும் அலுவல் பார்ப்பதும் பொருளீட்டுவதும் என்று வந்த பின்னர், அதற்கு ஏற்பக் குடும்ப மரபுகள் மாறவும், வீட்டின் பணிப் பங்கீடு ஆண்—பெண் இணைந்து செய்வதாகவும் இருக்க வேண்டும் என்று காட்டுகின்றனர். கல்வி கற்பதும் பணிபுரிவதும் பொருளீட்டுவதும் என்று ஆனபின்னும் கூட வரதட்சணை—சீர் என்ற தளைகள் நீங்கவில்லை என்பதையும், முன்னைவிட அவை மிக ஆழமாகக் கிராமப்புற மக்களிடையிலும் பின்தங்கிய பிரிவினரிடையிலும் பரவியுள்ளதையும் அத் தளைகள் காரண மான அச்சம் பெண் குழந்தை பிறந்தவுடன் அதைக் கொன்று விடும் கொடிய பழக்கத்திற்கு இட்டுச் சென்று உள்ளதையும் இப்படைப்புக்கள் காட்டுகின்றன. வரதட்சணைக்கு எதிராக, பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராக, மணவாழ்வே வேண்டாம் எனப் பெண்களும் ஆண்களும் தனித்து வாழும் வாழ்க்கை மிகுதியாகிப் பிறகு சமூகமாற்றம், ஆணின் மனமாற்றம் வரக் கூடும் என்ற அளவிற்கு இப்படைப்பாளர்களின் சிந்தனை சென்றுள்ளது.

மத்தியதர, உயர்மத்தியதர வர்க்கம் சார்ந்த, கல்விகற்று அலுவல் பார்த்துப் பொருளீட்டும் பெண்கள் (மணம் காரணமாக அலுவலை விட்டுவிட்டவர்கள்) இப்புனைகதைகளில் இடம் பெறுகின்றனர். கிராமங்களில் உள்ள உழைப்பை மையமிட்ட பெண்கள் ஒருசில படைப்புக்களில் மட்டும் சித்திரிக்கப் படுகின்றனர். பெண்களின் சிக்கல்களைப் புரிந்துகொண்டு, சரிநிகர் சமானமாக நடத்தும் கணவன்மார்கள், சிக்கல்களுக்கு உதவும் நண்பர்கள், ஆதரவாக இருக்கும் தந்தை என்று சமூக மாற்றத்திற்கு—பெண் விடுதலைக்கு—தோள்கொடுக்கும் ஆண் களையும் இப்புனைகதைகள் காட்டுகின்றன. ஆண்களும் பெண் களும் இணைந்து சமூக மாற்றத்திற்குப் போராடவேண்டும் என்ற சிந்தனை இங்கு முன் வைக்கப்படுகிறது.

பெண்ணை அடிமைப்படுத்தி, இரண்டாந்தரக் குடியுரிமை யுடையவளாக நடத்தும் நிலை அவளுடைய தனித்தன்மையை ஏற்காத நிலை, பெண்ணைச் சமமாக நடத்தாதபோக்கு, தன் உடைமைப் பொருளாகவும் இன்பநுகர்வுப் பொருளாகவும் பார்க்கும் ஆணின் மனப்போக்கு முதலியன காரணங்களாக அமைய, குடும்பச்சிதைவு நிகழ்வதை இப்புனைகதைகள் காட்டுகின்றன. வீட்டைவிட்டு வெளியேறி, தனித்து இருந்து அலுவல்பார்த்துப் பொருளீட்டி வாழும் துணிவும் உறுதியுமிக்க

வர்களாகப் பெண்கள் படைக்கப்பட்டுள்ளனர். ஆணாதிக்கப் போக்கு மிக்க குடும்ப நிறுவன அமைப்பை மாற்றப் போராட வேண்டும் என்ற துணிவும் அதைப் பிற பெண்களுக்கு எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொறுப்பும் தமக் குரியதாக இப்பெண்கள் உணர்ந்து வாழ்கின்றனர். பொறுப்பு மிக்க தாய் குடும்பச்சிதைவினால், வெளியில் வந்து தனித்து வாழும்நிலையிலும், தன்னுடைய பெண் குழந்தைகளைப் பொறுப்பும் துணிவுமிக்க பிரஜைகளாக, ஆணாதிக்கச் சமூக அமைப்பை எதிர்த்து நிற்கும் துணிவுள்ள பெண்களாக வளர்க்க வேண்டியத் தம் பொறுப்பை உணர்ந்தவர்களாக உள்ளனர்; தன்மானமும் துணிவும் கொண்டு ஆளுமையைச் சிதையவிடாது வாழ்கின்றனர்.

காலமாற்றத்திற்கு ஏற்பக் கற்புக்கோட்பாட்டில் மறு பரிசீலனை வேண்டும் என்ற சிந்தனை முன்வைக்கப்படுகிறது. வன்முறைக்கு ஆளான பெண்ணைப் பழைய கற்புக் கோட் பாட்டில் சிதைவுறச்செய்யாமல், அதை விபத்தாகக் கருதி அதிலிருந்து மீண்டு வெளிவர உதவும் சிந்தனையை முன்வைக் கிறது. முறையான மணவிலக்குப் பெற்று வாழும் பெண், தான் விரும்பி மறுமணம் புரிந்து வாழ்வதையும் தனித்து வாழ் வதையும் இப்படைப்புகள் காட்டுகின்றன. மணவிலக்கு நடை பெறும் நீதிமன்றம் குடும்ப நீதிமன்றமாக இருக்கும் செயற் பாடும் ஆக்கபூர்வமானதாக விளக்கப்படுகிறது. கணவனின் ஆதிக்கப்போக்கு, பெண்ணை அடிமைப்படுத்தும் பாங்கு இவை காரணமாகப் பிரிந்து தனித்து வாழும் பெண்ணை வாழாவெட்டி என்று கூறுதல் கூடாது என்ற அளவிற்குப் புனைகதைகள் சிந்திப்பது வரவேற்பிற்குரியதாகும். ஆண்களால் ஆக்கப்பட்ட மொழியில் இத்தகு பெண்ணடிமைச் சொற்கள் உள்ளன என்பதையும் மாற்றாகப் பெண்ணியமொழி உருவாக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையும் முன்வைக்கப்படுகின்றன.

பெண்ணுரிமை போற்றும் பெண் பிம்பங்களை, மரபுவழிப் பங்குநிலை, கடமை குறித்த மறு மதிப்பீடு உடையவர்களை இப்படைப்புக்கள் காட்டுகின்றன. அத்துடன், ஆண்களும் இதனைச் சரியாகப் புரிந்துகொண்டு, வீட்டுக் கடமைகளைப் பகிர்ந்து செய்பவர்களாகப் படைக்கப்பட்டுள்ள பாங்குச் சிறப் பாகக் குறிக்கத் தக்கதாகும். தனித்தன்மை உடையவர்களாகவும் தம் தனித்தன்மையை உணர்ந்து, அதை வளர்க்க ஒத்துழைக் காத ஆண்களை எதிர்த்து நிற்பவர்களாகவும் படைக்கப் பட்டுள்ளனர். குடும்பம், சமூக அமைப்புக்களில் சமத்துவம்

வேண்டிப் போராடும் பெண்களை இப்புனைகதைகள் மிகுதியாகக் காட்டுகின்றன. பத்திரிக்கை, திரைப்படம் சுவரொட்டி போன்ற சாதனங்களில் பெண்களை இழிவு படுத்தும் போக்கை எதிர்ப்பவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

சமயஞ்சார்ந்த சடங்குகள், பண்பாட்டு நடைமுறைகளில் நிலவும் பெண்ணடிமைத்தனத்தையும் இழிவுபடுத்தலையும் முற்றாக எதிர்க்கும் போக்கும் காணப்படுகிறது. சமயநிறுவன மான மடங்களிலும் இந்துசமய ஆசாரியரான சங்கராச்சாரியார் முன்பும் அவரது நிறுவனமான மடத்தின் செயற்பாடுகளிலும் பின்பற்றப்படும் ஆணாதிக்கப் போக்குகளையும் பெண்களை அடிமைப்படுத்தி, இழிவுபடுத்தும்போக்கையும் எதிர்க்கும் புனை கதைகள் முன்னெப்போதையும் விட எண்பதுகளில் புதிய போக்காகத் தீவிரமாகக் காட்டப்பட்டுள்ளன. பெண்ணுரிமைக் கான நடைமுறை வழிகள் செயற்பாட்டு நோக்கில் ஆக்க பூர்வமாக இப்புனைகதைகளில், பல்வேறு நிலைகளில் விளக்கப் பட்டுள்ளன. கல்விகற்ற நடுத்தர, மேல்மட்ட மக்களிடம், மட்டுமின்றி, அடிமட்டத்தில் உள்ள கிராமப்புற உழைக்கும் மக்கள்வரையிலும் பெண்ணுரிமைக்கான விழிப்புணர்வு பரவ வேண்டும். அதற்கான, ஆக்க பூர்வமான செயற்பாடுகளை இப்புனைகதைகள் காட்டுகின்றன. எண்பதுகளில் வெளியாகி யுள்ள தமிழ்ப்புனைகதைகள் படிக்கும் வாசகர்களுக்குத் தீவிர மான விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், சமூக ஆவணங்களாக விளங்கும் வண்ணம் சமகாலச் சமூக வாழ்வை, பெண்ணியச் சிந்தனைகளை—வெளியிடுவதிலும் வெற்றி பெற்றுள்ளன.

## நூற் பட்டியல்

### I. நாவல்கள்

1. இந்திரா பார்த்தசாரதி : **வெந்து தணிந்த காடுகள்**, 1989, இரண்டாம் பதிப்பு, (1981, முதற் பதிப்பு). சென்னை, தமிழ்ப்புத்தகாலயம்.

2. இந்துமதி : **சக்தி 81**, 1990, இரண்டாம் பதிப்பு (1981, முதற்பதிப்பு) சென்னை, பூஞ்சோலைப் பதிப்பகம்.

3. ,, : **பைசா நகரத்துக் கோபுரங்கள்**, 1990, இரண்டாம் பதிப்பு (1982, முதற் பதிப்பு), சென்னை, திருமகள் நிலையம்.

4. சிவசங்கரி : **பாலங்கள்**, 1983, சென்னை வானதி பதிப்பகம்.

5. பிரபஞ்சன் : சந்தியா

6. ராஜம் கிருஷ்ணன் : **ஓசைகள் அடங்கிய பிறகு**, 1989, முதற்பதிப்பு சென்னை, பாரிபுத்தகப் பண்ணை.

7. ,, : **மானுடத்தின் மகரந்தங்கள்**, 1984, முதற்பதிப்பு, சென்னை, பாரிப்புத்தகப் பண்ணை.

8. ,, : **சேற்றில் மனிதர்கள்**, 1982, முதற் பதிப்பு, பாரிபுத்தகப் பண்ணை.

9. ,, : **புதிய சிறகுகள்**, 1985, முதற்பதிப்பு, சென்னை, பாரிபுத்தகப் பண்ணை.

10. ,, : **சுழலில் மிதக்கும் தீபங்கள்**, 1987, முதற்பதிப்பு, சென்னை, தாகம்.

11. ,, : **ஆண்களோடு பெண்களும்**, 1988, முதற்பதிப்பு, சென்னை, தாகம்.

12. ராஜம் கிருஷ்ணன் : **மண்ணகத்துப் பூந்துளிகள்**, 1988, முதற்பதிப்பு, சென்னை, தாகம்.

13. ,, : **ஊமை அரண்கள்**, 1989, முதற் பதிப்பு, சென்னை, தாகம்.

14. லக்ஷ்மி : **இருளில் தொலைந்த உண்மை**, 1984, முதற்பதிப்பு சென்னை, பூங்கொடி பதிப்பகம்.

15. லக்ஷ்மிகண்ணன் (காவேரி) : **ஆத்துக்குப் போகணும்**, 1989, இரண்டாம் பதிப்பு (1986, முதற் பதிப்பு), பெங்களூர், காவ்யா.

16. வாஸந்தி : **சுருதிபேதங்கள்**, 1981, முதற்பதிப்பு, சென்னை, கலைஞன் பதிப்பகம்.

17. ,, : **மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள்**, 1982, முதற்பதிப்பு, சென்னை, வானதிபதிப்பகம்.

18. ,, : **ஒரு சங்கமத்தைத்தேடி**, 1983, முதற் பதிப்பு, சென்னை, அருணோதயம்.

19. ,, : **எல்லைகளின் விளிம்பில்**, 1986, முதற்பதிப்பு, சென்னை, கங்கை புத்தக நிலையம்.

20. ,, : **திறக்காத ஜன்னல்கள்**, 1987, முதற் பதிப்பு, சென்னை, கங்கை புத்தக நிலையம்.

21. ஜெயகாந்தன் : **சுந்தரகாண்டம்**, 1982, முதற்பதிப்பு, மதுரை, மீனாட்சி புத்தக நிலையம்.

22. ஜோதிர்லதா கிரிஜா : **மன்மதனைத்தேடி**, 1982, முதற் பதிப்பு, சென்னை, இந்திரா பதிப்பகம்.

## II. சிறுகதைகள்

1. அம்பை : **வீட்டின் மூலையில் ஒரு சமையலறை**, 1988, முதற்பதிப்பு, சென்னை, க்ரியா.

2. கீதா பென்னட் : **ஆதாரசுருதி**, 1989, முதற்பதிப்பு, நாகப்பட்டினம், இமயப்பதிப்பகம்.

3. சுசிலா, எம்.ஏ., : **பருவங்கள்மாறும்**, 1985, முதற் பதிப்பு, சென்னை, நர்மதா பதிப்பகம்.

4. சூடாமணி, ஆர். : **அம்மா**, 1987, முதற்பதிப்பு, சென்னை, நர்மதா பதிப்பகம்.

5. தமயந்தி : **தமயந்தியின் சிறுகதைகள்**, 1989, முதற்பதிப்பு, சென்னை, ஞானச் சேரி.

6. திலகவதி : **அரசிகள் அழுவதில்லை**, 1988, முதற் பதிப்பு, சென்னை, நர்மதா பதிப் பகம்.

7. பிரபஞ்சன் : **ஒரு மனுஷி**, 1989, முதற்பதிப்பு, சென்னை, பூஞ்சோலைப் பதிப்பகம்.

8. ராஜம்கிருஷ்ணன் : **களம்**, 1985, முதற்பதிப்பு, சென்னை, பாரி புத்தகப் பண்ணை.

9. லக்ஷ்மிகண்ணன் : **ஓசைகள்**, 1984, முதற்பதிப்பு, பெங் களூர், காவ்யா.

10. வாஸந்தி : **பயணம்**, 1989, முதற்பதிப்பு, சென்னை, நர்மதா பதிப்பகம்.

III. **பிற நூல்கள்**

1. எங்கல்ஸ் : **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகிய வற்றின் தோற்றம்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ. (ஆண்டு இல்லை), மூன்றாம் பதிப்பு.

2. தேவதத்தா, கமலி, தி : **பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேடு**, 1992, முதற்பதிப்பு, சென்னை, அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்.

3. நடராஜன், அ.ச. : **இந்தியத் தண்டனைச் சட்டம்**, 1984, சென்னை, பாலாஜி பப்ளிகேஷன்ஸ்.

4. பாக்கியமுத்து, தி. (ப.ஆ.) : **இலக்கியத்தில் பெண்கள்**, 1977, சென்னை, கிறித்தவ இலக்கியச் சங்கம்.

5. ,, : **பெண்கள் படைப்பில் பெண்கள்**, 1986, கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்.

6. பாக்கியமுத்து, தி. (ப.ஆ.) : **மார்க்சியமும் பெண்நிலைவாதமும்,** 1988, சென்னை, பொன்னி வெளியீடு.

7. Ghosh, S.K. : **Woma in a Changing Society,** 1984, New Delhi, Ashish Publishing House.

8. Kapur Promilla, : **Marriage and the Working Women in** India, 1984, Reprint, Delhi, Vikas.

9. Lakshmi, C.S. : **The Face behind the Mask** (Women in Tamil Literature) 1984, New Delhi, Vikas.

10. Loganayaki Nannithamby, : **Women in Modern Tamil Literature,** (1880-1960), 1969, Kualalumpur, University of Malaya.


## IV. கட்டுரை


1. வேங்கடராமன், சு.: "பெண்ணியநோக்கில் அம்பையின் சிறுகதைகள்", **மேலும்**, (பக். 53-57), காலாண்டு, இதழ், 1990, நவம்பர், பாளையங்கோட்டை,


## V. அச்சிடப்பெறாத ஆய்வேடு:


1: சுசிலா எம்.ஏ. : **காலப்போக்கில் தமிழ்ச்சமுகப் புதினங் களில் பெண்மைச்சித்திரிப்பு.** 1989 மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பி.எச்.டி. பட்ட ஆய்வேடு.


—●—

# சிறப்புச் சொல்லகராதி


அலுவல் மகளிரும் கற்பும் 53
ஆக்கப் பூர்வமான விழிப் புணர்வு 77
ஆணாதிக்க உணர்வு 30
ஆணாதிக்கச் சமுதாயம் 7
ஆணாதிக்கச் சமூக அமைப்பு 12,27,30,39,41,46,50, 66
ஆணாதிக்கச் சமூகப் பார்வை 82
ஆணின் மாற்றம் 100
ஆதிக்கப் போக்கு 26,33,36, 94
ஆதிக்க முனைப்பு 29
ஆளுமைச் சிதைவு 3,10,11 19-20,23 52,37,41,43, 44,45
இந்திய விடுதலைப் போராட் டம் 95
இரண்டாந்தரக்குடி மகள் 65,66
இரண்டாந்தரக் குடியுரிமை 21,30,35
இழிவு படுத்தலை எதிர்த்தல் 74
உடைமைப் பொருள் 22,23, 28,29,33,36,50,59,76
உடைமை மனநிலை 9,13,23, 27,40,41,44,68
உடைமை மனோபாவம் 7,45
உழைக்கும் பெண்கள் நிலை யும் கற்பும் 51
ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்துதல் 95
எங்கல்ஸ் 42
எதிர்ப்புணர்வு 9
எழுத்துச் சந்தை வணிகர் 2
எழுத்து மூலமாகக் கருத்துக் களைப் பரப்புதல் 92
கடமை குறித்த மறு மதிப்பீடு 101
கற்புக்குப் பழி நேரல் 43
கற்பு நெறி குறித்த ஆணின் எதிர்பார்ப்பு 59
குடும்ப உருவாக்கம் 5
குடும்ப, சமூக அமைப்புக்களில் சமத்துவம் போற்றல் 71
குடும்ப நிறுவன அமைப்பு 101
குழந்தைப் பேறு 3,12,22, 63,
கூத்து நடத்திக் கருத்துப் பரப்புதல் 94
சங்கம் அமைத்தல் ஆக்கப் பூர்வமான பணிகள் ஆற்றல் 96
சமய, பண்பாட்டு நடைமுறை களில் சமமின்மையை எதிர்த்தல் 77
சமூகவியல் வரலாற்றுக் கண்ணோட்டம் 52,64
சமூக ஆவணங்கள் 102
சமூக உளவியல் 75
சமூகத் தகுதி 27,79
சமூக மாற்றம் 54,100
சார்பு நிலை 14,21,79,89
சிதைவின் விளைவுகள் 25,37
சுய சிந்தனை மிக்க தனித்து வம் 74
சோசலிசப் பெண்ணிய நோக் கிலான செயற்பாடு 98
சோஷலிசப் பெண்ணிய நிலைப்பாடு 2
தனிக் குடும்பச்சிதைவு 26-27, 41
தனித்தமுகம் 88
தனித்தன்மை போற்றல் 67
தொடக்க காலத் தமிழ்ப் புனைகதை 1,5
நடப்பியல் நெறி 59
நிஜநாடகம் 94
பக்தி இயக்கம் 95
பணிப் பங்கீடு-மரபு வழியான பங்கு நிலை 85

பழையகாலக் கற்புக்கோட்
பாடு 30
பாலுறவு வன்முறை 29,43,
46,47,48,51, 76, 91
பின்விளைவு 9
பின்னடைவு 11
பெண் எதிர்கொள்ளல் 30,39
பெண்கள்நிலை பற்றிய ஆய்வு
மேற்கொள்ளல் 96
பெண்ணிய இலக்கியக் கோட்
பாடுகள் 23,25,74
பெண்ணியக் கருத்தாக்கம் 86
பெண்ணிய மொழி 91,98,
101
பெண்ணியல்பு 99
பெண்ணின் இலக்கியத்
திறனாய்வுக்கோட்பாடு 81
பெண்ணின் தனித்துவம்31,36
பெண்ணின் திருமணத் தகுதி
48
பெண்ணின் பிறந்த வீட்டுத்
தொடர்பு துண்டிப்பு 13
பெண்ணின் விருப்பம் மதிக்கப்
படாமை 3,6
பெண்ணுரிமை இயக்கம் 66,
67,77
பெண்ணுரிமைச் சங்கம் 96
பெண்ணுரிமைச் செயற்
பாட்டிற்கான வழிகள் 91
பெண் விடுதலை 5,86,92
பொதுக் கூட்டம் நடத்திக்
கருத்துப் பரப்புதல் 93
மணத்திற்குப் பின் 22,46,48
மணத்திற்கு முன் 6,27,46
47,52
மண வாழ்வு—பெண்ணுக்கு
ஏற்படும் சிக்கல்கள் 12
மண விலக்கிற்கான காரணங்
கள் 17
மண விலக்கு 3,15,16,17,18,
19,20,23,24,32,33,34,
37,40,41,46,58
மண விலக்கைப் பெண்ணைச்
சார்ந்தோர் எதிர்கொள்ளல்
21
மதிப்பு மாற்றம் 51
மரபுக் கண்ணோட்ட மதிப்பீடு
85
மரபுச் சிந்தனையின் மறுமதிப்
பீடு 84
மரபு சார்ந்த கண்ணோட்டம்
48
மரபு சார்ந்த மதிப்புகள் 50
மரபுவழிப் பங்குநிலை 101
மரபுவழிப் பங்கு நிலை கடமை
குறித்த மறு மதிப்பீடு 81
மரபுவழிப்பட்ட சிந்தனை
யளார் 19
மரபுவழிப்பார்வை பற்றிய
மதிப்பீடு 85
மனைவி என்ற பங்குநிலை
68,69
முதன்மை மனநிலை 71
மூட நம்பிக்கை சார்ந்த மரபு
வழிச் சிந்தனை 79
மையக் குவியலான அதிகாரம்
41
லட்சுமணக் கோடுகள் 84
விமர்சன நடப்பியல் பாங்கு
65
விளைவைப் பெண் எதிர்
கொள்ளல் 19

*
**

## நிறுவன அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகள்

| | |
|---|---|
| இஸ்லாம் வளர்த்த தமிழ் | 15 00 |
| தமிழரின் தாயகம் | 10 00 |
| உ.வே.சா.சங்க இலக்கியப் பதிப்புகள் | 10 00 |
| இனிக்கும் இராசநாயகம் | 50 00 |
| பாவாணரும் தனித்தமிழும் | 12 00 |
| தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள் | 10 00 |
| உ.வே.சா. காப்பியப் பதிப்புகள் | 10 00 |
| விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் | 20 00 |
| அகலமும் ஆழமும் | 12 00 |
| செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் | 15 00 |
| உ.வே.சா. இலக்கணப் பதிப்புகள் | 12 00 |
| மகாமதிப்பாவலர் | 11 00 |
| உலக முதன்மொழி தமிழ் | 12 00 |
| மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை | 15 00 |
| தமிழ் தந்த வ.உ.சி | 15 00 |
| உ.வே.சா ஒரு தமிழ் வாழ்வு | 15 00 |
| வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்புநாயகம் | 15 00 |
| மு.வ.புதினங்களில் தமிழ்—தமிழினம் | 20 00 |
| பாவாணர் ஆய்வு நெறி | 22 00 |
| கிறித்தவமும் தமிழகமும் | 15 00 |
| நாமக்கல் கவிஞர் கவிதைகள்—தேசியம், காந்தியம் | 16 00 |
| தமிழில் அறிவியல்—அன்றும் இன்றும் | 25 00 |
| இதழாளர் ஆதித்தனார் | 26 00 |
| காந்தியப் பெருந்தலைவர் காமராசர் | 20 00 |
| மலையாளக் கவிதை | 15 00 |
| நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் | 18 00 |
| நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை | 14 00 |
| தொல்காப்பியப் பதிப்புகள் | 27 00 |
| தமிழும் பிராகிருதமும் | 12 00 |
| இலக்கியச் சிந்தனையாளர் டி.என். சேஷாசலம் | 12 00 |
| அறிவியல் தமிழ்—இன்றைய நிலை | 12 00 |
| எட்டாந் திருமுறை | 23 00 |
| தொல்காப்பியச் சிந்தனைகள் | 18 00 |
| தமிழும் குறியியலும் | 17 00 |
| அழகியல் | 10 00 |
| கம்பன் எழுத்தச்சன் இராமாயணங்கள் | 25 00 |